சித்தாமூர் வரலாறு



ஏ.ஏகாம்பரநாதன்

ஜினகஞ்சிமடம் வெளியீடு எண் : 1

சித்தாமூர் வரலாறு

டாக்டர். ஏ. ஏகாம்பரநாதன்
எம்.ஏ. (தொல்லியல்), எம்.ஏ (வரலாறு), பி.எச்.டி.
தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-5.

ஜினகஞ்சி மடம்
மேல்சித்தாமூர்
தமிழ்நாடு
604206

விலை. ரூ. 10-00

Bibliographical data

1.	Title of the Book	—	Sithamoor Varalaaru
2.	Author	—	A. Ekambaranathan
3.	Language	—	Tamil
4.	Edition	—	First
5.	Date of publication	—	3-4-1985
6.	Copy right holder	—	Jinakanchi mutt, Melsithamoor,
7.	Paper used	—	White Printing
8.	Size of the Book	—	Demmy size, $14\frac{1}{4} \times 21\frac{1}{4}$ cm
9.	Printer	—	S. Dhanyakumar Press Madras-17
10.	Subject	—	History-Epigraphy.
11.	Summary	—	A detailed history of Jain temples and Jainmutt at Melsithamoor with the help of epigraphical evidences.
12.	Price		Rs. **10-00**

ஜிநாய நம!

பதிப்புரை

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

ஆதியும் அந்தமுமில்லா இவ்வுலகம் மூன்றாக இயல்கிறது; கீழுலகம், நடுஉலகம், மேலுலகம், இதனைத் தேவர்,

**அருள் சேர்ந்த நெஞ்சினார்க்(கு) இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.
அருள் இல்லார்க்(கு) அவ்வுலகம் இல்லை; பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு," எனச் சுட்டுவர்.**

நரகர் வசிக்கும் கீழ் உலகத்தினை இன்னாவுலகம் என்றும், நாம் வசிக்கும் மண்ணுலகத்தினை இவ்வுலகம் என்றும், தேவர் வசிக்கும் மேலுகத்தினை அவ்வுலகம் என்றும் குறிப்பிடுகிறார். இம் மூவுலகத்தவர்களுக்கும் இறைவன் அருகப் பெருமான். இவரை சைனர்கள் தீர்த்தங்கரர் என்பர். இவர்கள் இருபத்து நால்வர் ஆவர். இவர்களுக்கெல்லாம் ஆதியான தீர்த்தங்கரர் ஆதிபகவன் ஆவார். இவரே மண்ணுலக-நடுஉலக-மக்களுக்கு எண்ணையும், எழுத்தையும் கற்பித்தவர்; வாழும் வகையினை அருளியவர். எனவே அவரைத் தேவர் மேற்காட்டிய குறள்வழி வழிபட்டு சிறப்பிக்கிறார். ஆதிபகவன் காட்டிய வழி-போதித்த-அறமே ஜைன அறம். இது வேத காலத்திற்கும் முற்பட்ட அறம். இந்த அறம் இந்தியா முழுவதும் பின் பற்றப்பட்டது, குறிப்பாக தென்னகத்தில் சிறப்பாக விளங்கிற்று.

வரலாற்று அறிஞர்களும் தொல்லியல் வல்லுநர்களும் பத்திரபாகு, சந்திரகுப்த மௌரியன் வருகையுடன் தென்னகப் பரவலை இணைத்துக்காட்டி கி.மு. மூன்றாம் நூற்றாண்டினைத் தொடக்க நிலையாகச் சுட்டுவர். இதனை அவர்கள் சான்றுகள் காட்டி நிறுவுவார்கள். தமிழகத்தில் சைனம் பரவிய நிலையினை விவரிக்கையில் விசாகாச்சாரியார் தலைமையில் ஏராளமான சைன முனிவர்கள் தமிழகம் வந்தனர் என்பர்.

சைன முனிவர்கள் மகாவிரதங்களைக் கடுமையாகக் கடை பிடித்து ஒழுகுபவர்கள். அவர்கள் உணவு கொள்ளும் முறை ஒப்புயர்வு அற்றது. தூய உணவினைத் தூய உணர்வோடு தூய சூழலில் கொடுக்கப்படும்போது மட்டுமே ஏற்பர். அத்தகையோர் பெரும் எண்ணிக்கையில் தமிழகம் போந்தனர் எனில் ஓர் உண்மை இங்கு வெளிப்படுகிறது. தாங்கள் செல்லும் பகுதியில் சைனர்கள் இல்லையெனில் அங்கு அவர்கள் செல்லத்

துணிவார்களா? இல்லறத்தார்களின் உதவியின்றி துறவறத்தார் தம் துறவினைச் சிறப்பாகக் கடைப்பிடிக்க முடியாது. எனவே விசாகாச்சாரியார் வருகைக்கு முன்னரே சைனநெறி வழி வாழ்க்கை நடத்தும் தமிழர்கள் இருந்திருக்க வேண்டுமென்பது வெள்ளிடைமலை. வரலாற்று ஆசிரியர்கள் காட்டும் கி.மு. மூன்றும் நூற்றாண்டில் அத்தகைய பெரும் எண்ணிக்கையிலான முனிவர்களை வரவேற்கும் அளவிற்கு எண்ணிக்கை, பண்பாடு, செல்வாக்கு மிகுந்த சைனர்கள் இருந்திருக்க வேண்டும். இத்தகைய நிலையை அடைய வேண்டுமெனில் தொடர்ந்து பல நூற்றாண்டுகளின் தொடர்ந்த வாழ்வும் வளமும் காரணமாக வேண்டும் என்பதை யாவரும் ஒப்புவர்.

இத்தகைய தொன்மை வாய்ந்த சைனம் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவி சிறப்புற்றிருந்த செய்திகளை ஆங்காங்கு காணப்படும் தொல்லியல் சின்னங்களும், கோயில்களும், குகைகளும், சிற்பங்களும் ஓலைச்சுவடிகளும் பறை சாற்றுகின்றன.

சைனர்களின் தமிழிலக்கிய, இலக்கணத்தொண்டுகள், சமூக-சமய சீர்த்திருத்தங்கள் தமிழர்களைப் பண்பில் சிறந்தவர்களாக—உறுதியான தன் நம்பிக்கை உள்ளவர்களாக செய்தன எனில் மிகையல்ல. திராவிட இன எழுச்சிக்கு தூண்டுகோலாகவும், வழிகாட்டியாகவும் சைனர்கள் இருந்திருக்கின்றனர். திராவிட சங்கம் போன்ற சங்கங்களை அமைத்து திராவிட நாகரிகத்தின் தூண்களாக சைன முனிவர்கள் விளங்கினர்.

இடையில் ஏற்பட்ட பல குழப்பங்களுக்கும் கொடுமைகளுக்கும், தங்கள் கொள்கைகளினால் ஏற்பட்ட இன்னல்களுக்கும் ஆளாகி அல்லல்பட்டனர் சைனர். தமிழ் நாடெங்கும் பரவியிருந்தவர்கள் இன்று எண்ணிக்கையில் சுருங்கி தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, தஞ்சை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் ஒதுங்கி, எளிய வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர். பல்வேறு கோணங்களிலும் தாக்குதலுக்கு உட்பட்டவர்கள் இன்னமும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை; தங்கள் வரலாற்றினையும் சரிவர அறியவில்லை.

தென் ஆர்க்காடு மாவட்டம் செஞ்சிக்கு அருகில் மேல் சித்தாமூர் எனுமிடத்திலுள்ள ஜினகஞ்சி ஜைனமடம் சைனர்களிடையே, கடந்த பல நூற்றாண்டுகளாக, சமய, சமூதாயப்பணி ஆற்றிவருகிறது. இங்குள்ள கோயில்கள் மிகப் பழமையானவை. கல்வெட்டுக்களுடன் பல நூற்றாண்டுகளாகச்

சிறப்புற்றுத் திகழும் இவ்வூர் பற்றிய முறையான வரலாறு ஏதும் இதுவரை எழுதப்படவில்லை. சைனமடம் இருந்தும் தெளிவான குறிப்புகளோ, மடாதிபதிகளின் வரிசை வரலாறோ கிடைக்கவில்லை

இவற்றைக் கருத்திற்கொண்டு இளம் ஆய்வாளர் **டாக்டர். ஏகாம்பர நாதன்** தாமாகவே முன்வந்து சித்தாமூர் பற்றிய வரலாற்றினை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் பயனாக **''சித்தாமூர் வரலாறு''** எனும் இந்நூல் வெளிவருகிறது. இந்நூலினை வரலாற்று அடிப்படையில் சான்றுகளுடன் எழுதியுள்ளார். அவர் **கல்வெட்டில் சமணம்** எனும் நூலினையும் சிறப்பாக எழுதியுள்ளார். கேட்காமல் அவர் செய்த இப்பேருதவிக்குத் **தமிழ் நாட்டு சைனர்கள் என்றும் கடமைப்பட்டவர்கள்.** சித்தாமூர் வரலாறு ஜினகஞ்சி மடத்தின் முதல் வெளியீடாக அமைகிறது. நாம் அவரை வாழ்த்தி, ஜினசாசன தேவதைகள் அருள்புரியுமாறு ஆசி அருளுகிறோம்.

சைன இல்லறத்தார் கடைப்பிடிக்க வேண்டிய தானங்கள் நான்காகும்; அபயதானம், ஔடத தானம், அன்னதானம், சாத்திர தானம். இந்நான்கினுள் சாத்திர தானம், பொருட்டு திருவாளர்கள் ச. **அஜித பிரசாத்** (துணைத்தாசில்தார், தஞ்சாவூர்) ச. **அப்பாண்டைராஜ் B.sc.** (முதுநிலை ஆய்வாளர், கூட்டுறவு தணிக்கைத் துறை, காஞ்சிபுரம்). ஆகியோர் தம் பூர்வ ஆசிரம குடும்ப நன்கொடையாக இந்நூலின் வெளியீட்டிற்குப் பொருளுதவி செய்துள்ளனர். இவர்களது பொருளுதவியுடன் மடத்தின் முதல் வெளியீடான ''**சித்தாமூர் வரலாறு**'' வெளிவருகிறது. இவர்களுக்கு நல்ல வளமும் நலமும் கிடைக்க வேண்டுமென ஜின சாசன தேவதைகளைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி அருளுகிறோம். இவர்களைப் போல் பவ்வியர்கள் பலரும் சாஸ்திர தானம் செய்ய முன்வர வேண்டுமெனவும் விரும்புகிறோம். சமய நூல்கள் பலவும் அனைவருக்கும் குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் வெளியிட விழைகிறோம்.

இந்நூலின் வெளியீட்டுப் பணிகளில் உதவிய சென்னை ஜைன இளைஞர் மன்றத்தினருக்கும், குறித்த நேரத்தில் அழகுற அச்சிட்டுத் தந்த எஸ். தன்யகுமார் அச்சகத்தாருக்கும் எமது ஆசிகள்.

ஜினசாசனம் என்றும் நின்று நிலவுக!

மேல் சித்தாமூர்,
மகாவீரர் ஆண்டு 2511
பங்குனி 21ம் நாள்

வர்த்ததாம் ஜினசாஸனம்

ஸ்ரீ இலட்சுமிசேன சுவாமிகள்
ஜினகஞ்சி மடம்

முன்னுரை

தமிழகத்தில் வாழ்ந்துவரும் திகம்பரப் பிரிவு சமண சமயத்தவருக்குத் தலைமைப் பீடமாக அமைந்து, மடத்தினைக் கொண்டிலங்குவது மேல்சித்தாமூராகும். இங்கு அழகிய சிற்பங்களையும், பழமையான கல்வெட்டுக்களையும் கொண்ட கோயில்கள் உள்ள போதிலும், தலைமுறை தலைமுறையாக சமயத் தலைவர்கள் வீற்றிருக்கும் மடம் இருந்த போதிலும், இவை பற்றிய வரலாற்றுண்மைகள் முழுமையாக இதுகாறும் வெளிக்கொணரப்படவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு தொடர்ந்த ஆய்வின் பயனே இன்று புத்தக வடிவம் பெறுகிறது.

இந்நூல் சித்தாமூர் மடாதிபதி **ஸ்வஸ்திஸ்ரீ லக்ஷ்மிசேன பட்டாரக பட்டாரச் சார்யவர்ய சுவாமி** அவர்களது நல்லாசியுடன் மடத்தின் வெளியீடாக உங்கள் கரங்களில் தவழ்கிறது எனது ஆய்வினைப் புத்தகவடிவில் கொணர்வதற்கு வேண்டிய உதவிகள் புரிந்தவரும் அவரேயாவார். அன்னாருக்கு எனது உளம் கனிந்த நன்றி. மேலும் இந்த ஆய்வினைத் தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ந்து ஊக்கம் அளித்தும், துணைநின்றும் நிழற்படங்கள் எடுத்து உதவி செய்தும் இப்புத்தகம் முழுவடிவம் பெறவழிகோலியவர் ஜைன இளைஞர் மன்றச் செயலாளர் பேராசிரியர் சிரே. தன்யகுமார் அவர்களாகும். அவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.


சென்னை,
1-1-1985

ஏ. ஏகாம்பரநாதன்

உள்ளுறை

மூவுலகு உணர்ந்த மூர்த்தி
ஸ்ரீவர்த்தமான மகாவீரரின்
2583 ஆவது பிறந்த நாள்
நினைவு வெளியீடு

Lord Mahavira's
Commemorative Publication
Published on
2583rd Jayanthi of Lord Mahavira



ஸ்வஸ்தி ஸ்ரீ லட்சுமிசேன பட்டாரக பட்டாசார்யவர்ய
சுவாமிகள்

1

தமிழகத்தில் சமணம்-ஒரு கண்ணோட்டம்

நம் தாய்த் திருநாட்டில் தோன்றிய பல்வேறு சமயங்களுள் சமண சமயமும் தொன்மை வாய்ந்த ஒன்றாகும். கொல்லாமை அன்புடைமை, வாய்மை, அவாவறுத்தல் முதலிய பல அறநெறிக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இப்புண்ணிய பூமியில் புதியவரலாறு படைத்த பெருமை இச்சமய நன்னெறியாளரையும் சாரும். அருளறம் பூண்ட இவ்வறவோர் மனித சமுதாயம் எழுச்சி பெற ஆற்றிய அரிய தொண்டுகள் மிகப்பலவாகும். பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட இந்தியப் பெரு நிலப்பரப்பின் வெவ்வேறு பகுதிகளிலும் சமண சமயம் வேரூன்றித் தழைத்ததன் பயனாக ஆங்காங்கே அணி திகழ் கோயில்களும், அரிய கலைச் செல்வங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மேலும் எண்ணிறந்த இலக்கியங்களும், ஏற்றமிகு இலக்கண நூற்களும், கருத்துச் செறிவுடைய தத்துவ நூற்களும் படைக்கப்பட்டிருக்கின்றன. காலச் சுழலில் சமண சமயம் பலமுறை சோதனைகளுக்குட்படுத்தப் பட்டிருந்த போதிலும், அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு இன்றளவும் நிலைத்திருப்பது பெருமைக்குரியதாகும்.

சமணம் தென்னகம் போந்தமை

கி.மு 4ஆம் நூற்றாண்டின் இறுதியில் மகதநாட்டில் வற்கடம் ஏற்பட்டமையால் மௌரியப் பேரரசனாகிய சந்திரகுப்தன் முடி துறந்து பத்ரபாகு முனிவருடனும், பன்னிரண்டாயிரம் சமணத் துறவியருடனும் தென்னகம் நோக்கிப் புறப்பட்டு கர்நாடக மாநிலத்திலுள்ள சிரவணபெல்கோலாவில் தங்கியதாகக் கூறப்படுகிறது. இவர்களது வருகையால் அங்கு சமண சமயம் வேரூன்றத் தொடங்கலாயிற்று. சந்திரகுப்தனும், பத்ரபாகுவும் இயற்கையெய்திய பின்னர் பத்ரபாகு முனிவரின் சீடராகிய விசாகாச்சாரியாரும், அவரைத் தொடர்ந்து ஏராளமான துறவியரும் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வந்து சமணம் பரவுவதற்கு வழிகோலினர் என்று கருதப்படுகிறது.[1]

கர்நாடக மாநிலத்திலுள்ள சிரவணபெல்கோலாவில் சந்திர குப்த மௌரியனும், பத்ரபாகுமுனிவரும் கி. மு. 4 ஆம்

நூற்றுண்டில் வந்து சமண சமயம் வேரூன்றக் காரணமாயிருந் தனர் என்பதற்கு அந்த நூற்றுண்டைச் சார்ந்த எந்த விதமான சான்றுகளும் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் இதே செய்தி கி.பி. 7ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டுக்களிலும், அதற்குப் பிந்திய கல் வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. முந்திய வரலாற்று நிகழ்ச்சிக்கு முழுவடிவம் கி. பி. 7 ஆம் நூற்றுண்டில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது இதன் மூலம் தெரிய வரு கிறது. இது எவ்வாருயினும் கர்நாடக மாநிலத்தில் கி.மு. 4ஆம் நூற்றுண்டிலேயே சமண சமயம் பரவியதென்பது அறிஞர்கள் ஏற்றுக் கொண்ட கருத்தாகும்.[2] தமிழகத்திலுள்ள காலத்தால் முந்திய கல்வெட்டுச் சான்றுகளும் இதனை மறைமுகமாக வலியுறுத்துபவையாகும்.

தமிழக பிராமிக் கல்வெட்டுக்கள்

தமிழகத்தைப் பொறுத்தவரை கி.மு. 3 ஆம் நூற்றுண்டிலேயே சமணசமயம் பரவியதாக அறியக் கிடக்கிறோம். இதனை நிலை நாட்டுபவையாகத் திகழ்பவை குறிப்பாக சமண சமயத்தொடர்புடைய பிராமிக் கல்வெட்டுக்களாகும். இத்தகைய கல்வெட்டுக்கள் அரிட்டாபட்டி, மாங்குளம், முத்துப்பட்டி, திருப் பரங்குன்றம், மறுகால்தலை, அழகர்மலை, கீழவளவு, மேட்டுப் பட்டி, முதலிய பல இடங்களில் காணப்படுகின்றன. மிக்கவாருன கல்வெட்டுக்களில் சமண சமய அறவோர்களின் பெயர்கள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும், இவற்றின் வரிவடிவம், காலம் முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டு, கர்நாடக மாநிலத்திலிருந்து கொங்கு நாட்டின் வழியாக முதலில் பாண்டி மண்டலத்திலும், பின்னர் தொண்டை மண்டலத்திலும், சமணம் பரவியதாகக் கூறப்படுகிறது.[3] பாண்டிய நாட்டிலுள்ள சில பிராமிக் கல்வெட்டுக்கள் கி.மு. 3 அல்லது 2ம் நூற்றுண்டினைச் சார்ந்தவை எனவும், தொண்டை மண்டலத்திலுள்ளவை கி. பி. 2, 3ஆம் நூற்றுண்டுகள் அல்லது அதற்குப் பிற்பட்டவை எனவும் வரையறை செய்யப்பட்டிருப்பதால், முதன் முதலில் சமணசமயம் பாண்டிய நாட்டிற்கும்,அதற்கு பின்னர் தொண்டை நாட்டிற்கும் பரவியிருக்க வேண்டுமென்று கருதுவதில் தவறில்லை. மேலும் கர்நாடக மாநிலத்திற்கும், கொங்கு நாட்டிற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் முன்பே தொடர்பு இருந்ததாகக் கூறப்படுவதால், கொங்கு நாட்டின் வழியாக சமணம் தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கியிருக்க வேண்டுமென்பது சாத்தியமாகிறது.

இதுவன்றி ஆந்திர மாநிலத்திலிருந்தும் தமிழகத்திற்குச் சமணம் வந்திருக்கக்கூடும் என்னும் கருத்தும் நிலவுகிறது. தமிழகத்தின் தற்போதைய வடஎல்லைப்பகுதியில் ஆந்திர மாநிலத்தை ஒட்டியிருக்கும் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சிலமலைகளில் சமணசமயக் கல்வெட்டுக்களும் சிற்பங்களும் காணப்படுவதை அடிப்படையாகக் கொண்டே இக்கருத்து கூறப்பட்டுள்ளது.[4] தமிழகத்திலுள்ள பிராமிக் கல்வெட்டுக்களின் கால அடிப்படையில் நோக்கினுல் பாண்டிய, கொங்கு நாட்டிலுள்ளவை பிந்தியவை என வகுக்கப்பட்டிருக்கின்றது. எனவேதான் கர்நாடகமாநிலத்திலிருந்து கொங்கு நாட்டின் வழியாக சமணம் முதன்முதலில் பாண்டிய நாட்டிற்குப் பரவியதென வரலாற்ருசிரியர்கள் முடிவு செய்துள்ளனர். மேலும் ஆந்திர மாநிலத்தில் புத்தசமயம் முன்பாகவே வேரூன்றியதும், சமணம் சற்று பிந்திய காலத்தில் பரவியதும் வரலாறு கூறும் உண்மையாகும். ஆகவே 'ஆந்திர-தமிழக' சமண சமயத் தொடர்பு சற்று பிற்காலத்தது என்பது தெளிவாகிறது. எவ்வாருயினும் **தமிழகத்தில் கி. மு. 3 ஆம் நூற்ருண்டிலேயே சமணசமயம் வேரூன்றத் தொடங்கியதென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.**

சமணசங்கம்

தமிழகம் போந்த சமணச்சான்ருேர் சமணசங்கம் ஏற்படுத்திச் சமயத்தினை வளர்க்க அரும்பாடு பட்டுள்ளனர். இச்சங்கத்தின் முழுமையான வரலாருே அல்லது அதனை மேம்படச் செய்யப் பெரிதும் தொண்டாற்றியவர்கள் அனைவரது பெயர்களோ சரிவர அறிவதற்கில்லை. ஆதலால் இதன் வரலாற்றில் மிகுந்த இடைவெளிகள் உள்ளன.

கி. மு. ஒன்ரும் நூற்ருண்டில் **திருப்பாதிரிப்புலியூரில்** (கடலூர்) சமணசங்கமாகிய **மூலசங்கம்** ஏற்படுத்தப்பட்டு அதன் தலைமைப்பொறுப்பினை **குந்தகுந்தாச்சாரியார்** ஏற்று சமண சமயம் சிறப்புறுவதற்குரிய ஆக்கப் பணிகளை மேற்கொள்வாராயினர்.[5] கி. பி. இரண்டாம் நூற்ருண்டில் **சமந்தபத்திரர்** என்னும் முனிவரால் சமணம் போற்றி வளர்க்கப் படலாயிற்று.[6] இதற்குப் பின்னர் **பூஜ்யபாதர்** என்பவரின் சீடராகிய **வஜ்ரநந்தி கி. பி. 5** ஆம் நூற்ருண்டில் திராவிடசங்கத்தை மதுரையில் ஏற்படுத்தி சமயம் தழைத்தோங்க அரும் முயற்சிகளை மேற்கொண்டார்.[7] இதனைத்தொடர்ந்து சமணசமயம் மேலும் வளர்ச்சியடைந்து தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் செல்வாக்குப் பெற்றுத் திகழலாயிற்று. சமண அறவோர் இலக்கிய இலக்கண நூற்களைப் படைத்து அன்னைத் தமிழுக்கு அணி

கூட்டலாயினர். நாட்டுமக்களுக்கு நன்னெறிக் கருத்துக்களை வழங்கியதோடு மட்டுமன்றி, நலிவுற்றோருக்கு உணவளித்தும். அடைக்கலம் கொடுத்தும், மருத்துவ உதவி செய்தும் அருந்தொண்டாற்றி வந்தனர். சாதிவேறுபாடின்றி தமிழ்மக்களுக்கு தாய்மொழியில் சமயபோதனையும், கல்வியறிவும், ஊட்டியமையால், இது ஒரு வலிமைமிக்க அமைப்பாகத் தமிழகத்தில் திகழ முடிந்தது எனலாம்.

திருப்புமுனை

தமிழகத்தின் சமய வரலாற்றில் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு ஒரு திருப்புமுனையாக அமைந்திருக்கிறது பக்திமார்க்கம் அடிப்படையில் சைவமும், வைணவமும் புத்துயிர் பெறலாயின. சைவசமயக் குரவர்களாகிய நாயன்மார்களும், வைணவசமய ஆழ்வார்களும் பக்திநெறியினைத் தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பரப்புவதற்குப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டனர். திருத்தலப்பயணங்களை மேற்கொண்டு ஆங்காங்குள்ள கோயில்களையும், அங்கு உறையும் இறைவனையும் பண்சுமந்த பாடல்களால் பாடியும்; விந்தை மிகு செயல்களைச் செய்து காட்டியும், புத்த, சமண சமயத்தவருடன் சமயவாதம் புரிந்தும் சைவ, வைணவ சமயங்களைப் புதுப்பொலிவு பெறும்படிச் செய்தனர். மேலும் புத்த, சமண சமயத்தவர் தங்கள் சமயம் நிலைபெறப்பின் பற்றிய வழிகளாகிய தமிழ்மொழியில் சமயக்கருத்துக்களைப் போதித்தல், சமய நூற்களை யாத்தல், நலிவுற்றமக்களுக்கு உணவளித்தல், கல்வியறிவு புகட்ட பள்ளிகள், (பாளிகள்) நிறுவியமை முதலியனவற்றை தாங்களும் கையாண்டு சைவ, வைணவ சமயங்களை வளர்க்கலாயினர். அதேசமயத்தில் தமிழகத்தை ஆட்சிபுரிந்த அரசர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏராளமான கற்கோயில்களை உருவாக்கி அவற்றில் இந்து சமயக் கடவுளரின் எண்ணிறந்த திருவுருவங்களை அமைத்து இறைவழிபாட்டை மேம்படச் செய்தனர். இவ்வாறு பக்திமார்க்கமும், கோயிற்கலையும் ஒன்றுடொன்று இணைந்தமையால் சைவ, வைணவ சமயங்கள் அதிவிரைவில் எழுச்சி பெறலாயின. சமண, புத்த சமயத்தினர் பள்ளிகளைத் தோற்றுவித்து சமய-சமுதாய அமைப்பினை ஒருங்கிணைத்தது போன்று, இந்து சமயத்தவரும் கோயில்களுடன் மடங்களை ஏற்படுத்தித் தங்கள் சமய—சமுதாய அமைப்பினை வலிமை பெறச் செய்தனர்.

பக்திநெறியினைப் பரப்பி தங்கள் சமயம் வலிமை பெற்ற இயக்கமாக உருவெடுப்பதற்கு நாயன்மார்களும், ஆழ்வார்களும் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளினால் சமணம், புத்தம்

ஆகிய சமயங்கள் பல்வேறு சோதனைகளுக்குட்படுத்தப்பட்டன, பக்தி இலக்கியங்களில் புத்த, சமண சமயத் துறவியர்கள் இடித்து உரைக்கப்பட்டும், அச்சமயத்தவர்களது பழக்க வழக்கங்கள் குறை கூறப்பட்டும், அவர்களது சமய நெறிகள் பொய்யுரைகள் என பழிக்கப்பட்டும் இருப்பதைக் காணலாம். காழ்ப்புணர்வின் அடிப் படையில் சமய வாதங்கள் நிகழ்த்தப்பட்டதாகவும், சமணர்கள் அழிக்கப்பட்டதாகவும் அறிய வருகிறோம். தேவாரம், பெரிய புராணம் ஆகிய நூற்களில் மிகுதியான பாடல்கள் இவ்வாறு சமயக் காழ்ப்புணர்வினைப் பிரதிபலிப்பவையாக அமைந்திருக் கின்றன. இத்தகைய சமயக் காழ்ப்பினால் சமண சமயத்தின் வளர்ச்சி குன்றியதே ஒழிய, அது முற்றிலும் அழிக்கப்படவில்லை.[8]

அரசர்களின் ஆதரவு

தமிழகத்தை ஆட்சி புரிந்த பல்லவ, பாண்டிய, சோழ, விசய நகரப் பேரரசர்களுள் பெரும்பாலானோர் சைவ, வைணவ சமயங் களைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், சிலர் சமண சமயத் தினையும் ஆதரித்துள்ளனர். இவர்கள் அளித்த ஆதரவின் பயனாக பல சமணக் கோயில்கள் கட்டப்பட்டும், சிற்பங்கள் உருவாக்கப் பட்டும் உள்ளன. மேலும் இவர்களது ஆட்சியில் சமணக் கோயில் களுக்கு நிலதானங்களும், பிறதானங்களும் வழங்கப்பட்டிருக் கின்றன.

பல்லவ அரசர்களுள் சிம்மவர்மனது ஆட்சிக் காலத்திலேயே (கி.பி. 550ல்) காஞ்சி மாநகரின் ஒரு பகுதியாகிய திருப்பருத்திக் குன்றத்திலுள்ள வர்த்தமான மகாவீரர் கோயிலுக்கு நிலதானங் கள் வழங்கியமையை பள்ளன் கோயில் செப்பேட்டின் வாயிலாக அறியக் கிடக்கின்றோம்[9]. இத்திருப்பருத்திக் குன்றத்தில் இராச சிம்மன் காலத்தில் சந்திரபிரபா தீர்த்தங்கரருக்குச் சிறிய கோயில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. காலப்போக்கில் இது புதுப்பிக்கப் பட்டிருப்பினும் இராசசிம்மனது கலைப்பாணியினைக் கொண்டு விளங்குவதைக் காணலாம்.

முற்காலப் பாண்டியராட்சியில் ஏராளமான பாறைச் சிற்பங் கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய சிற்பங்கள் குமரி மாவட்டத்தில் திருச்சாரணத்து மலையிலும், நெல்லை மாவட்டத் தில் கழுகு மலை, ஏறுவாடி ஆகிய இடங்களிலும், மதுரை மா வட்டத்தில் ஐவர் மலை, பேச்சிப் பள்ளம் முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன. திருச்சாரணத்து மலையில் பார்சுவ நாதர், மகாவீரர், இவர்களது யக்ஷிகள் ஆகியோரது சிற்பங்களைக் காண லாம். கழுகு மலையில் தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் வரிசை

வரிசையாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பார்சுவ நாதர் சிற்பம் மிகவும் எழிலார்ந்த படைப்பாகும். தீர்த்தங்கரர் சிற்பங்களில் காணப்பெறும் முக்குடை, கொடி போன்ற அமைப்பு யக்ஷியரின் கரங்களிலுள்ள சாமரங்கள், அவர்களது திருமேனி களை அலங்கரிக்கும் ஆடை, அணிகலன்கள் முதலினயாவும் சிறப் புற அமைக்கப்பட்டிருக்கின்றன. பேச்சிப் பள்ளத்திலுள்ள பாறையில் பாகுபலி, பார்சுவநாதர், மகாவீரர் முதலியோரது சிற்பங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன. மேற் கூறப்பட்டுள்ள இடங்களில் திகழும் சிற்பங்களின் அடிப்பகுதியில் அவற்றை நிறுவ ஏற்பாடு செய்தவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கி. பி 9 ஆம் நூற்றுண்டில் அவனிப சேகர ஸ்ரீவல்லபனது ஆட்சியில் சித்தன்னவாசல் குடைவரைக் கோயில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.[10] முதலாம் வரகுணன் மாறஞ்சடையன், இரண்டாம் வரகுணன் முதலிய பாண்டிய மன்னர்களாட்சியில் பல சமணக் கோயில்களுக்கு நிலங்கள், விளக்கெரிக்க ஆடுகள் முதலியவை தானமாக வழங்கப்பட்ட செய்திகள் கல்வெட்டுக்களில் இடம் பெற்றிருக்கின்றன.[11]

சோழராட்சியில் ஏராளமான சமண சமயக் கோயில்கள் கட்டப்பட்டும், அவற்றில் வழிபாடு சிறப்புற நடைபெறும் பொருட்டு மிகுந்த தானங்கள் வழங்கப்பட்டும் இருக்கின்றன. முதலாம் ஆதித்தன், இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் அதிராசேந்திரன் முதலிய அரசர்களது ஆட்சியில் பல்வேறு கோயில்களுக்கு நிலங்கள், பணம், பொருட்கள் முதலியவை அளிக்கப்பட்டதாக அறிய வருகிறோம். இச்சோழப் பேரரசர் களது காலத்தில் திருப்பருத்திக்குன்றம், திருநறுங்கொண்டை, நார்த்தாமலை, பள்ளிச்சந்தல், திருமலை முதலிய பல இடங்களில் சமண சமயக் கோயில்கள் சிறப்புற்று விளங்கின. சோழப் பேரரசி யாகிய குந்தவைப் பிராட்டியார் திருமலையில் தமது பெயரால் குந்தவைஜினலயம் என்னும் கோயில் கட்டியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இக்கோயிலுக்கு இவ்வரசியார் பொன்னும், பொருளும் தானமாக அளித்து வழிபாடு சிறக்க வழிவகைகளும் செய்துள்ளார்.

விசயநகர அரசர்களாட்சியில் சமணக் கோயில்கள் பல வற்றில் புதியதாக மண்டபங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. திருப்பருத்திக்குன்றத்திலுள்ள கோயில் சங்கீத மண்டபம் இரண்டாவது புக்கரது அமைச்சராகிய இருகப்பாவால் கட்டப் பட்டதாகும். இங்குள்ள ஓவியங்களும் விசயநகர கலைப்பாணியைக் கொண்டு மிளிர்கின்றன. விசயமங்கலத்திலும், திருமலையிலும்

புதிய மண்டபங்கள் கட்டப் பெற்று அவை அழகிய சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றன. வடஆர்க்காடு மாவட்டத்தில் வெண்குன்றம், பிருதூர் ஆகிய இடங்களிலுள்ள அருகக்கடவுளின் கோயில்கள் விசயநகர கலைப்பாணியுடன் திகழ்கின்றன. வெண் குன்றத்திலுள்ள தீர்த்தங்கரர்களது செப்புத் திருமேனிகளும் அக் காலத்தில் உருவாக்கப்பட்டவையாகும். விசயநகர மன்னர் களாட்சியில் திருப்பருத்திக்குன்றம், திருமலை, ஜம்பை, திருநறுங் கொண்டை, விசயமங்கலம் முதலிய பல்வேறு இடங்களிலுள்ள கோயில்களுக்குத் தானங்கள் வழங்கி, வழிபாடுகள் சிறந்த முறை யில் நடைபெற ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் சைவ, வைணவ மறுமலர்ச்சியினால் சமணசமயம் பாதிக்கப்பட்ட போதிலும், தொடர்ந்து விசயநகரமன்னர் களாட்சி வரையிலும் ஆங்காங்கே பல சமணக்கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டு நன்முறையில் வழிபாட்டிற்குரியனவாகத் திகழ்ந்திருக்கின்றன. விசயநகர அரசர்களின் பிரதிநிதிகளாக ஆட்சி புரிந்த நாயக்கர்கள் காலத்தில் மிகச் சில கோயில்களே கண்காணிக்கப்பட்டு வந்தன. இவர்களது காலத்தில் தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டிருந்ததும் இதற்கு ஒரு காரணம் எனலாம். முகமதியர் களின் படையெடுப்புக்கள், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர்கள் நடத்திய போர்கள், அவர்கள் தங்கள் சமயத்தினை நிலைநாட்டக் கையாண்ட முயற்சிகள், அவர்களுடைய அரசியல் ஆதிக்கம் முதலிய அனைத்தும் தமிழகத்தின் முந்திய பண்பாட்டினையும், சமய அடிப்படையில் ஒன்றிய சமுதாய அமைப்பினையும் முற்றிலும் மாறுபடச் செய்ததெனில் மிகையாகாது. மேலும் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டதால் சமுதாய அமைப்புகள் மிகவும் பாதிக்கப்பட்டு, மக்கள் இன்னலுறலா யினர்.

முன்பு தமிழகத்தின் பெரும் பகுதியிலும் தழைத்திருந்த சமண சமயம் காலப்போக்கில் தென்னார்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு முதலிய சில மாவட்டங்களில் மட்டும் ஓரளவு நிலைத்திருக்கலாயிற்று. பிறமாவட்டங்களில் சமண சமூகத்தவர் மிகக் குறைந்த அளவில் காணப்படுகின்றனர். தென்னார்க்காடு மாவட்டத்தில் ஜம்பை, சிறுகடம்பூர், சோழவாண்டிபுரம், திருநறுங்கொண்டை, கொலியனூர், சித்தாமூர், கீழ்க்குப்பம், திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், தேவியகரம், எலந்துறை, தொண்டூர், பெருமண்டூர், (உப்பு) வேலூர், திட்டைக்குடி, தாதாபுரம், பள்ளிச்சந்தல், சிங்காணிக்குப்பம், ஓலக்கூர், வீடூர்

முதலிய இடங்கள் முக்கியமான சமண திருப்பதிகளாகும். இவற்றுள் பல ஊர்களில் சமணக்கோயில்களும், சிற்பங்களும், கல்வெட்டுக்களும் காணப்பட்டன. ஆனால் காலச்சுழலில் இவற்றுள் பெரும்பான்மையான கோயில்கள் அழிந்துபட்டிருக்கின்றன. இங்குள்ள சிற்பங்களும், கல்வெட்டுக்களும் சரிவர பாதுகாக்கப்படாமையால் உருக்குலைந்திருக்கின்றன. இவ்வாறிருப்பினும் குறிப்பாக வீடூர், பெருமண்டூர், திருநறுங்கொண்டை, சித்தாமூர் முதலிய தலங்களிலுள்ள கோயில்கள் இன்றளவும் சமண சமயத்தவரால் நன்கு கண்காணிக்கப்பட்டு, வழிபாட்டிலிருந்து கொண்டு வருவதைக் காணலாம்.

அடிக்குறிப்புகள் :

1. P. B. Desai, Jainism in South India, PP 25-27
2. R. B. Prasad Singh, Jainism in Early Medieval Karnataka, P 5ff
3. ஆர். சம்பகலக்குமி, "சமணம்", ஆய்வுத்தேன், பக். 24
4. க. ப. அறவாணன், சைனரின் தமிழிலக்கண நன்கொடை, பக். 7-8
5. A. Chakravarti, Jaina Literature in Tamil, P. 16
6. M. S. Ramasamy Aiyangar, Studies in South Indian Jainism P. 44
7. A. Chakravarti, op cit., pp 16-17
8. ஏ. ஏகாம்பரநாதன், கல்வெட்டில் சமணம், பக். 99
9. T. N Subramanian, "The Pallankoil copper Plate" Transcations of the Archaeological Society of south India, 1958-59
10. South Indian Inscriptions (S11) vol XIV No 45
11. Annual Report of Epigraphy (ARE) 605/ 1915 S11. vol XIV, Nos. 32, 39
12. S11, vol. 111, No. 67

2

சித்தாமூர்

தமிழகத்தில் வாழும் திகம்பரப்பிரிவு சமணசமயத்தவருக்குத் தலைமைப்பீடமாக அமைந்து, மடத்தினைக் கொண்டிலங்குவது தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சித் தாலுகாவைச் சார்ந்த சித்தாமூராகும். இது திண்டிவனத்திலிருந்து இருபது கிலோமீட்டர் மேற்கிலும் செஞ்சியிலிருந்து பத்துகிலோமீட்டர் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. திண்டிவனத்திலிருந்து செஞ்சிக்குச் செல்லும் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள வல்லம் என்னும் ஊரிலிருந்து வடக்குநோக்கிச் செல்லும் சாலை வழியாக இரண்டு கிலோமீட்டர் தூரம் சென்றால் சித்தாமூரை அடையலாம். திண்டிவனத்திலிருந்து புறப்பட்டு மேல்ஒலக்கூர் செல்லும் பேருந்து இவ்வூர் வழியாகவே செல்கிறது. இதுபோன்று செஞ்சியிலிருந்து மேல்ஒலக்கூருக்கு நாட்டார்மங்கலம் வழியாகச் செல்லும் பேருந்தின் மூலம் பனப்பாக்கம் என்னும் ஊரில் இறங்கி, அங்கிருந்து சிறிதுதூரம் கிழக்கு நோக்கி நடந்தும் சித்தாமூரை எளிதில் அடைய இயலும்.

இயற்கையமைப்பு

சித்தாமூர் 665 ஹெக்டேர் பரப்பளவினைக் கொண்டதாகும். இப்பகுதி மலைப்பாங்கன இடமாக இல்லாதிருந்தபோதிலும், ஆங்காங்கே மிகவும் சிறிய பாறைகள் காணப்படுகின்றன. ஆனால் தொலைவில் மேற்கு திசையில் செஞ்சிமலையும், வடக்கில் கலவா மலையும் உள்ளன. இவ்வூரிலிருந்து ஏறக்குறைய நான்கு கிலோ மீட்டர் தெற்கில் சங்கராபரணியாறும், ஒருகிலோமீட்டர் கிழக்கில் தொண்டியாறும் பாய்ந்து செல்லுகின்றன. இவ்வூருக்கு கிழக்கில் பெரிய ஏரி ஒன்றும், தெற்கில் வல்லம் ஏரியும் சற்று பெரிய அளவிலான நீர் நிலைகளாகும். எனவே இங்கு நீர்ப்பாசன வசதிக்கு குறைவில்லை. இத்தகைய தண்ணீர் வசதியுடைய சூழ் நிலையில் அமைந்துள்ளமையால் இப்பகுதி அதிகமாக வறண்ட நிலையில் காணப்படுவதில்லை. ஊரின்மேற்புறம் சிறிய குளம் ஒன்று உள்ளது. நெடுநாட்களாக மழையின்றி பஞ்சம் ஏற்படும் போதுதான் இப்பகுதி மிகுந்த பாதிப்படைகிறது.

மக்கள்

சித்தாமூரில் தற்காலத்தில் சமணம், இந்து, கிறித்தவம் ஆகிய சமயங்களைச் சார்ந்த மக்கள் வசித்து வருகின்றனர்,

இவர்களுள் பெரும்பான்மையோர் இந்துசமயத்தைச் சார்ந்தவர்களாயிருந்த போதிலும் சமய பேதங்களை இங்கு காணமுடிவதில்லை. கிறித்தவர்கள் ஊரின் தென்புறம் அவர்களது கோயிலுக்கு (சர்ச்) அருகில் வாழ்ந்து வருகின்றனர். சமணர்கள் பார்சுவநாதர், மலைநாதர் கோயில்களை ஒட்டியுள்ள பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இதனை அடுத்தாற்போன்று இந்துக்கள் வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்மொழி பேசுபவர்களே அதிகமாக இருப்பினும், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளைப் பேசும் மக்களையும் இங்கு காணலாம்.

இவ்வூரில் ஏறத்தாழ 450 வீடுகளும், 500 குடும்பங்களும் இருப்பதாகத் தெரியவருகிறது. ஊரின் மொத்த ஜனத்தொகை மூவாயிரத்திற்கும் அதிகமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. சித்தாமூரில் திகம்பர சமணர் முன்பு அதிகமாக இருந்தபோதிலும் தற்போது 60 குடும்பங்கள் மட்டுமே உள்ளன.

பொதுவாக இங்குள்ள மக்கள் மிகுந்த பொருளாதார வசதியற்றவர்களாக இருப்பினும், தன்னிறைவு உடையவர்களாக இருக்கின்றனர். . மிகுதியானோர் விவசாயத்தை நம்பி வாழ்பவர்களாகும். அரிசி, கேழ்வரகு முதலிய தானியங்களே பெரும்பான்மையான மக்களின் உணவுக்குரியவையாக இருக்கின்றன.

கோயில்கள், பள்ளிகள்

சமண சமயக் கோயில்கள் இரண்டும், இந்து சமயக் கோயில்கள் இரண்டும், கிறித்தவ சமயக் கோயில்கள் இரண்டும், இங்கு காணப்படுகின்றன. மலை நாதர் கோயிலும், பார்சுவநாதர் கோயிலும் சமணருக்குரியவை. இவற்றிற்கு அருகில் சமண மடமும் உள்ளது. தமிழகத்தில் சமண சமய மடம் இது ஒன்றே ஒன்றுதான். இந்து சமயக் கோயில்கள் இரண்டினுள் ஒன்று பெருமாள் கோயிலாகும், மற்றொன்று திரௌபதியம்மன் கோயிலாகும். உரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்த கிறித்தவர்களுக்குப் பெரிதும், சிறியதுமாக இரண்டு ஆலயங்கள் இருக்கின்றன.

இவ்வூர் மக்களுக்குக் கல்வியறிவு புகட்டும் வகையில் அரசு உயர்நிலைப் பள்ளியொன்றும், கீழ்நிலைப் பள்ளியொன்றும் திகழ்கின்றன. இங்கு அரசாங்க மருத்துவமனை ஒன்றும் கட்டப்பட்டிருக்கிறது. எனவே ஏழை, எளிய மக்களும் இலவச மருத்துவ வசதி பெற முடிகிறது. இந்த அரசு மருத்துவமனையும், உயர்நிலைப் பள்ளியும் கட்டுவதற்காக சித்தாமூர் மடம் முறையே ஆறரை ஏக்கர் நிலமும், மூன்றரை ஏக்கர் நிலமும் வழங்கியிருக்கிறது.

சித்தாமூர் - பெயர் காரணம்

சமண தலமாக விளங்கும் மேல்சித்தாமூர் கல்வெட்டுக்களில் சிற்றமூர் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இப்பெயர் சிறிய ஆமூர் என்னும் பொருள்பட சிற்றாமூர் என அழைக்கப் பெற்றிருத்தல்வேண்டும். சங்க இலக்கியங்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப் படையில் வேலூர், ஆமூர் முதலிய பல ஊர்கள் கூறப்பட்டிருக்கின்றன.[1] இவற்றுள் வேலூர் எனப்படுவது மரக்காணத்திற்குத் தென்மேற்கிலுள்ள உப்பு வேலூரையும், ஆமூர் என்பது உப்பு வேலூரிலிருந்து ஏறத்தாழ பதினேழு கிலோ மீட்டர் வடமேற்கிலுள்ள நல்லாமூரையும் குறிப்பவை எனக்கருதப்படுகிறது.[2] இப்பெயர்கள் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வேலூர், ஆம்பூர் ஆகிய இடங்களைக் குறிக்கவில்லை என்பது ஈண்டு கவனிக்கத்தக்கதாகும்.

ஆமூர் என்னும் பெயருடைய தலங்கள் பல இருந்ததாக அறியவருகிறோம். திருக்கோவலூருக்கு பத்து கிலோ மீட்டர் தொலைவில் ஆமூர் என்னும் ஊர் ஒன்றுள்ளது. இது முன்பு ஆன்முர் எனப் பெயர் பெற்றிருந்ததாகத் தெரிகிறது[3] தென்னார்க்காடு மாவட்டத்திலேயே நல்லாமூர், கொண்டாமூர் என்னும் பெயர்களை உடைய ஊர்கள் உள்ளன. தொண்டை நாட்டின் ஒரு பிரிவு ஆமூர்க் கோட்டம் என அழைக்கப் பெற்று வந்தது.[4] இதுவும் ஆமூர் என்ற ஊரின் பெயரை அடிப்படையாகக் கொண்டுதான் ஆமூர்க் கோட்டம் என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆமூர் என்ற பெயரில் பல்வேறு ஊர்களிருப்பினும் இவற்றுள் ஏதாவது ஒன்று முற்காலத்தில் சிறப்பு வாய்ந்த தலமாகத் திகழ்ந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. இந்த சிறப்பு மிக்க ஆமூரின் பெயரடிப் படையில் சிறுகுடியிருப்பாகத் தோன்றிய இவ்வூருக்குச் சிற்றாமூர் எனப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டுமெனக் கூறுவது பொருத்தமாகும்.

ஆமூரில் வாழ்ந்த மக்களுள் சிலர் இங்கு வந்து வாழ்ந்தமையால் சிற்றாமூர் எனப்பெயரிடப்பட்டதா அல்லது வேறு காரணத்தினால் இப்பெயர் ஏற்பட்டதா என உறுதியாகக் கூறுவதற்கில்லை. காலப் போக்கில் சிற்றாமூர் என்னும் பெயர் சித்தாமூர் என வழங்கப் பெற்று வருகிறது. இப்பெயரினைக் கொண்ட மற்றும் ஒரு ஊர் கிளியனூருக்கு அருகில் தோற்றுவிக்கப்பட்டதால், அது கீழ்ச்சித்தாமூர் எனவும், இது மேல்சித்தாமூர் எனவும் அழைக்கப் பெறுகின்றன. ஆனால் கீழ்ச்சித்தாமூர் மேல்சித்தாமூரைப் போன்று பழமையான ஊர் அல்ல. மேலும் அது சமண சமயத் தலமாகவும் திகழ்ந்ததில்லை.

பிற சித்தாமூர்கள்

தென்னார்க்காடு, வடஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் சித்தாமூர் என்னும் பெயரினைக் கொண்டு நான்கு ஊர்கள் காணப்படுகின்றன. அவை **மேல்சித்தாமூர், கீழ்ச்சித்தாமூர், காட்டுச் சித்தாமூர், மலைச் சித்தாமூர்** என்பனவாகும். செஞ்சித் தாலுகாவில் சிறந்த சமண சமயத் தலமாக விளங்குவது மேல் சித்தாமூராகும். திண்டிவனம் தாலுகாவில் கிளியனூருக்கும் தென்கோடிப் பாக்கத்திற்கும் இடைப் பகுதியில் கீழ்ச்சித்தாமூர் உள்ளது.கிளியனூரிலிருந்து ஐந்து கிலோ மீட்டர்தொலைவிலுள்ள இவ்வூர் சமண சமய தலமாக இருக்கவில்லை. வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த திருவண்ணாமலைத் தாலுகாவில் செஞ்சி யிலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லும் நெடுஞ்சாலையை ஒட்டிக் காணப்படுவது காட்டுச் சித்தாமூராகும். இங்கு சமணசமயத்தவர் மிகச் சிலரே வாழ்ந்து வருகின்றனர். திருவண்ணாமலையிலிருந்து பன்னிரண்டு கிலோ மீட்டர் தொலைவில் மங்கலம் என்னுமிடத் திற்குச் செல்லும் வழியில் மலைச்சித்தாமூர் காணப்படுகிறது. இது சமணர் வாழும் குடியிருப்பாகத் திகழவில்லை.[5] இவ்வாறு சித்தா மூர் என்னும் பெயரடிப் படையில் பல ஊர்கள் ஏற்படக்காரணம் என்னவென்று அறிவதற்கில்லை. மேல்சித்தாமூரில் வாழ்ந்தவர் களின் சந்ததியினர் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வாழ்ந்த மையால் இப்பெயர்கள் வழங்கப்பட்டிருக்கலாம் என்று கூறுவதற் குரிய சான்றுகளும் இல்லை.

சித்தாமூரின் தொன்மை

வடஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் கற்கால, உலோக கால மக்கள் வாழ்ந் தமைக்குரிய தடயங்கள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. ஆனால் சித்தாமூரிலோ அல்லது இதற்கு அருகிலுள்ள ஊர்களிலோ அத்தகைய சான்றுகள் எவையும் கிடைத்தில. இங்கு மேற்கொள்ளப்பட்ட மேற்பரப்புக் களஆய்விலும் (exploration) பண்டைய பொருட்கள் எவையும் கிடைக்கப் பெறவில்லை. இந்த ஊரின் வெவ்வேறு பகுதிகளில் தொல்லியல் அகழ்வாய்வுகள் (excavation) செய்துபார்த்தால் ஒருவேளை முந்திய பண்பாடுகளுக்குரிய சான்றுகள் கிடைக்கலாம். எவ்வாறு யினும்தற்போது இவ்வூரின் கற்கால, உலோக கால வரலாறு பற்றி எதுவும் கூறுவதற்கில்லை.

சங்ககால இலக்கியங்களிலும், அவற்றிற்குச் சற்றுபிற்பட்ட நூற்களிலும் சித்தாமூர் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை.

இவைபோன்று தென்னார்க்காடு மாவட்டத்தில் காணப்பெறும் காலத்தால் முந்திய சமணசமய பிராமிக்கல்வெட்டுக்களும் சித்தாமூர் பற்றிய குறிப்பினைக் கொண்டு விளங்கவில்லை. சித்தாமூரிலும் கிறித்தவ ஊழியின் தொடக்க நூற்றாண்டுகளைச் சார்ந்த ஆதாரங்கள் இல்லையாதலின், அக்காலத்தில் இங்கு மக்கள் வாழ்ந்தனரென்று கூறுவதற்கில்லை. கி. பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 9 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலும் இந்நிலப்பரப்பு பல்லவராட்சியின் கீழிருந்தபோதிலும், அக்காலத்தில் கூட இது மக்கள் வாழ்ந்த பகுதியாக இருந்ததா என்பது வினவிற்குரிய ஒன்றாகும்.

பல்லவருக்குப் பின்னர் இப்பகுதி சோழராட்சியின் வசமாயிற்று. இச்சோழமன்னர்கள் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சித்தாமூரில் காணப்படுகின்றன. இவற்றுள் பழமையானது இராசகேசரி எனும் பட்டப்பெயர் கொண்ட முதலாம் ஆதித்த சோழனுடையதாகும். கி.பி. 888 ஆம் ஆண்டினைச் சார்ந்த இக்கல்வெட்டினைத் தவிர எஞ்சியுள்ளவை சற்று பிந்திய காலத்தவையாகும். எவ்வாறாயினும் இக்கல் வெட்டுக்கள்தான் சித்தாமூரில் காணப்படும் காலத்தால் முந்திய தொல்லியல் சான்றுகளாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால் கி பி. 9 ஆம் நூற்றாண்டில் இவ்வூர் சமண சமயத்தலமாகத் திகழ்ந்தமை நன்கு புலனாகும். இதற்கு முன்பு இந்த ஊரில் எப்போதிருந்து மக்கள் வாழத்தொடங்கினர் அல்லது முதன்முறையாக எக்காலமுதல் இவ்வூர் சமணசமயச் சிறப்பு வாய்ந்த தலமாக விளங்கியது என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிப்பது சாத்தியமாக இல்லை. ஏனெனில் இங்குள்ள கல்வெட்டுக்களின் காலத்திற்கு முன்பு இப்பகுதியில் மக்கள் வாழவில்லை என்று உறுதியிட்டுக் கூறவும் முடியாது. கல்வெட்டுக்களை மட்டிலும் அடிப்படையாகக் கொண்டு ஒரு ஊரின் தொன்மையினை நிர்ணயிப்பதும் எப்போதும் சரியாக இருக்கவேண்டுமென்பதில்லை. எனவே தற்போது எஞ்சியுள்ள சான்றுகளின் அடிப்படையில் நோக்கினால் இவ்வூரின் தொன்மை கி பி. 9 ஆம் நூற்றாண்டு எனலாம்.

ஊரின் பெயர்கள்

சித்தாமூரிலுள்ள சோழர் காலக் கல்வெட்டுக்களில் இவ்வூர் சிங்கபுர நாட்டுக் கீழ் வழியிலுள்ள சிற்றாமூர் எனக் குறிப்பிடப் பட்டுஉள்ளது. விசயநகர அரசனான இரண்டாவது தேவராயரது ஆட்சிக் காலத்தில் இந்த ஊருக்கு மகாபிரதான பெருமாள் தேவ தண்ட நாயகச் சதுர்வேதி மங்கலம் என்னும் பெயர் வழங்கப்

பட்டிருக்கிறது. தேவராயரது ஆட்சியில் அவரது மகாபிரதானியாக செஞ்சிப் பகுதியை அரசு புரிந்தவரே பெருமாள் தேவ தண்டநாயகம் ஆவர்.[6] இவரது பெயரால் தான் சிற்றூருக்கு மகாபிரதான பெருமாள் தேவதண்டக நாயக சதுர்வேதிமங்கலம் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இதற்கு பிற்பட்ட காலத்தில் சிற்றூர் என்னும் பெயரே நிலைத்திருந்திருக்கிறது. ஆனால் சில சமயத்தில் இது சித்திநகர், சித்தை, சிற்றை என சொற்குறுக்கம் செய்யப்பட்டு மாறுபாடுகளுடன் வழங்கிவந்திருக்கிறது. கி பி. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அனந்த விசயர் தாம் இயற்றிய அப்பாண்டைநாதர் உலாவில் சித்தாமூரைச் சித்திநகர் எனக்குறிப்பிட்டுள்ளார்.[7] பிற்காலத்தில் எழுதப் பெற்ற தஞ்சாவூர் வாழ்த்துகைப் பாடலில் சித்தநகர் எனவும்,[8] ஊஞ்சல் பாடலில் சித்தை நகர் எனவும்,[9] தருமதேவி மீது பாடப் பெற்ற சோபன மாலையில் சித்தை எனவும்,[10] குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். இது போன்று சிற்றூர் தருமதேவி ஊஞ்சலில் சிற்றை என்னும்பெயர் இடம் பெற்றிருக்கிறது.[11] சித்தை, சிற்றை, சித்தி நகர் என்னும் பெயர்கள் பாடல்களின் ஓசை நயத்திற்கென புலவர்களால் தக்கபடி மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

இவையன்றி சித்தாமூருக்குச் சிங்கபுரி என்னும மற்றொரு பெயரும் இருந்திருக்கிறது. தொண்டை மண்டலத்தில் சமணக் கோயில்கள் இருந்த ஊர்களைப் பற்றிக் கூறுமிடத்து, அப்பாண்டைநாதர் உலா சித்தாமூரிலுள்ள கோயிலை சிங்கபுரி நாதர் கோயில் என்று குறிப்பிடுகிறது.[12] இது போன்று மெக்கன்சி சுவடித் தொகுப்பினில் சிம்மபுரி நாதர் கோயில் என இங்குள்ள கோயில் அழைக்கப் பெற்றிருக்கிறது.[13] சிங்கபுரி நாதர் அல்லது சிம்மபுரி நாதர் என்னும் பெயர் சிங்கபுரியில் உறையும் இறைவன் எனப் பொருள் படுமாதலின், சித்தாமூருக்குச் சிங்கபுரி என்னும் பெயர் இருந்தமை அறியற்பாலதாகும். இப்பெயரும் செஞ்சிக்கு அண்மையிலுள்ள சிங்கபுரம் (சிங்கவரம்) என்னும் ஊரின் பெயரடிப்படையில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் இச்சிங்கபுரத்தினை அடிப்படையாகக் கொண்டு சிங்கபுரநாடு என்னும் நாட்டுப் பிரிவும் இருந்திருக்கிறது. சித்தாமூரும் சிங்கபுர நாட்டிலுள்ள ஒரு ஊர் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுவதை நோக்கும் போது இக்கருத்து மேலும் வலிமை பெறுகிறது.

சித்தாமூருக்கு அருகிலுள்ள சமண தலங்கள்

சித்தாமூருக்கு அண்மையிலுள்ள பல ஊர்கள் இன்றளவும் சிறந்த சமண சமயத் தலங்களாக விளங்குகின்றன. இவற்றுள் அகலூர், எய்யில, சிறுகடம்பூர், கள்ளப்புலியூர், பெருமுளை

வளத்தி, இளமங்கலம், வீரணாமூர் முதலியவை குறிப்பிடத் தக்கவையாகும். ஏறத்தாழ நாற்பது சமண சமயக் குடும்பத்தவர் வாழ்ந்துவரும் அகலூரில் ஆதிநாத தீர்த்தங்கரருக்குக் கோயில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது சித்தாமூர் மடாதிபதிகளாக இருந்தவர்களுள் இருவர் இவ்வூரைச் சார்ந்தவர்களாகும். எய்யில் என்னும் ஊரில் சந்திரபிரபா தீர்த்தங்கரர் கோயில் ஒன்றுள்ளது இங்கு ஐம்பது சமணக் குடும்பங்கள் உள்ளன செஞ்சிக்கருகிலுள்ள சிறுகடம்பூரில் பாறையொன்றில் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் திருவுருவங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன.இங்குள்ள கல்வெட்டுக்கள் இரு சமண அறவோர் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த செய்தியைக் கொண்டிலங்குகின்றன. கள்ளப்புலியூரில் பார்சுவநாதர் கோயிலும், வளத்தியில் ஆதிநாதர் கோயிலும் காணப்படுகின்றன மேலும் வளத்தியிலுள்ள பாறையொன்றில் அழகிய பார்சுவநாதர் சிற்பம் ஒன்றும் செதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த இருநூறு ஆண்டுகளாகச் சமண தலமாகத் திகழ்ந்து வரும் பெருமுகையில் மல்லிநாத தீர்த்தங்கரருக்குக் கோயில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. வீரணாமூரில் ரிஷபநாததீர்த்தங்கரர் கோயில் உள்ளது. இங்கு வாழ்பவருள் நாற்பது குடும்பத்தவர் சமண சமயத்தைச் சார்ந்தவராகும். சித்தாமூர் மடத்தின் தலைமைப் பொறுப்பினை வகித்த மூவரை உருவாக்கிய பெருமை இந்த ஊரைச்சாரும்.

அடிக்குறிப்புகள்

1. சிறுபாணாற்றுப்படை வரிகள் 173, 198
2. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக். 161
3. Annual Report of Epigraphy, 307/1910
4. Annual Report of Epigraphy, 394/1958-59.
5. இச்சித்தாமூர்கள் பற்றிய செய்தியினை வழங்கிய திரு. அய்யண்ண தாஸ் அவர்களுக்கு நன்றி உரித்தாகுக!
6. Annual Report of Epigraphy, 64/1935-36
7. அப்பாண்டை நாதர் உலா, வரிகள் 23-25
8. கலியாண வாழ்த்து, பாடல் 67, பக்கம் 67
9. கலியாண வாழ்த்து, பாடல் 9.
10. கலியாண வாழ்த்து, பாடல் 88, பக்கம் 54
11. தோத்திரத்திரட்டு, சிற்றாமூர் தருமதேவி ஊசல், பாடல்கள் 1-5
12. அப்பாண்டை நாதர் உலா, வரிகள் 23-25
13. MacKenzie Manuscripts, MSS No. 69.

3

அரசியல் வரலாற்றுப் பின்னணி

தென்னார்க்காடு மாவட்டத்தில் சித்தாமூர் முக்கியமான சமண சமய தலமாகத் திகழ்வதால் அதன் அரசியல் வரலாற்றுப் பின்னணியினைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். சித்தாமூரிலும், அதனை அடுத்துள்ள ஊர்களிலும் காணப்பெறும் கல்வெட்டுக்களின் வாயிலாக இவ்வூரைப் பற்றிய வரலாற்றுண்மையினை ஓரளவு அறிய முடிகிறது. வெவ்வேறு அரச பரம்பரையினரின் ஆட்சியில் இப்பகுதி எந்த நிலையில் இருந்தது என்பதனையும், அக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினையும், அதனால் சமயம், சமுதாயம் ஆகியவற்றில் ஏற்பட்ட விளைவுகளையும் இங்கு காண்போம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பு

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு சங்ககாலத்தில் மலையமான் என்னும் சிற்றரசபரம்பரையினர் ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். இவர்களுள் மலையமான் திருமுடிக்காரி என்பவன் சீரும், சிறப்புடனும் அரசோச்சியவன். இச்சிற்றரசர்களின் ஆட்சியின் கீழ் செஞ்சியும், அதனைச் சார்ந்த பகுதிகளும் இருந்தனவா என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. இவர்களுக்குச் சற்றுபிற்பட்ட காலத்தில் திருநாதர்குன்றில் இருபத்தினான்கு தீர்த்தங்கரர் சிற்பங்கள் அழகுறத் தீட்டப்பெற்றிருக்கின்றன. மேலும் இங்குள்ள கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுக்களில் இரு சமண அறவோர் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த செய்தியும் இடம்பெற்றுள்ளது.[1] ஆனால் இவற்றிலிருந்தோ அல்லது தென்னார்க்காடு மாவட்டத்தின் பிறபகுதிகளில் காணப்பெறும் முந்தியகாலப் பிராமிக் கல்வெட்டுக்களிலிருந்தோ சித்தாமூரைப் பற்றி அறிந்து கொள்வதற்கில்லை சித்தாமூரில் திருநாதர் குன்றிலுள்ள கல்வெட்டுக்களின் காலத்தைச் சார்ந்த (கி.பி. 4, 5 நூற்றாண்டுகள்) சான்றுகள் எவையும் இல்லையாதலின், அக்காலத்தில் இது மக்கள் வாழும் குடியிருப்பாக விளங்கியிருக்காது என்றே தோன்றுகிறது.

பல்லவர்கள்

கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 9 ஆம் நூற்றாண்டு வரையிலும் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்

ஆட்சி புரிந்து வந்தனர். இம்மன்னர்களது ஆட்சிக் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டம் தொண்டைமண்டலத்தினுள் அடங்கிய பகுதியாக இருந்தது. பல்லவர் காலக்குடையவரைக் கோயில்கள் செஞ்சித் தாலுகாவில் சிங்கவரத்திலும், தளவானூரிலும், மேலச்சேரியிலும் காணப்படுகின்றன. மேலும் தந்திவர்ம பல்லவனது (கி.பி. 802) கல்வெட்டொன்று செஞ்சிக்கு அண்மையிலுள்ள அருவாகூரில் இடம் பெற்றுள்ளது. இதில் அருவாகூர் சிங்கபுர நாட்டிலுள்ள ஒரு ஊர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.[2] இதற்கு பிற்பட்டகாலக் கல்வெட்டுக்களில் சித்தாமூர், சிங்கபுரம், தாயனூர், தொண்டூர். மேல் சேவூர் முதலிய பல ஊர்களும் சிங்கபுர நாட்டைச் சார்ந்தவை எனக்கூறப்பட்டிருக்கின்றன. சித்தாமூரில் பல்லவர் காலக்கல்வெட்டுக்களோ அல்லது வேறு சான்றுகளோ காணப்படவில்லையெனினும், இவ்வூர் அம்மன்னர்களது ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்புதான் என்பதில் ஐயமில்லை. ஆனால் அப்பல்லவர் காலத்தில் சித்தாமூர் என்னும் பெயருடன் குடியிருப்பு ஊர் ஏற்பட்டிருந்ததா? என்பதனையோ அல்லது மக்கள் வாழும் பகுதியாக இருந்திருந்தால் அது எந்த நிலையில் இருந்தது என்பதையோ விளக்கப் போதிய சான்றுகள் எவையும் இல்லை.

சோழர்

பல்லவப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின்னர் சோழப் பேரரசு வலிமை பெற்றுச் சிறப்புடன் தமிழகம் முழுவதையும் தனது ஆட்சிக்குள் கொணர்ந்தது. சோழ மன்னர்களாட்சியில் தென்னார்க்காடு மாவட்டத்தில் பல இந்து சமய, சமண சமயக் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இக்கோயில்களுக்குப் பல்வேறு தானங்கள் வழங்கியதையும் அறியக் கிடக்கிறோம். செஞ்சி தாலுகாவில் தாயனூர், மேல்சேவூர். பெருங்களத்தூர், வீரணாமூர், சித்தாமூர், எய்யில் மூதலிய பல இடங்களில் சோழ மன்னர்களது கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சித்தாமூரில் சோழர் காலக் கல்வெட்டுக்கள் ஐந்து காணப்படுகின்றன. முதலாவது கல்வெட்டு இராசகேசரி எனும் பட்டப் பெயர் கொண்ட முதலாம் ஆதித்தன் காலத்தையும் (கி.பி.888) அடுத்தது அவனது அரசியாகிய காடவர்கோன் பாவையினுடையதும், மூன்றுவது கல்வெட்டு இரண்டாம் இராசாதிராசன் காலத்தையும் (கி.பி.1173) சார்ந்தவையாகும்[3] சோழராட்சியில் இங்குள்ள மலைநாதர் கோயில் திருவூராம்பள்ளி எனவும், காட்டாம்பள்ளி எனவும் பெயர்பெற்றிருந்தது. இக்கோயிலில் நந்தாவிளக்கெரிக்க ஏற்பாடு செய்தமையையும் கோயிலுக்குப் பள்ளிச் சந்தமாக நிலங்கள் வழங்கியமையையும் இங்குள்ள

கல்வெட்டுக்களின் வாயிலாக அறியவருகிறோம். மேலும் விக்கிரம சோழன் ஆட்சியில் சித்தாமூர் மடத்திற்கு (கோயிலுக்கு) 2500 வராகன் மதிப்பிற்குரிய நிலங்கள் தானமாக வழங்கப்பட்டதாக மெக்கன்சி சுவடி குறிப்பிடுகிறது.[4] மேற் கூறப்பட்ட சான்று களிலிருந்து கி.பி. 9ஆம் நூற்றாண்டிலேயே சித்தாமூர் சமண சமயதலமாகத் திகழ்ந்தது எனவும், இங்குள்ள மலைநாதர் கோயில் திருவூராம்பள்ளி, காட்டாம்பள்ளி என்னும் பெயர்களைக் கொண் டிருந்ததெனவும், சோழராட்சியில் இதற்குத் தானங்கள் வழங்கப் பட்டதெனவும் நன்கு தெரிய வருகிறோம்.

சம்புவராயர்கள்

சம்புவராய சிற்றரசர்கள் சோழப் பேரரசர்களுக்கு அடங்கி சித்தூர், செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டப்பகுதிகளை ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். இப்பரம்பரை யில் வந்த அரசர்களுள் பெருமானம்பி சம்புவராயர், செங்கேணி அம்மையப்பன் சம்புவராயர், ராசகம்பீர சம்புவராயர், எதிரிலி சோழசம்புவராயர், வென்றுமண்கொண்ட சம்புவராயர். ராச நாராயணசம்புவராயர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களா கும். இரண்டாம் இராசாதிராச சோழனது ஆட்சிக் காலத் தில் (கி பி 1173-ல்) செங்கேணி சம்புவராயர் சித்தாமூரிலுள்ள மலைநாதர் கோயிலுக்குப் பள்ளிச்சந்தமாக நிலங்கள் அளித் துள்ளதைக் கல்வெட்டொன்று வாயிலாக அறிகிறோம்.[5] இந்து சமயத்தைச் சார்ந்த இச்சிற்றரசன் சித்தாமூர் சமணக்கோயி லுக்குக் தானம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே சம்புவராயர்களது ஆட்சியின் போதும் சித்தாமூர் கோயில் சிறந்த நிலையிலிருந்ததென்பது அறியற்பாலதாகும்.

பாண்டியர்கள்

சோழப் பேரரசு வலிமை குன்றி கி பி 1257 ல் முதலாம் சடா வர்ம சுந்தர பாண்டியனது ஆட்சியின் கீழ் வந்தது. செஞ்சிப் பகுதியில் தளவானூர், சிங்கவரம், எய்யில், தாழனூர் முதலிய பல இடங்களில் பாண்டியப் பேரரசர்களின் கல்வெட்டுக்கள் காணக்கிடக்கின்றன. இம்மன்னர்கள் சித்தாமூர் கோயிலுக்கு தானங்கள் வழங்கியதாகச் செய்திகள் எவையும் இல்லை ஆனல் மாறங்கியூர் என்னுமிடத்திலுள்ள கோனேரின்மை கொண்டான் எனப்படும் மாறவர்மன் பராக்கிரம பாண்டியனது கல்வெட்டில் (கி.பி. 1357) சித்தாமூர் இருங்கோளப்பாடி நாட்டிலுள்ள ஒரு ஊர் எனவும், இவ்வூரைச் சார்ந்த தியாகப்பெருமான் என்பவர் மாறங்கியூரிலுள்ள சிவன் கோயிலுக்கும் மடத்திற்கும் வழங்கப்

பட்ட நிலங்களைக் கவனிக்கும் பொறுப்பேற்றிருந்தார் எனவும் கூறப்பட்டுள்ளது.[6] இதிலிருந்து அக்காலத்தில் சித்தாமூரில் சைவசமயத்தினரும் வாழ்ந்து வந்தனரென்ற செய்தி நன்கு புலப்படுகிறது.

விசயநகர், நாயக்க மன்னர்கள்

விசயநகர அரசர்களது ஆட்சியிலிருந்துதான் செஞ்சியும், அதனை அடுத்துள்ள பகுதிகளும் வரலாற்று முக்கியத்துவம் அதிகம் வாய்ந்த இடங்களாகத் திகழலாயின, முதலாம் விருபாக்ஷனது காலத்திலேயே (கி.பி. 1383ல்) இப்பகுதி விசயநகரப் பேரரசர்க்குட்பட்டிருந்ததை ஆலம்பூண்டிச் செப்பேடும் சிங்கவரம் கல்வெட்டும் நன்கு அறிவுறுத்துகின்றன.[7] விசய நகரப் பேரரசர்கள் தங்களது பிரதிநிதிகளாகிய நாயக்கர்களைத் தமிழகத்தை ஆட்சி புரியுமாறு பணித்துள்ளனர். செஞ்சியில் நாயக்கராட்சி முதன் முதலில் கி.பி, 1464-ல் ஏற்படத் தொடங்கியது. நாயக்கர் வழிவந்த வேங்கடபதி நாயக்கர் என்பவர் செஞ்சிப் பகுதியினை கி.பி. 1478-ல் அரசு புரிந்தவர் எனவும் இவர் சமணசமயத்தவர்களை மிகவும் துன்புறுத்தியவர் எனவும் கூறப்படுகிறது.[8]

இரண்டாவது தேவராயரின் ஆட்சியின் போது (கி.பி.1433ல்) செஞ்சியில் அவரது பிரதிநிதியாக (மகாபிரதானியாக) பெருமாள் தேவதண்ட நாயக்கர் பொறுப்பேற்றிருந்தார். அச்சமயத்தில் சித்தாமூர் இவரது பெயரால் மகாபிரதான பெருமாள் தேவ தண்ட நாயகசதுர்வேதி மங்கலம் எனப்பெயரிடப்பட்டு, இறையிலி சர்வமானிய ஊராக—அதாவது வரி செலுத்தப்பட வேண்டாத ஊராகத்—திகழ்ந்தது. சதுர்வேதிமங்கலம் என்பது நான்கு வேதங்களையும் கற்றறிந்த பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்படும் ஊராகும். எனவே கி. பி. 1433–ல் சித்தாமூர் மறையோர்தும் அந்தணர்களுக்குச் சர்வமானிய ஊராக அளிக்கப் பட்டதோடு, மகாபிரதான பெருமாள் தேவதண்ட நாயக சதுர் வேதிமங்கலம் என புதுப்பெயர் கொண்டு விளங்கியிருக்கிறது.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவர் நெல்லூரிலிருந்து தெற்கே கொள்ளிடம் நதி வரையிலுள்ள பகுதியினை ஆண்டு வந்தார். இவரைப் போன்று தஞ்சை, மதுரை ஆகிய பகுதிகளிலும் வெவ்வேறு நாயக்கர் ஆட்சி நிலவியது, செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசோச்சிய நாயக்கர்களுள் முக்கியமானவர்கள் வையப்ப நாயக்கர் (கி.பி.1490), துபாகி

கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி.1490–1520), அச்சுத விசயராமச் சந்திர நாயக்கர் (கி.பி. 1520-1540), முத்தியாலு நாயக்கர் (கி. பி.1540-1550), வெங்கடப்ப நாயக்கர் (கி.பி. 1570-160) வரதப்ப நாயக்கர் (கி.பி. 1600-1620), அப்ப நாயக்கர் முதலிய வர்களாகும்.[10]

[இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அரசர்களது பெயர்களைப் பற்றியும் அவர்களது ஆட்சியாண்டுகள் பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. வெங்கடப்ப நாயக்கரும் கிருஷ்ணப்ப நாயக்கரும் ஒருவரே எனவும், இவருக்குப் பின்னரும் கிருஷ்ணப்ப நாயக்கர் என்ற பெயரில் ஓரிருவர் ஆட்சிபுரிந் தனர் எனவும் கூறப்படுகிறது]

முத்தியாலு நாயக்கருக்குப் பின்னர் ஆட்சி புரிந்த வெங் கடப்ப நாயக்கர் சித்தாமூரில் சமணக் கோயில் கட்டுவதற்கு ஒரு வணிகருக்கு அனுமதியளித்தாகக் கூறப்படுகிறது [11] இக் கோயில் இங்குள்ள பார்சுவநாதர் கோயிலாகத் தான் இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பார்சுவநாதர் கோயில் மானஸ் தம்பத்திலுள்ள கல்வெட்டு, இந்த மானஸ்தம்பம் புஸ்செட்டி (Bus Stti) என்னும் வணிகரால் சக ஆண்டு 1500-ல் (கி.பி. 1578-ல்) நிறுவப்பட்டதெனக் குறிப்பிடுகிறது.[12] எனவே வெங்கடப்ப நாயக்கரின் ஆட்சிக் காலத்திலும் (கி.பி.1570–1600) பார்சுவ நாதர் கோயில் சிறப்புற்றிருந்தது என்பது தெளிவாகிறது.

சித்தாமூரிலுள்ள சன்னியாசிக்கல் என அழைக்கப்பெறும் கல்லில் காணப்படும் கல்வெட்டொன்றில் சக ஆண்டு 1503-ல் (கி.பி. 1581-ல்) கிருஷ்ணப்ப நாயக்கரின் பிரதிநிதியாகிய பொம் மையார் பிள்ளை என்பவர் சித்தாமூரை சிதம்பரேஸ்வரர் கோயி லுக்கு (சிதம்பரம் நடராசர் கோயில்) வழிபாட்டுச் செலவு களுக்கென தானமாகக் கொடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது [13]இவ்வாறு தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் சமணக் கோயில்களையும், அவைகளுக்குச் சொந்தமான பள்ளிச்சந்த நிலங் களையும் தவிர்த்து, எஞ்சிய பகுதியாக இருக்கவேண்டுமெனக் கூறலாம். (இதன் விளக்கமான செய்தி கல்வெட்டுச் செய்திகள் என்னும் அத்தியாயத்தில் இடம் பெறுகிறது).

நாயக்கராட்சி கி.பி. 1639-ல் முடிவுற்று செஞ்சிப் பகுதி யனைத்தும் முகமதியராட்சிக்குட்பட்டது. பின்னர் சிறிது காலம் இப்பகுதி மராட்டிய அரசர்கள் வசமிருந்தது. கி. பி.1690 ஆம்

ஆண்டு ஔரங்கசீப்பின் படைத்தலைவனான ஜுல்பிக்கர் கான் செஞ்சியைக் கைப்பற்றி மக்களைத் துன்புறுத்தியும், அவர்களது செல்வங்களைக் கொள்ளையடித்தும் வந்தான் செஞ்சியை ஆண்ட மராட்டிய அரசன் ராஜாராம் (சாம்பாஜியின் தம்பி) தஞ்சையை ஆட்சி புரிந்த மராட்டிய மன்னன் இரண்டாம் ஷாஜிக்கு (Shaji) சித்தாமூர், திட்டைக்குடி, திருநாம நல்லூர், கல்லக்குறிஞ்சி, காட்டுமன்னார் கோயில், ஸ்ரீ முஷ்ணம் முதலிய பல ஊர்களை ஒற்றியாகக் கொடுத்திருந்தார். ஜீல்பிக்கர்கான் தஞ்சையரசர் ஷாஜியைத் தோற்கடித்ததன் விளைவாக அவர் சித்தாமூர் முதலான மேற்குறிப்பிட்ட ஊர்களனைத்தையும் ஜீல்பிக்கர் கானுக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.[14] எனவே கி.பி. 1700-ல் சித்தாமூர் இம்முகமதிய படைத்தளபதியின் கீழடங்கி யிருந்தது.

இதற்குப் பின்னர் முஸ்லீம் படைத்தலைவனான தாவூத்கான் செஞ்சியிலிருந்து ஆர்க்காட்டிற்குத் தலைநகரை மாற்றியமைத்து ஆர்க்காட்டு நவாப் பரம்பரையினை நிலைபெறச்செய்தார். ஆர்க்காட்டு நவாப்புகளுள் தாவூத்கான், சதத்துல்லாகான், சந்தாசாகிப், அலிதோஸ்த் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர் களாகும். பொதுவாக இவர்களது ஆட்சியில் மக்கள் இன்னலுற்றும், சைவ, வைணவ, சமண சமயக் கோயில்கள் சரிவரக் கண்காணிக்கப்படாமலும் இருந்தன. முகமதியராட்சியில் சித்தாமூர் மடத்திற்கு வழங்கப்பட்டு வந்த 100 வாரகன் மானியங்கள் நவாப்புகளாட்சியில் 40 வராகன் அளவிற்குக் குறைக்கப்பட்டது. இதனைச் சமணசமயத்தவர் நவாப்பிடம் முறையிட்டதனால் பல்வேறு துன்பத்திற்கு ஆளாயிருக்கின்ற னர்.[15]

மெக்கன்சி சுவடித்தொகுப்பினில் செஞ்சியை ஆட்சிபுரிந்த மாதங்கா என்பவர் கொலியனூர் முதலிய பல இடங்களிலிருந்த சமணக்கோயில்களை அழித்து, அவ்வூர்களில் வாழ்ந்த சமணர் களைக் கொன்றதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் அக்காலத்தில் சித்தாமூரிலுள்ள கோயில் பாழடைந்த நிலையில் இருந்ததாகவும் அறியவருகிறோம். பின்னர் இப்பகுதியில் பஞ்சம் ஏற்பட்டமை யால் இங்கு வாழ்ந்த சமணர் வேறு இடங்களுக்குச் சென்று வாழ வேண்டியதாயிற்று.[16] இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதங்கா என்பவர் எப்போது ஆட்சி செய்தார் என்பதைப் பற்றியோ அல்லது அவரது வரலாறு பற்றியோ வேறு செய்திகள் எவையும் அறிந்து கொள்வதற்கில்லை.

பிரஞ்சுக்காரர்கள் கி.பி. 1750-ல் பெரும்படையுடன் வந்து போரிட்டு செஞ்சியைக் கைப்பற்றினர். இப்போரின் போது ஒரு படைப்பிரிவினர் கிழக்கில் சித்தாமூரைச் சுற்றியுள்ள ஊர்கள் வரையிலும் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.[17] கி.பி. 1761 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களுக்கும், பிரஞ்சுக்காரர்களுக்கு மிடையே போர்மூண்டு, அதில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றமை யால் செஞ்சிப்பகுதி ஆங்கிலேயராட்சியின் கீழ்வந்தது. இவர்கள் ஆட்சியில் சித்தாமூர்க்கோயில் முக்கியத்துவம் வாய்ந்த கோயி லாகக் கருதப்படாமையால் 60 வராகன் மானியத்தை மட்டும் பெற்று வந்திருக்கிறது.[18] இக்கோயிலின் கோபுரம் கி.பி. 1865 ஆம் ஆண்டு பொது மக்களிடமிருந்து பெற்ற பண உதவியினால் அப்போது மடாதிபதியாக இருந்த அபிநவ ஆதிசேனபட்டார கரது அரும் முயற்சியால் கட்டி முடிக்கப் பெற்றது.[19]

இவ்வாறு சோழர் காலத்திலிருந்து சித்தாமூர் சமணசமயத் தலமாகத் திகழ்ந்து, சோழரின் ஆதரவினையும், பிற அரசர்களின் ஆதரவினையும் பெற்று விளங்கியிருக்கிறது. அப்போது மலைநாதர் கோயில் மட்டுமே இங்கிருந்த சமணக்கோயிலாகும். விசயநகர மன்னர்களின் பிரதிநிதிகளாகிய நாயக்கர் காலத்தில் பார்சுவ நாதர் கோயில் கட்டப்பெற்று சமணசமயம் மேலும் வளர்ச்சி யடைந்தது. முகமதியர் காலத்திலும், நவாப்புகளாட்சியிலும், அதற்குப் பின்னர் ஆங்கிலேயராட்சியிலும் இக்கோயில் நன்முகக் கண்காணிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாறிருந்த பின்னரும் பல இடையூறுகளைத் தாங்கி இக்கோயிலும், இங்குள்ள மடமும் நல்லநிலையில் இருந்து வருகின்றன. தமிழகத்தில் பிற இடங்களிலிருந்த மடங்கள் சுவடு தெரியாத வண்ணம் அழிந்த பின்பும், சித்தாமூர் மடம் மட்டிலும் இன்றுவரை நல்லமுறையில் இயங்கி வருகிறது.

ஆட்சிப் பிரிவுகள்

பல்லவ, சோழ, பாண்டியராட்சியில் தமிழகம் மண்டலம், கோட்டம், கூற்றம், வளநாடு, நாடு, ஊர் முதலிய ஆட்சிப் பிரிவு களைக் கொண்டிருந்தது. இவை தற்காலத்தில் மாநிலம், மாவட்டம், தாலுகா, பஞ்சாயத்து, ஊர் என்னும் பிரிவுகள் இருப்பதைப் போன்றவை என்று பொதுவாகக் கூறலாம். பல்லவர் காலத்தில் தொண்டை மண்டலம் இருபத்திநான்கு கோட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. செஞ்சியும், அதனைச் சார்ந்த பகுதிகளும் பல்குன்றக்கோட்டத்தைச் சார்ந்தவை யாகும். மேலும் இக்கோட்டத்தின் உட்பிரிவாகிய சிங்கபுர நாட்டில் சிங்கவரம், சித்தாமூர் முதலிய பல ஊர்கள் அடங்கி

யிருந்தன. சிங்கபுரநாடு என்னும் நாட்டுப்பிரிவு முதன் முதலில் தந்திவர்ம பல்லவனது கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[20] சித்தாமூரில் பல்லவர் காலக் கல்வெட்டுக்கள் இல்லையெனினும் வேறு இடங்களிலுள்ள சற்று பிற்காலக் கல்வெட்டுக்களிலிருந்து இப்பகுதி பல்குன்றக்கோட்டத்திலுள்ள சிங்கபுரநாட்டைச் சார்ந்தது என அறியவருகிறோம்.

சோழப் பேரரசர்களது ஆட்சியின் போது தொண்டை மண்டலம் ஜெயங்கொண்ட சோழமண்டலம் என அழைக்கப் பெற்றது. இந்த மண்டலத்தில் உத்தமசோழ வளநாட்டின் பிரிவாகிய சிங்கபுரநாட்டில் தேவனூர், மேல்சேவூர், சிங்கவரம், பெருங்களத்தூர், தாயனூர், தொண்டூர். வீரணாமூர் முதலியவை இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவை சித்தாமூருக்கு அண்மையிலுள்ள ஊர்களாகும். சித்தாமூரிலுள்ள சோழர் கல்வெட்டுக்களில் உத்தம சோழ வளநாடு குறிக்கப்படவில்லை யாயினும், இவ்வூர் சிங்கபுரநாட்டுக் கீழ்வழியிலுள்ள ஊர் எனக் கூறப்பட்டுள்ளது.[22] அதாவது சிங்கபுரநாட்டுப் பிரிவில் கிழக்கு வழியாகச் செல்லும் சாலையில் அமைந்த ஊர் சித்தாமூர் என்பதாகும். இச்சாலை தற்போது செஞ்சியிலிருந்து திண்டிவனத் திற்கு வல்லம் வழியாகச் செல்லும் சாலையாகக்கூட இருக்கலாம்.

பாண்டியராட்சியிலும் சிங்கவரம் முதலிய ஊர்கள் ஜெயங் கொண்ட சோழ மண்டலத்தில், பல்குன்றக் கோட்டத்திலுள்ள சிங்கபுரநாட்டைச் சார்ந்தவையாகவே இருந்திருக்கின்றன.[23] சித்தாமூரில் பாண்டியர் கல்வெட்டுக்கள் இல்லையெனினும் அக்காலத்தில் இவ்வூர் மேற் குறிப்பிடப்பட்ட ஆட்சிப்பிரிவு களுக்குட்பட்டதுதான் என்பதில் ஐயமில்லை. ஆனல் மாறவர்மன் பராக்கிரம பாண்டியனது ஆட்சிக்காலத்தில் (கி. பி. 1357–ல்) சித்தாமூர் இருங்கோளப்பாடி நாட்டுப்பிரிவினைச் சார்ந்த ஊர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[24] இப்பெயர் சிங்கபுர நாட்டிற்குப் பதிலாக இடப்பட்ட பெயரா அல்லது வேறுபல ஊர்களை இணைத்துப் புதியதாக ஏற்படுத்தப்பட்ட நாட்டுப் பிரிவின் பெயரா என்பதனை உறுதி செய்வதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை

சிங்கபுரநாடு என்றபெயர் செஞ்சியை அடுத்துள்ள சிங்கவரம் (சிங்கபுரம்) என்னும் ஊரின் பெயரடிப்படையில் தோன்றியிருக்க வேண்டும். சிங்கவரத்திலுள்ள கி பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த வடமொழிக் கல்வெட்டு இவ்வூரை சிம்ஹபுரம் (சிங்கபுரம்) என்று குறிப்பிடுகிறது.[25] மிக்கவாறும் சிம்மவிஷ்ணு

என்னும் பட்டப்பெயரைக் கொண்ட முதலாம் நரசிம்ம பல்லவன் (மாமல்லன்) காலத்தில் அவனது பட்டப்பெயரை ஒட்டி இவ்வூர் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.[26] இம்மன்னனது கலைப் பாணியிலேயே இங்கு குடவரைக்கோயில் உருவாக்கப்பட்டிருப்பதும் இக்கருத்தினை மேலும் வலியுறுத்துவதாக உள்ளது. இதே சிங்கபுரம் சிங்கபுரநாட்டிலுள்ள ஊர் எனவும் கல்வெட்டுக்கள் இயம்புகின்றன. எனவே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிங்கபுரம் என்னும் ஊரின் பெயரே நாட்டுப் பிரிவிற்கும் வழங்கப் பட்டிருக்கிறதென்பது தெளிவாகிறது.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இரண்டாவது தேவராயரது ஆட்சியின் போது (1433-ல்) சித்தாமூர் பெண்ணையாற்றின் வடகரையிலுள்ள உடைக்காடு நாட்டுப் பிரிவினைச் சார்ந்த ஊராகத் திகழ்ந்திருக்கிறது.[27] கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலும் இது உடைக்காடு நாடு என்றழைக்கப்பட்ட திருக்கோவலூர் பற்றில் இருந்ததாகவே கூறப்பட்டிருக்கிறது. மேலும் இவ்வுடைக்காடு நாடு, திருவதிராஜ்யத்தில் வழுதிலம்பட்டு சாவடியைச் சார்ந்த திருமுனைப்பாடி நாட்டின் ஒருபிரிவாக விளங்கியது எனவும் அறியக் கிடக்கிறோம்.[28] திருவதிகையை மையமாகக் கொண்ட இராஜ்ஜியப் பகுதியே திருவதி இராஜ்ஜியம் என நாயக்கர் ஆட்சியில் அழைக்கப்பெற்றது.[29] வழுதிலம்பட்டுச் சாவடி என்பது சிதம்பரம் உள்ளிட்ட பகுதியினைக் குறிப்பதாகும். திருமுனைப்பாடிநாடு அக்காலத்தில் திருநாவலூர், திருவெண்ணெய்நல்லூர் முதலிய பல ஊர்களைக் கொண்ட பகுதியாகும்.[30] உடைக்காடு நாடு எனப்படுவது பெண்ணையாற்றிற்கு வடக்கில் அறகண்டநல்லூர், தேவனூர், சித்தாமூர், வயிரமேகச்சதுர்வேதி மங்கலம், கிங்கிலிவாடி முதலிய பல்வேறு ஊர்களை உள்ளடக்கிய நாட்டுப்பிரிவாகும்.[31]

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, சித்தாமூர் கி.பி. 9-லிருந்து 13ஆம் நூற்றாண்டு வரை சிங்கபுர நாட்டிலும், கி.பி. 14ஆம் நூற்றாண்டில் இருங்கோளப்பாடி நாட்டிலும், பின்னர் கி.பி. 15ம் நூற்றாண்டிலிருந்து உடைக்காடு நாட்டுப் பிரிவிலும் இருந்திருப்பதை அறியவருகிறோம். குறிப்பாக எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டுவரை இந்த பெயர்கள் வழங்கப்பட்டன என்றோ, அல்லது எதற்காக இந்த மாற்றங்கள் செய்யப்பட்டன என்றோ உறுதியாகக் கூறுவதற்கில்லை. மேலும் முன்பு சிங்கபுர நாடு என அழைக்கப்பட்ட பகுதிக்குத்தான் பின்னர் இருங்கோளப்பாடி நாடு, உடைக்காடு நாடு என்று பெயர்

மாற்றம் செய்யப்பட்டதாகவும் சொல்வதற்கில்லை. கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் பெண்ணையாற்றிற்கு வடக்கிலுள்ள பல ஊர்களை ஒன்று சேர்த்து அதற்குப் புதியதாக உடைக்காடு நாடு எனப் பெயரிட்டதாகத் தெரிகிறது. சித்தாமூரும் இதில் இணைக்கப் பட்ட ஊராகும். இருங்கோளப்பாடி நாடு என்னும் பிரிவும் இவ்வாறே ஏற்பட்டதாக இருக்கலாம். ஆனால் அதனை உறுதிப் படுத்தப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. பொதுவாக ஒரு அரச பரம்பரையினர் ஆட்சி புரிந்த போது ஊர்களுக்கு இடப் பட்ட பெயர்கள் பின்னர் வந்த ஆட்சியாளர்களால் மாற்றம் செய்யப்படுவதும், சில சமயத்தில் ஆட்சிப் பிரிவுகளின் எல்லைகள் மாற்றியமைக்கப் படுவதும் பண்டைக் காலத்திலேயே இருந்த வழக்கமாகும். இது போன்று பல்வேறு காரணங்களால் பெயர் மாற்றம் ஏற்பட்டு வருவதை இன்றும் காணலாம்.

அடிக்குறிப்புகள்

1. ARE, 238/1904
2. S11, vol. XII, No 42
3. S11, vol. VII, Nos. 828, 829, 830.
4. Mackenzie Manuscripts, (ed. T. V. Mahalingam) Mss. No. 11 Sec. 5.
5. SII, vol, VII, No 830
6. ARE, 102/1935-36
7. Epigraphia Indica (E.C.), vol, III, PP. 224-229 and ARE, 234/1904.
8. Gazetter of South Arcot District, P. 77
9. ARE 61,64/1935-36
10. C.S. Srinivasachari, A History of Gingee and its rulers, P. 82
11. Ibid, P. 89,
12. ARE, 517, 518/1937-38
13. ARE, 68/1935-36
14. C. S. Srinivasachari, Op. cit, p. 316.
15. Mackenzie Manuscripts, Mss 11, Sec. 5
16. Ibid, Mss. 12, See 8
17. C. S. Srinivasachari, Op cit, p 513-Notes.

18. Mackenzie Manuscripts, Mss. 11, Sec. 5
19. ARE, 520/1937-38
20. SII, vol, 12, No. 42
21. ARE, 360/1909, 221, 231/1904, 241/1927-28, 520/1937-38, 83/1934-35
22. SII, vol, VII, No. 828
23. ARE, 231, 226/1904
24. ARE, 102/1935-36
25. ARE, 284/1916
26. K. R. Srinivasan, Cave temples of the Pallavas, p. 115
27. ARE, 61/1935-36
28. ARE, 68/1935-36
29. ARE, 41/1922
30. ARE, 310, 311/1902
31. ARE, 67, 68/1935-36, 232/1902, SII, vol. VII, Nos. 1018, 1023.

4

கோயில்கள்

சித்தாமூரிலுள்ள இரண்டு சமணக்கோயில்களுள் ஒன்று மலைநாதர் கோயில் எனவும, மற்றொன்று பார்சுவநாதர் கோயில் எனவும் அழைக்கப்பெறும். பெரிய அளவிலான பார்சுவநாதர் கோயிலின் பின்புறம் அமைந்துள்ள மலைநாதர் கோயிலின் தோற்றம் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி என அறிய வருகிறோம். இங்குள்ள கல்வெட்டுக்களும், சிற்பங்களின் கலைப் பாணியும் கி.பி. 9ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவையாகும்.[1] அக்காலத்தில் இங்குள்ள பாறையின் முகப்பினைச் சீர்செய்து அதில் சிற்பங்கள் வடிக்கப்பெற்றிருக்கின்றன. இச்சிற்பங்கள் ரிஷபநாதர், நேமிநாதர், பார்சுவநாதர், பாகுபலி ஆகியோரைக் குறிப்பனவ்யாகும். இத் திருவுருவங்களடங்கிய கோயிலைத் தற்காலத்தில் மல்லிநாதர் கோயில் என அழைக்கின்றனர். ஆனால் இது மல்லிநாத தீர்த்தங்கரருக்காகத் தோற்றுவிக்கப்பட்ட கோயில் அல்ல. பாறையினை (மலையினை) செதுக்கித் தோற்றுவிக்கப்பட்டமையால் மலைநாதர்கோயில் எனவும், பின்னர் அப்பெயர் மருவி மல்லிநாதர் கோயில் எனவும் அழைக்கப் பெற்றிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் இக்கோயில் காட்டாம்பள்ளி எனப்பெயர் பெற்றிருந்ததாக அறியக் கிடக்கிறோம்.

கி.பி 9ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரையிலும் மலைநாதர்கோயில் சிறப்புடையதாகத் திகழ்ந்தமைக்கு இங்குள்ள கல்வெட்டுக்களே சான்றுகளாக விளங்குகின்றன.[2] அதற்குப் பின்னர் இது எந்த நிலையிலிருந்தது என்பது பற்றி விளக்குவதற்குரிய சான்றுகளில்லை.

கி.பி 16ஆம் நூற்றாண்டில் பார்சுவநாதர்கோயில் பெரிய அளவில் கட்டப்பட்டு சிறப்புடன் விளங்கலாயிற்று. எனவே மலைநாதர் கோயிலைக்காட்டிலும் இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 15ஆம் நூற்றாண்டுவரை இங்கு சமண சமயம் அதிக செல்வாக்கின்றி இருந்தமையால், மலைநாதர்கோயில் வழிபாடற்ற நிலையில்கூட இருந்திருக்கலாம். மீண்டும் கி.பி. 16 ஆம்

நூற்றாண்டில் சமணசமயம் இங்கு நிலைபெறத் தொடங்கியபோது பார்சுவநாதர் கோயில் பெரியதாக்கப் பெற்றிருக்கிறது.

சித்தாமூரில் நிலவும் செவிவழிச் செய்தியும் இக்கருத்தினை மெய்ப்பிக்கும் வண்ணம் உள்ளது. அதாவது, சோழராட்சியில் இங்கு சமணசமயத்தவர் முதன்முதலாகக் குடியேறி வாழ்ந்து வந்தனரெனவும், பின்னர் இச்சமயத்தவர் பல்வேறு இன்னல் களுக்கு ஆளாகி வேறிடங்களுக்குச் சென்று வாழத் தொடங்கினர் எனவும் கூறப்படுகிறது. அதன் பிறகு பல ஆண்டுகள் கழித்து நாட்டில் அமைதி நிலவி ஒற்றுமை ஏற்பட்டபோது, வெவ்வேறு இடங்களில் வாழ்ந்த சமணர் சித்தாமூரில் வந்து குடியேறத் தொடங்கினர். அப்போதுதான் வீரசேனாச்சாரியார் மடத்தினைத் தோற்றுவித்து சமணம் நிலைபெற வழிகோலினர் எனவும் கூறப் படுகிறது. இச்செய்தியினை மெக்கன்சி சுவடியும் சற்றுமாறுபட்ட விதத்தில் கொண்டு விளங்குவதைக் காணலாம். இவற்றை எல்லாம் அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது, முதலில் மலைநாதர்கோயில் சிறப்புற்றிருந்தமையும், கி பி. 16ஆம் நூற் றாண்டிலிருந்து பார்சுவநாதர் கோயில் முக்கியத்துவம் பெற்றமை யும் புலப்படுகிறது. மேலும் சித்தாமூரில் சோழராட்சியில் சிறப் புற்று விளங்கிய சமணசமுதாயம் அரசியல் சூழ்நிலைகளினால் செல்வாக்கு குன்றியது என்பதுவும், கி பி. 16ஆம் நூற்றாண்டில் மீண்டும் சமணசமயத்தவர் குடியேறி தங்களது சமயத்தினையும், பண்பாட்டினையும் நிலை நிறுத்தினர் என்பதும் நன்கு தெரிய வருகிறது.

கட்டடக்கலை : மலைநாதர்கோயில்

மலைநாதர்கோயில் தற்போது கருவறை, முகமண்டபம், அதற்கு மேற்கில் மற்றொரு மண்டபம் ஆகியவற்றைக்கொண்டு வடக்குநோக்கியதாகத் திகழ்கிறது. ஆனால் இவற்றைச் சுற்றிக் கட்டப்பெற்ற திருச்சுற்று மதிலுடன் கூடிய கோபுரம் கிழக்குத் திசையினை நோக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. கருவறையுள்ள இடத்திலிருந்த பாறையின் முகப்பினில் பார்சுவநாதர், பாகுபலி, நேமிநாதர், ஆதிநாதர் ஆகிய தீர்த்தங்கரர்களது சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. பிற்காலத்தில் இப்பாறையின் பின் பகுதியினை வெட்டி அகற்றிவிட்டு, சிற்பங்களைக் கொண்ட முன் பகுதியினை ஒட்டி கருவறையின் பின்புறச் சுவர் எழுப்பப் பெற்றுள்ளது. இந்த கருவறையும், அதனை அடுத்துள்ள மண்ட பங்களும் 19ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியினைத்தான் கொண்டு விளங்குகின்றன. எனவே இவற்றில் பண்டைய கட்டடக் கலையின் சிறப்பு அம்சங்களைக் காண இயலாது. இக்கோயில்

தோன்றிய ஆரம்பகாலத்தில், அதாவது கி.பி. 9ஆம் நூற்றுண்டில், பாறைச் சிற்பங்களை ஒட்டி சிறிய மண்டபம் ஒன்று கட்டப்பெற்றிருக்க வேண்டும். இதற்கு அடுத்தாற்போன்று அறநெறிகளைப் போதிக்கும் ஓத்து உரைக்கும் மண்டபமும் இருந்திருக்கவேண்டும். ஆனுல் 19ஆம் நூற்றுண்டில் இவை முற்றிலும் புதுப்பிக்கப்பட்டு தற்போதுள்ள அமைப்பினில் கட்டப்பட்டிருக்கிறது. அப்போதுதான் திருச்சுற்று மதிலும், கோபுரமும் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும்.

மலைநாதர்கோயில் மண்டபத் தூண் ஒன்றில் அனுமன் சிலையும், மற்ருென்றில் நாமக்குறியும் வடிக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சமணசமயத்தினைச் சாராத இச்சிற்பங்களைக் கொண்ட தூண்கள் மிக்கவாறும் ஒரு வைணவ சமயக் கோயிலிலிருந்து எடுத்துவரப் பெற்றிருக்கவேண்டும். இத்தூண்களைப் போன்று பார்சுவநாதர் கோயிலின் அருகிலுள்ள மண்டபமொன்றிலுள்ள தூண்களில் வைணவ சமயச்சின்னங்களான சங்கு, சக்கரம் ஆகியவை பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் வேறு கோயிலிலிருந்து கொணரப்பட்டவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

பார்சுவநாதர் கோயில்

பார்சுவநாதர் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், மகாமண்டபம், அதனை ஒட்டியமைந்துள்ள தருமதேவியின் கருவறை ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. இவற்றிற்கு வடபுறத்தில் நந்தவனமும், கிழக்கில் பிரம்மதேவர், கணதரர், சரஸ்வதி, பத்மாவதி, சுவாலமாலினி ஆகியோரின் சிறிய கருவறைகளும் காணப்படுகின்றன. இதற்கு கீழ்ப்புறம் நேமிநாதர் கருவறையும், அதனை ஒட்டி சித்ரகூட மண்டபமும், உள்ளன. இவற்றையடுத்து மகாவீரர் கருவறையும், அலங்கார மண்டபமும் கட்டப்பட்டிருக்கின்றன. மானஸ்தம்பம், பலிபீடம், கொடிமரம் ஆகியவை கோபுரத்திற்கு அருகில் இடம் பெற்றிருக்கின்றன. இவையனைத்தையும் சுற்றி உயரமான திருச்சுற்று மதிலும், அதன் கீழ்ப்புறத்தில் நுழைவாயிலும் இருக்கின்றன.

இக்கோயிலில் பார்சுவநாதர் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், மானஸ்தம்பம் ஆகியவை கி.பி. 16ஆம் நூற்றுண்டுக் கலைப்பாணியைக்கொண்டு மிளிர்கின்றன. எஞ்சியுள்ள கருவறைகளும், மண்டபங்களும் 19ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டவையாகும்.

பார்சுவநாதர் கருவறை, அதனை அடுத்துள்ள இருமண்டபங்கள் ஆகியவை உயரமான அடித்தளத்தைக் கொண்டவையாகும். இந்த அடித்தளம் உபபீடம், அதிட்டானம் என்னும் இருபெரும் பகுதிகளைக்கொண்டுள்ளது. அடியிலுள்ள உபபீடப்பகுதி உபானம், பத்மபத்ரம், கண்டரம், கபோதபத்ரம் என்னும் பிரிவுகளையும்; அதற்குமேலுள்ள அதிட்டானப்பகுதி பத்மபந்தம், முப்பட்டைக்குமுதம், கண்டம், கபோதபந்தம், வேதிகை, பட்டிகைமுதலிய பிரிவுகளையும் உடையதாகும். இவ்வாறு பல்வேறு பிரிவுகளாக அலங்கார அமைப்புகளுடன் அடித்தளம் விளங்குவதால் இது மிகவும் உயரமாக அமைந்துள்ளது.

அடித்தளத்திற்கு மேலுள்ள சுவர்ப்பகுதியினை சுவர்த்தூண்கள், (Pilasters) தேவகோட்டங்கள், கோட்டபஞ்சரங்கள் முதலியவை அணிசெய்கின்றன சில சுவர்த்தூண்கள் பட்டை தீட்டப்பெற்ற உருண்டையாகவும், எஞ்சியவை சதுரவடிவுமுடையதாகவும் காணப்படுகின்றன இத்தூண்களின் மேலுள்ள பலகைப்பகுதி வட்டவடிவமாகவும், தாமரை மலரை ஒத்தும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இவற்றின் போதிகையிலிருந்து வாழைப்பூ அமைப்பு கீழுறநோக்கித் திகழ்வதைக் காணலாம். கருவறை, மண்டபங்கள் ஆகியவற்றின் சுவர்களுக்கு மேலாகவுள்ள விமானப்பகுதி செங்கல், காரை ஆகியவற்றால் கட்டப்பெற்றதாகும். இது படிப்படியாக அகலம் குறைந்து கொண்டு இறுதியில் உருண்டை வடிவ சிகரத்தில் முடிவடைகிறது. சிகரத்தின்மேல் ஒரு விமான கலசமும் வைக்கப்பட்டிருக்கிறது. விமான மேற்பகுதியினை தீர்த்தங்கரர் சுதை உருவங்களும், புராணத்தில் வரும் நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் சுதை உருவங்களும் அலங்காரம் செய்கின்றன.

முகமண்டபத்திலுள்ள தூண்கள் பெரிய அளவில் உயரமானதாகத் திகழ்கின்றன. இவற்றின் கீழ்ப்பகுதியில் சமணசமய சிற்பங்களும், மேற்பகுதியில் கூரையை ஒட்டி யாளி சிற்பங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய யாளி சிற்பங்களை விசயநகர-நாயக்கர் காலமண்டபங்கள் பலவற்றிலும் காணலாம்

இவை தவிர எஞ்சியுள்ள கருவறைகளும், மண்டபங்களும் 19 ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியினைக்கொண்டு மிளிர்கின்றன. இவற்றுள் அலங்காரமண்டபம் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட தூண்களைப் பெற்றிலங்குகிறது. ஒவ்வொரு தூண்களிலும் தீர்த்தங்கரர், யக்ஷன், யக்ஷி, அஷ்டமங்கலச் சின்னங்களைக் கையிலேந்திய மகளிர் சிற்பங்கள் முதலியவை அழகுறச் செதுக்கப்

பட்டிருக்கின்றன. காலத்தால் இவை பிந்தியவையாதலால் அவை பற்றிய விரிவான செய்திகள் இங்கு கூறப்படவில்லை.

நந்தவனத்தை ஒட்டியமைக்கப் பெற்றுள்ள பிரம்மதேவர், கணதரர், சரஸ்வதி, பத்மாவதி, சுவலாமாலினி ஆகியோரது கருவறைகளும் அவற்றிலுள்ள சிற்பங்களும் ஸ்ரீபாலையா என்னும் மாவட்ட உதவி ஆட்சியாளரின் மனைவி குணமாலையம்மாள் அவர்களால் கட்டப் பெற்றதாகக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது [3]

கோபுரம்

பார்சுவநாதர்கோயிலின் கோபுரம் ஏழுஅடுக்குகளைக் கொண்டு ஏறத்தாழ எழுபது அடி உயரத்தினை உடையதாகக் காணப்படுகிறது. இக்கோபுரத்தின் அடிப்பகுதியிலிருந்து கொடுங்கை வரையிலும், அதாவது நுழைவாயில் நிலையின் மேற்பகுதிவரையிலும், கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு மேலுள்ள ஒவ்வொரு அடுக்குகளும் செங்கல், காரை முதலியவற்றால் கட்டப் பெற்றவையாகும்.

கோபுரத்தின் அடித்தளம் உபானம், கண்டம், பட்டி, குமுதப்படை, கபோதம் முதலிய பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. இதற்கு மேலுள்ள சுவர்ப் பகுதியினை கும்ப பஞ்சரங்கள், கோட்ட பஞ்சரங்கள், சுவர்த் தூண்கள் முதலியவை அணி செய்கின்றன. கோட்டங்களில் தீர்த்தங்கரர் சிற்பங்கள் எவையும் தற்போது காணப்படவில்லை. கும்பபஞ்சரங்கள் அடிப்பகுதியில் குடம் போன்ற அமைப்பினைப் பெற்று அலங்கார வேலைப்பாடுகளுடன் மிளிர்கின்றன. இதற்கு மேலாக கொடுங்கை சிறிய கூடு அமைப்புகளை உடையதாகத் திகழ்கிறது கதவு நிலைகளில் கங்கை, யமுனை ஆகிய நதி தேவதைகள் எழிலுற நின்ற வண்ணம் காட்சியளிக்கின்றனர். இவர்களுடைய தலைக்கு மேற்பகுதியிலிருந்து கொடிகளின் அமைப்பு வட்ட வடிவங்களாக, கதவு நிலையின் மேற்பகுதி வரையிலும் செல்லுகிறது.

கருங்கல் பகுதிக்கு மேலாகவுள்ள கோபுரத்தின் ஏழு அடுக்குகளும் படிப்படியாக அகலம் குறைந்து சிகரத்தில் முடிவடைகிறது. இத்தளங்களில் கூடம், சாலை என்னும் சிறிய கோயில் வடிவங்கள் வரிசை வரிசையாக இடம் பெற்றிருக்கின்றன. இக்கோபுரத்தில் வடபுறமும், தென்புறமும் தீர்த்தங்கரர், யக்ஷி முதலியோரது சுதை உருவங்கள் இடையிடையே வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கோபுரத்தின் உச்சிப் பாகத்தில் கூண்டு வடிவ சிகரமும், அதன் இருபுறங்களில் பெரிய அளவிலான சிங்கமுகவளைவுகளும்

இடம் பெற்றுள்ளன. கூண்டு வடிவ சிகரத்தில் முத்து மாலைகள் கோர்க்கப்பட்டது போன்ற அலங்காரம் உள்ளது. இச்சிகரத்தின் மீது ஏழு கோபுர கலசங்கள் எழிலுறும் வண்ணம் காட்சியளிக்கின்றன. இந்த கோபுரம் கி. பி 1865ஆம் ஆண்டில் சித்தாமூர் மடத்தின் தலைவராக இருந்த **அபிநவ ஆதிசேன பட்டாரகரால்,** பொது மக்களிடமிருந்து பெற்ற பண உதவியினால் கட்டப் பெற்றது என அறிய வருகிறோம்.[4]

தேர்வடிவ மண்டபம்

பார்சுவநாதர் கோயில் கோபுரத்திற்கு வடபுறம் தேரின் அமைப்பினையுடைய மண்டபம் ஒன்று காணப்படுகிறது. அடித் தளத்துடன் கூடிய மாடம் போன்ற அமைப்பின்மீது இந்த மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. மண்டபத்தின் கூரையினை நான்கு கூட்டுத்தூண்கள் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு கூட்டுத்தூணும் மூன்று சிறிய உட்தூண்களைக் கொண்டு அழகிய செதுக்கு வேலைகளுடன் ஒரேகல்லில் செதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மண்டபத்தின் கூரை தாழ்வாரம் போன்று பக்கவாட்டில் பரந்து விரிந்ததாகவும், அதன் உட்பகுதியில் வீட்டுத்தாழ்வாரத்திற்குப் பயன்படுத்தப்படும் பட்டிகைகளைப் போன்று கல்லில் பட்டிகைகள் செதுக்கப்பட்டிருப்பதும் சிறப்பான தன்மைகளாகும். பொதுவாக விசயநகர அரசர்களது ஆட்சியிலிருந்து கோயில்களிலுள்ள மண்டபங்களில் இத்தகைய அமைப்புகளைக் காணலாம்.

இம்மண்டபத்தின் மேற்பகுதியில் எண்கோணவடிவ சிகரமும், அதன்மீது கலசமும் இடம்பெற்றிருக்கின்றன. இச்சிகரத்தைத் தவிர எஞ்சியுள்ள பகுதிகள் கல்லினால் கட்டப்பட்டவையாகும். சிகரத்தின் கழுத்துப்பாகத்திற்கு அருகில் நான்கு மூலைகளிலும் நான்கு சிங்கத்தின் சுதை உருவங்களும், அவற்றிற் கிடைப்பட்ட பகுதியில் தீர்த்தங்கரரின் திருவுருவங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன மண்டபத்தின் முன்பகுதியுடன் இணைந்து இருயானைச் சிற்பங்களும் உள்ளன. இவை தேர்போன்ற அமைப்புடைய மண்டபத்தினை இழுத்துச் செல்வது போன்று தோன்றுகிறது. துதிக்கைகளைத் தொங்கவிட்டு நிற்கும் இந்த யானைச்சிற்பங்கள் அலங்கார வேலைப்பாடு உடையனவாய் இருக்கின்றன. இச்சிற்பங்கள் செஞ்சி மலைக்கோட்டையிலுள்ள வெங்கடரமண சுவாமி கோயிலில் முன்பு இடம் பெற்றிருந்தன எனவும், பின்னர் 1860ஆம் ஆண்டு சென்னை மாகாண அரசில் மாவட்ட உதவி ஆட்சியாளராகப் பணிபுரிந்த ஸ்ரீபாலையா என்னும் சமண அதிகாரி இவற்றை இங்குகொண்டு வர ஏற்பாடுசெய்து, இத்தேர்

மண்டபத்தில் இடம் பெறுமாறு செய்தார் எனவும் கூறப்படுகிறது.[5] இதனை நிலைநாட்டும் வகையில், இதற்கு அடுத்தாற் போன்றுள்ள மண்டபத் தூண்களில் வைணவ சமயச் சின்னங்களும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மேலும் ஸ்ரீபாலையா அவர்களின் மனைவியும் பார்சுவநாதர் கோயில் வளாகத்தினுள் பிரம்மதேவர், கணதரர், சரஸ்வதி, பத்மாவதி, சுவாலாமாலினியம்மன் ஆகியோருக்கு சிறிய கருவறைகள் கட்டியிருப்பதும் நினைவு கூரத்தக்கதாகும்.

பொதுவாக தமிழகத்தில் பிற்காலச் சோழராட்சியிலும், விசயநகர மன்னர்களாட்சியிலும் பலகோயில்களில் மண்டபங்கள் தேர் போன்று அமைக்கப்பட்டிருப்பதையும், அவற்றை குதிரைகள் அல்லது யானைகள் இழுத்துச் செல்வதுபோன்று உருவாக்கியிருப்பதையும் காண இயலும். தாராசுரம், திரிபுவனம், மேலைக் கடம்பூர் முதலிய பல இடங்களிலுள்ள சிவன்கோயில்களில் இச் சிறப்புத் தன்மையினைக் காணலாம்.

சித்தாமூரிலுள்ள தேர்வடிவ மண்டபத்தினை அடைய ஏராளமான படிக்கட்டுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. மண்டபத்தின் நடுவில் சற்று உயரமான பீடம் ஒன்றும் உள்ளது. சித்தாமூரில் நடைபெறும் பத்தாவது நாள் திருவிழாவின் போது தெய்வத் திருவுருவங்களை இம்மேடையில் வைத்து அபிஷேகம் செய்வது வழக்கமாகும். மண்டபமே தேர்போன்ற அமைப்புடையதாக இருப்பதால், தெய்வப் படிமங்கள் தேரில் பவனிவருவதைப் போன்று காட்சியளிக்கும். இந்த மண்டபத்திலுள்ள யானைச் சிற்பம் ஒன்றை ஒட்டி பிற்காலத்தில் மதில் ஒன்றும் எழுப்பப்பட்டிருக்கிறது.

மானஸ் தம்பம், பலிபீடம், கொடிமரம்

பார்சுவநாதர் கோயில் கோபுரவாயிலுக்கு அருகில் கொடிமரமும், பலிபீடமும், மானஸ்தம்பமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உயரமான கொடிமரம் செப்புத்தகடால் மூடப்பெற்று, அதன் அடிப்பகுதியில் நான்கு புறமும் தர்மதேவி, சர்வானயக்ஷன், தர்மச்சக்கரம், முக்குடை ஆகிய உருவங்களைப் பெற்றிலங்குகிறது. பலிபீடம் சற்று உயரமான மேடையாக கொடிமரத்திற்கு அடுத்தபடியாகக் காணப்படுகிறது. இதற்கு அடுத்தாற் போன்று ஏறத்தாழ ஐம்பது அடி உயரமுள்ள மானஸ்தம்பம் நிறுவப்பட்டுள்ளது, ஒற்றைக்கல்லினாலான இந்த ஸ்தம்பத்தின் மேற்பகுதியில் தனியாகச் செய்து பொருத்தப்பெற்ற கோயில் அமைப்பினைக்

காணலாம். இந்த மானஸ்தம்பம் கி.பி. 1578ஆம் ஆண்டில் புஸ்செட்டி என்பவரால் நிறுவப்பெற்றிருக்கிறது.[6]

வடக்கு மண்டபம்

கோபுரத்திற்குச் சற்று வடகிழக்கில் யானைச் சிற்பத்தினைக் கொண்ட தேர்மண்டபத்தினையடுத்து, பல தூண்களைக்கொண்ட மண்டபம் ஒன்றுள்ளது. இதன் உட்பகுதியில் சுவர்கள் எழுப்பப் பட்டு, தற்போது தூண்கள் நிற்கும் வெளிப்பகுதி திண்ணை போன்று காணப்படுகிறது. இத்தூண்கள் சிலவற்றின் அடிப் பகுதியில் சங்கு, சக்கரம் ஆகிய வைணவசமயச் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இம்மண்டபம் வைணவக் கோயில் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தூண்களைக்கொண்டு கட்டப் பட்டிருக்கிறதென்பது தெளிவாகும். மிக்கவாறும் இவையும் தேர்மண்டபத்திலுள்ள யானைச் சிற்பங்களைப்போன்று, செஞ்சி யிலுள்ள வெங்கடரமணசுவாமி கோயிலிலிருந்து கொண்டுவரப் பெற்றவையாக இருக்கவேண்டும். இல்லையெனில் வேறு ஏதாவது ஒரு வைணவக்கோயிலிலிருந்து கொண்டுவரப் பெற்றதாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும் சமணசமயத்தொடர்புடைய மண்டபத்தில் வேறு சமயக்கோயிலிலிருந்து பெறப்பட்ட தூண்கள் இடம்பெற்றிருப்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். இந்த தூண்கள் இடிந்து கிடந்த வைணவக் கோயிலில் கண்காணிக்கப் படாமல் பயனற்றுக் கிடந்தமையால் கொண்டு வரப்பட்டவையா என்பதனை உறுதியாகக் கூறுவதற்கில்லை.

தேர்முட்டி மண்டபம்

சித்தாமூர் கோயிலில் மட்டும் தேர்த் திருவிழா நடைபெறு கிறது. இவ்விழாவிற்காக இங்கு மரத்தினால் செய்யப்பட்ட தேர் ஒன்றும் உள்ளது. இந்த விழாவின் போது தீர்த்தங்கரர் உலோகத் திருவுருவத்தினை அலங்கரித்துத் தேரில் வைத்து ஊர்வலமாக இழுத்துச் செல்வது வழக்கமாகும். முதலில் தீர்த்தங்கரர் படிமத் தினை உயரமான தேர் முட்டி மண்டபத்தில் வைத்து வழிபாடு செய்தபின்னர், தேரில் ஏற்றுவது மரபாகும். தேர் உயரமான தாக இருப்பதால், கீழிருந்து அதிக எடையுள்ள திருவுருவத்தை அதில் எளிதாக ஏற்றிவைக்க முடியாது. எனவேதான் மண்ட பத்தில் உலோகத்திருவுருத்தினை அலங்கரித்து வைத்தபின்னர், அதனை ஒட்டியவாறு தேரினை இழுத்து நிறுத்தி எளிதில் ஏற்றி வைக்க முடிகிறது. தேரானது மண்டபத்தினை முட்டி (ஒட்டி) நிற்பதால், இம்மண்டபத்தினைத் தேர்முட்டி மண்டபம் என அழைக்கின்றனர்.

அடிக்குறிப்புகள்

1. C. Sivaramamurti, Panorama of Jain Art-South India, P, 42
2. 'கல்வெட்டுச் செய்திகள்' எனும் அத்தியாயத்தில் இது பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.
3. படி எடுக்கப்படாத இக்கல்வெட்டு ஆசிரியரால் படிக்கப்பெற்றதாகும்.
4. Annual Report of Epigraphy, 520/1937-38
5. C. S. Srinivasa Chari, A History of Gingee of its rulers, p, 7
   Also Gazetter of South Arcot District, P, 367
6. Annual Report of Epigraphy, 517/1937-38

5

சிற்பங்கள்

இந்திய நாட்டில் தோன்றிய சமயங்களுள் குறிப்பாக சமணமும், புத்தமும் உருவ வழிபாட்டிற்கு இறைத் திருவுருவங் களுடன், தர்மச்சக்கரம், சுவஸ்திகம், பாதம், சிம்மாசனம், போதி மரம் முதலியவற்றையும் வழிபாட்டுச் சின்னங்களாகக் கருது கின்றன. எனவே தான் கிறித்தவ சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் சைத்தியம், விகாரம் ஆகியவற்றில் இத்தகைய சின்னங்கள் சிற்பங்களாக வடிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம் காலப்போக்கில் சமுதாய அமைப்புகளுக்குள் வேறுபட்ட கருத்துக் கள் ஏற்பட்டமையாலும், சமயங்களுக்குள்ளே உட்பிரிவுகள் தோன்றியமையாலும், சமயதத்துவங்களில் புதிய கருத்துக்கள் புகுத்தப்பட்டமையைத் தொடர்ந்து இறைவனின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய வேறுவேறு கதைகளும் எழலாயிற்று. சாதகக்கதைகள், புராணங்கள் ஆகியவை இத்தகைய அம்சங் களைக்கொண்டு விரிவாக எழுதப் பெற்றமையால், அவற்றை சாதாரணமக்களும் புரிந்துகொண்டு சமயத்தின்பால் மேலும் ஈர்க்கப்படலாயினர். அக்காலத்தில் ஏராளமான கோயில்களும் அவற்றை அணிசெய்யும் சிற்பங்களும் மிகுதியாக உருவாக்கப் படலாயின. சிற்ப வடிவ அமைப்புகள் முறையாக வகுக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் திருவுருவங்களை அமைத்து வழிபடு முறையும் நெறிப்படுத்தப்பட்டிருக்கின்றது. சமயமும், கலை யுணர்வும் ஒன்றியதன் விளைவாக எழில் மிக்க கலைச்செல்வங்கள் படைக்கப்படலாயின.

தமிழகத்தில் கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்துதான் கல்லிலு லான சிற்பங்கள் வடிக்கப்பட்டதென அறிஞர்கள் கருது கின்றனர்.[1] அதற்கு முன்பு இறந்தவர்களின் நினைவுச் சின்னங் களுக்கு மட்டும் கருங்கல் பயன்படுத்தப்பட்டதாக அறிய வருகிறோம் சமணசமய சிற்பங்களும் கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்கு முந்தியவை தமிழகத்தில் கிடைக்கப்பெறவில்லை என்பதும் குறிப் பிடத் தக்கதாகும். ஏழாம் நூற்றாண்டிலிருந்து குடைவரை சிற்பங்களும், பாறைச் சிற்பங்களும், தனிச் சிற்பங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சித்தாமூரில் பாறைச் சிற்பங் களும், தனிச்சிற்பங்களும், தூண்களை அலங்கரிக்கும் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன.

மலைநாதர் கோயில் சிற்பங்கள்

மலைநாதர்கோயில் சிற்பங்களுள் கருவறையில் காணப் படுபவை பாறைச்சிற்ப வகையினைச் சார்ந்தவையாகும். அதாவது பாறையின் முகப்பினைச் சீர்செய்து அவற்றில் சிற்பங் களைப் படைப்பதால் அவை பாறைச் சிற்பங்கள் எனப்பெயர் பெறுகின்றன. இங்கு முதலாவது தீர்த்தங்கரராகிய **ரிஷபநாதர்,** இருபத்திரண்டாவது தீர்த்தங்கரராகிய **நேமிநாதர்** இருபத்தி மூன்றாவது தீர்த்தங்கரராகிய **பார்சுவநாதர்,** ரிஷபநாதரின் இரண்டாவது மைந்தராகிய பாகுபலி என அழைக்கப்பெறும் **கோமதீஸ்வரர்** ஆகியோரது அழகிய திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் ஒவ்வொன்றும் தூண்கள் போன்ற அமைப்புகளுக்கிடைப்பட்ட பகுதியில் வரிசையாகச் செதுக்கப் பட்டிருக்கின்றன. இவையன்றி கோபுரத்திற்கு இருபுறம் சங்கநிதி, பத்மநிதி ஆகியோரது புடைப்புச்சிற்பங்களும் வைக்கப் பட்டிருக்கின்றன.

நேமிநாதர்

கருவறையிலுள்ள சிற்பத்தொகுதியில் மேற்குப்புறம் பீடம் ஒன்றில் அமர்ந்தவாறு நேமிநாதர் கம்பீரமாகக் காட்சியளிக் கிறார். இவரை தவறாக மகாவீரர் என கலைவரலாற்றாசிரியர் சி. சிவராமமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.[2] நேமிநாததீர்த்தங்கரரின் இருகரங்களும் ஒன்றன்மேல் ஒன்றாக வைக்கப்பட்டு தியான முத்திரையைக் குறித்த வண்ணம் இருக்கின்றன. பரந்த உடல் அமைப்பும், அமைதியான முகச்சாயலும், வட்டவடிவ அமைப்பு களையுடைய சுருண்ட தலை முடியும், சிறிது மூடிய கண்களும், நீண்டு வடிக்கப்பெற்ற காதுகளும் இச்சிற்பங்களுக்கு உயிரூட்டுவன வாகத் திகழ்கின்றன. மெய்யறிவின் இலக்கணமாகத் திகழும் இவரது முகத்தில் அமைதி, கனிவு ஆகிய குணநலன்களைச் சிற்பக் கலைஞன் திறம்படச் சித்தரித்துள்ளான்.

நேமிநாதரது இடதுபுறம் அவரது யக்ஷியாகிய குஷ்மாண்டினி என அழைக்கப்பெறும் **தருமதேவியின்** எழிலார்ந்த சிற்பம் ஒன்று இடம் பெற்றிருப்பதைக் காணலாம். வலது காலினைத் தன் வாகனமாகிய சிங்கத்தின் மீது ஊன்றியும், இடது காலினைப் பின்னோக்கி மடக்கிவைத்தும், மூன்று கோண உடல் வளைவுடனும் (திரிபங்கநிலையில்) தீர்த்தங்கரரை நோக்கி சற்று வலப்புறம் சாய்ந்தவாறு அழகுறக் காட்சியளிக்கிறாள். இவளது வலதுகை தாமரை மலரைப் பெற்றும், இடதுகை தலைக்கு மேலாகத் தூக்கப்பட்டு அஞ்சலி செலுத்தியவாறும் இருக்கின்றன. இடதுகையினை ஒட்டி கமுகும் காணப்படுகிறது, இவளது தலையில்

அழகுமிக்க மணிமகுடம், காதுகளில் தடித்த குண்டலங்கள், கழுத்தில் மணிமாலைகள், கைகளில் வளைகள், இடையினில் முத்துக் கள் பதித்த மேகலை முதலிய அணிகலங்கள் இடம்பெற்றிருக் கின்றன. புன்முறுவல் பூத்தமுகமும், நெடியகண்களும், பருத்துத் திரண்டு சற்றுமுன்தொங்கிய மார்பகங்களும், ஒடுங்கிய இடையும் இவள் ஒயிலாக நிற்கும் தோற்றமும் காண்பவர் நெஞ்சைக் கவர்வனவாகும் இவளது வலது காலுக்கருகில் இருகுழந்தைகள் சிற்பமும், இடதுகாலுக்கருகில் பெண்ணொருத்தியின் சிற்பமும் சிறியதாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த யக்ஷி தன் கால்களை எழிலுறவைத்துநிற்கும் கோலம் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பனைமலை சிவன் கோயிலிலுள்ள பல்லவர் கால உமையவள் ஓவியத்தின் பாங்கினை ஒத்திருக்கிறது. உமையவள் ஒருகாலைத்தரையில் ஊன்றியும், மறுகாலைப் பின்னோக்கி மடக்கியும் வைத்து நின்று சிவனது நடனத்தை மெய் மறந்து கண்டுகளிப்பதாகக் காட்டப் பட்டிருக் கிறாள். இத்தகைய பாவனையில் நிற்கும் பெண்டிர் சிற்பங்கள் அஜந்தா, எல்லோரா, நாகர்சுனகொண்டா, அமராவதி, திரிபுவனம் முதலிய பல இடங்களில் காணப்படுகின்றன.[3]

தமிழகத்தில் ஏராளமான யக்ஷி சிற்பங்கள் காணப்பட்ட போதிலும், அவை மலைநாதர்கோயிலிலுள்ள தருமதேவியின் எழில்மிக்க சிற்பத்திற்கு ஈடு இணையாகாதென்று கூறலாம். கலை உணர்வும், இறையுணர்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, சிற்பக்கலைஞனின் சிற்றுளியின் மூலம் சிறப்புமிக்க யக்ஷி சிற்ப மாகப் படைக்கப்பட்டிருக்கிறதென்றால் அது மிகையாகாது. எனவே தான் இச்சிற்பம் தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகத் திகழ் கிறது.

ரிஷபநாதர்

நேமிநாதருக்கு அடுத்தாற்போன்று ரிஷபநாததீர்த்தங்கரரின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது; அமைதியின் வடிவாய்த்திகழும் இவர் தியானத்தில் இருப்பதாகப் படைக்கப்பட்டிருக்கிறார். தலைக்குமேற் பகுதியில் முக்குடையினைக் காணலாம். இவரது இருமருங்கிலும் சாமரம்வீசும் இருவர் சிறிய அளவில் வடிக்கப் பெற்றிருக்கின்றனர். இத்தீர்த்தங்கரரின் உடலமைப்பு, மென்மையான முகச்சாயல், முதலியனயாவும் நேமிநாதர் சிற்பத்திலுள்ளவை போன்றே திகழ்கின்றன.

பார்சுவநாதர்

ரிஷபநாதருக்கு அடுத்து நின்ற கோலத்தில் திகழும் பார்சுவநாதர் சிற்பம் உள்ளது. நீண்டு பரந்த உடலமைப்புடன் கைகளைத் தொங்க விட்டவாறு இத்திருவுருவம் காட்சியளிக்கிறது பரந்த மார்பும், அகன்ற தோள்களும், தசை மடிப்பினையுடைய இடையும் அழகுற வடிவக்கப் பெற்றிருக்கின்றன. தலைக்கு மேற் பகுதியில் ஐந்து தலை நாகம் படம் விரித்த நிலையிலுள்ளது. இவரது வலப்புறம் தரணேந்திரயக்ஷனும், இடப்புறம் பத்மாவதி யக்ஷியும் காணப்படுகின்றனர். தரணேந்திரன் தீர்த்தங்கரரின் கால்களைத் தன் இருகரங்களால் தொட்டு வணங்கி வழிப்படுவ தாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. கால்களை மடக்கி அமர்ந்தவாறு வழிபடும் நிலையில் இருக்கும் இவ்யக்ஷனது உடலும், தலையும் சற்று முன்னோக்கி குனிந்த வண்ணம் உள்ளன. வலது பக்கத்தில் பத்மாவதி யக்ஷி தனது வலது கையினை மேல் தூக்கிக் கனிவுடன் அஞ்சலி செலுத்துவதாக விளங்குகிறாள்.

பாகுபலி

பார்சுவநாதருக்கு அடுத்தாற் போன்று பாகுபலியின் சிற்பம் செதுக்கப்பட்டிருக்கிறது. பார்சுவநாதரைப் போன்றே நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். உடலமைப்பும், உருவ அமைப் பும் ஏறத்தாழ ஒன்றாகவே இருக்கின்றன. இவரது கால்களையும், கைகளையும் இலைகளுடன் கூடிய கொடி சுற்றிப்படர்ந்திருப்பதைக் காணலாம். பாகுபலியைக் குறிக்கும் சிற்பங்கள் அனைத்திலும் இப்பொதுத் தன்மையினைக் காண இயலும். இவரது இருமருங் கிலும் இருபெண்டிர் அஞ்சலி செலுத்திய வண்ணம் நிற்கின்றனர். இவர்கள் பாகுபலியின் சகோதரிகள் என்று கருதப்படுகிறது. இப்பெண்டிரின் ஆடை, அலங்காரம் முதலியனயாவும் முற்காலச் சோழர் கலைப்பாணியினை அறிவுறுத்துவனவாக உள்ளன. பாகுபலி யின் கால்களுக்கருகில் இரண்டு பாம்புகள் படம் விரித்த வண்ணம் காணப்படுகின்றன.

சங்கநிதி, பத்மநிதி

மலைநாதர் கோயில் கோபுரத்தின் இருமருங்கிலும் சங்கநிதி, பத்மநிதி ஆகியோரைக் குறிக்கும் சிற்பங்கள் சுவரினுள் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. முன்பு இவை வேறு இடத்திலிருந்து, பின்னர் கோபுரம் கட்டப்பெற்ற காலத்தில் தற்போதைய இடத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இவையும் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு கலைப்பாணியினைக் கொண்டு விளங்குகின்றன. சங்க நிதியின் சிற்பம் வலதுகையில் தாமரையைப்பெற்றும், இடதுகை

தொடையின் மீது வைக்கப்பட்டும் அமர்ந்தவாறு திகழ்கிறது. இறபத்தின் மேற்பகுதியில் இரண்டு சங்குகளின் வடிவங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பத்மநிதியும் அமர்ந்த வண்ணம், வலது கையினில் தாமரையை வைத்தும், இடதுகையினைத் தொடைமீது வைத்தும் அழகுற மிளிர்கிறது. மேற்பகுதியில் இரண்டு தாமரைமலர்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரு வரது உடலில் தடித்த குண்டலங்கள், பட்டையான உதரபந்தம், பூணூல் முதலியவை எளிமையான முறையில் செதுக்கப்பட்டிருக் கின்றன.

சித்தாமூரிலுள்ள அனைத்து சிற்பங்களுள் அழகுவாய்ந்தவை யாகவும், காலத்தால் முந்தியவையாகவும் இருப்பவை மலைநாதர் கோயிலிலுள்ள சிற்பங்கள்தான். இயற்கையாகவும், எளிமை யாகவும் இருப்பதால் அக்காலக் கலையழகினை இவற்றில் காண முடிகிறது. தீர்த்தங்கரர்களின் திருவுருவங்களில், அலங்கார வேலைப்பாடுகள் இல்லாமலிருந்த போதிலும், யக்ஷன், யக்ஷி ஆகியோரது திருமேனிகளை அழகுசெய்யும் அணிகலன்களும், அலங்காரங்களும் முற்காலச் சோழர் கலைப்பாணிக்கு சிறந்த சான்றுகளாகும். கலைப்பாணி மட்டுமின்றி, இங்குள்ள கல் வெட்டுக்களின் அடிப்படையிலும் இச்சிற்பங்கள் முதலாவது ஆதித்தசோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி. 871–907) தோற்று விக்கப்பட்டவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

பார்சுவநாதர் கோயில் சிற்பங்கள்

பார்சுவநாதர் கோயிலின் கருவறை, அதன் முன்னுள்ள இரு மண்டபங்கள் ஆகியவை கி.பி. 16 ஆம் நூற்றூண்டிலும், எஞ்சி யுள்ள பகுதிகள் கி.பி. 19 ஆம் நூற்றூண்டிலும் கட்டப்பட்டவை யாதலால், இந்த இரண்டு நூற்றூண்டுகளைச் சார்ந்த சிற்பங்களே இங்கு உள்ளன. இக்கோயிலில் கருவறைகளினுள்ளும், மண்டபத் தூண்களிலும், தேவகோட்டங்களிலும் சிற்பங்கள் காணப்படு கின்றன.

தேவகோட்டச் சிற்பங்கள்

பார்சுவநாதர் கோயிலின் கருவறை, மண்டபம் ஆகியவற் றின் வெளிப்புறச் சுவர்களில் சிற்பங்களை அமைப்பதற்கேற்ற வகையில் மாடக்குழிகள் அல்லது தேவகோட்டங்கள் உள்ளன. இத்தேவகோட்டங்கள் சற்று பெரிய அளவில் இருப்பினும், அவற் றிலுள்ள சிற்பங்கள் தேவகோட்டங்கள் முழுமைக்கும் ஏற்றதாக அன்றி சிறியனவாகவே காணப்படுகின்றன. எனவே தான் சிற் பங்களின் தலைக்கு மேலாகவுள்ள தேவகோட்டப் பகுதியில் மிகுந்த இடைவெளி இருப்பதைக் காணலாம்.

தென்புறமுள்ள தேவகோட்டங்களில் ரிஷபநாதர், மகாவீரர் ஆகியோரது சிற்பங்களும், மேற்குப்புற தேவகோட்டத்தில் சாந்தி நாதர் சிற்பமும், வடபுறமுள்ள தேவகோட்டங்களில் நேமிநாதர் பத்மபிரபர் ஆகியோரது திருவுருவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றுள் ரிஷபநாதர், நேமிநாதர் சிற்பங்கள் நின்ற கோலத்திலும், எஞ்சியவை அமர்ந்தவாறு யோக நிலையிலும் இருக்கின்றன. இச்சிற்பங்களில் தலைக்கு மேலாக முக்குடையும், அதற்கு மேல் சிங்கமுக அமைப்பும் இருப்பதைக் காணலாம். சிலவற்றின் தலைக்குப் பின்பகுதியில் அரைவட்ட வடிவ பிரபையும் மெல்லியதாக வடிக்கப்பட்டிருக்கிறது.

பார்சுவ நாதர்

கருவறையில் மூலவராகத் திகழும் பார்சுவநாதர் சிற்பம் ஏறத்தாழ பத்து அடி உயரமுள்ளதாகும். அமர்ந்த கோலத்திலுள்ள இத்திருவுருவம், உயரமான பீடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இது கருமை நிறமுடைய கல்லில் நன்முக மெருகூட்டப்பட்டு செய்யப்பட்டிருப்பதால் மிகுந்த கறுப்பு நிறத்துடனும், பளபளப்புடனும் திகழ்கிறது. பரந்து விரிந்த உடலமைப்பினையும் அமைதியான முகச்சாயலையும் கொண்ட இச்சிற்பத்தின் தலையில் வட்டவடிவமான சுருள்முடியும், நீண்டகாதுகளும், கூர்மையான மூக்கும், யோகநிலையில் மூடிய கண்களும் சிறப்புற அமைக்கப்பட்டிருக்கின்றன. தலைக்கு மேற்பகுதியில் ஐந்து தலைப் பாம்பு படம் விரித்த நிலையிலும், அதற்குமேல் முக்குடையும் அழகாகத் திகழ்கின்றன. இவரைச் சுற்றிலும் பெரிய அளவிலான பிரபாவளி அமைக்கப்பட்டு, அதன் உச்சியில் சிங்கமுக அமைப்பினைக்கொண்டு விளங்குகிறது. இவரது தலைக்கு இருபுறமும் பிரபையில் 23 தீர்த்தங்கரர்களின் சிறிய சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பார்சுவநாதரின் இரண்டு பக்கத்திலும் சாமரங்கள் வீசுவோரின் சிற்பங்களையும் காணலாம். பீடத்தின் அடிப்பகுதியில் தரணேந்திரயக்ஷன், பத்மாவதியக்ஷி ஆகியோர் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கின்றனர். இந்த பார்சுவநாதர் சிற்பத்திற்கு முன்னர் சிறியதாகவுள்ள பீடமொன்றில் இது போன்ற மற்றொரு பார்சுவநாதர் சிற்பமும் வைக்கப்பட்டிருக்கிறது. அன்றாட அபிடேகம், பூஜை முதலியன இதற்கு மட்டுமே செய்யப்படுகின்றன.

நேமிநாதர்

ஏறத்தாழ ஆறடி உயரமுள்ள நேமிநாதர் சிற்பம் ஒன்று நின்ற கோலத்தில் தனியாகவுள்ள கருவறையொன்றில் நிறுவப்பட்டிருக்கிறது. பிறந்த மேனியுடன் கம்பீரமாகக் காட்சி

யளிக்கும் இச்சிற்பமும் நன்கு மெருகூட்டப்பட்டு கருமை நிறத்தில் பளபளப்பாகத் தோன்றுகிறது. இச்சிற்பத்தின் பின்பகுதியில் நுண்ணிய வேலைப்பாடுகளையுடைய அலங்காரமான பிரபை காணப்படுகிறது. இதில் முக்குடையும், அதற்கு மேலாக சிங்கமுக அமைப்பும் உள்ளன. தீர்த்தங்கரருடைய கால்களுக் கருகில் சர்வானயக்ஷனும், குஷ்மாண்டினி யக்ஷியும் சிறிய அளவில் வடிக்கப் பெற்றிருக்கின்றனர். இந்த தீர்த்தங்கரர் சிற்பம் கி.பி. 16ஆம் நூற்றாண்டுக் கலைப்பாணியினைப் படம் பிடித்துக் காட்டுவதாக விளங்குகிறது.

இந்த நேமிநாதர் சிற்பம் சென்னையைச் சார்ந்த மயிலாப் பூரிலிருந்த சமணக் கோயிலிலிருந்து சித்தாமூருக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இது பற்றிய செய்தி மெக்கன்சி சுவடித்தொகுப்பிலும் இடம் பெற்றிருக்கிறது. அதாவது, கடற்கரை ஓரத்தினில் அமைந்திருந்த வாமநாத புரத்தில் முன்பு சமணக்கோயில் ஒன்றிருந்தது. இந்நகரை ஆட்சி புரிந்துவந்த மயிலமான் என்னும் அரசனிடம் சமணமுனிவர் ஒருவர், இந்நகரம் மூன்று நாட்களுக்குள் கடலால் அழிந்துவிட இருப்பதாகக் கூறினார். எனவே அரசனும், அந்நகரமக்களும் அங்கி ருந்த நேமிநாதர் திருவுருவத்தினைப் பாதுகாப்பான வேறொரு இடத்திற்கு எடுத்துச் சென்று வைத்தனர். முனிவர் கூறியபடி அப்பகுதியும் கடலால் அழிவுற்றது. பின்னர் மயிலமான் அரசன் தனது பெயரால் புதியதாத மயிலை மாநகரம் என்னும் நகரினைத் தோற்றுவித்து, அங்கு ஐந்து சமணக்கோயில்களைக் கட்டுவித்தான். முன்புபோலவே முனிவர் மயிலை மாநகரமும் கடலால் அழியும் என்று கூறவே, மக்கள் நேமிநாதர் திருவுருவத்தைச் சித்தா மூருக்குக் கொண்டு சென்று நிறுவி வழிபாடு செய்ததாகக் கூறப் பட்டுள்ளது. மேலும் அப்போது சித்தாமூர்க் கோயிலில் பழுது பார்க்கும் பணியினை மயிலாப்பூரைச் சார்ந்த வணிகர் ஒருவர் கவனித்து வந்ததாகவும் அறியவருகிறோம்.[4] இந்த நேமிநாதர் சிற்பம் மயிலாப்பூரிலிருந்து குறிப்பாக எந்த ஆண்டில் சித்தா மூருக்குக் கொணரப்பட்டது என்பது பற்றித் தெரியவில்லை. மயிலமான் என்னும் அரசன் வரலாற்றில் இடம் பெறவில்லையாத லால் அம்மன்னனைப் பற்றிய செய்தியும் அறிவதற்கில்லை. எவ்வாறு யினும் இந்த சிற்பம் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டதென அதன் கலைப்பாணியினை வைத்துக் கூறலாம்.

தருமதேவி

பார்சுவநாதர் கோயில் முகமண்டபத்தினை ஒட்டி தருமதேவிக் கென பிற்காலத்தில் கருவறை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

இதில் இருகரங்களையுடைய தருமதேவியின் சிற்பத்தினைக் காண லாம். இந்த திருவுருவம் வேலைப்பாடுகள் அதிகமின்றியும், அழகிய கலையம்சங்கள் இல்லாமலும் விளங்குகிறது. இதன் உடலமைப்பு, அலங்காரங்கள் முதலியன யாவும் பிற்காலக் கலைப் பாணியினைத் தெளிவுபடுத்துகிறது.

பாகுபலி

ஏறத்தாழ ஆறடி உயரமுள்ள பாகுபலியின் கம்பீரமான சிற்பம் சித்ரகூட மண்டபத்தை ஒட்டி, ஒரு பீடத்தின்மீது நின்றவாறு காட்சியளிக்கிறது சுருள் சுருளான தலைமுடியும், அகன்ற நெற்றியும், தவத்தினில் ஈடுபட்டிருப்பதைக் குறிக்கும் சற்றுமூடிய விழிகளும், வடித்த காதுகளும், நீண்டு கூர்மையான மூக்கும், அமைதியான முகச்சாயலும் இதில் பாங்குற வடிக்கப் பெற்றிருக்கின்றன. பிறந்த மேனியுடன் திகழும் இத்திரு உருவத்தின் கால்களிலும், கைகளிலும் கொடிகள் படர்ந்தவாறு உள்ளன. மேலும் கால்களுக்கு இருபுறமும் இரண்டு பாம்புகள் படம் விரித்த நிலையில் காணப்படுகின்றன. மார்பின் வலதுபுறம் முக்கோணவடிவில் ஸ்ரீ வ த் ச ம் பொறிக்கப்பட்டிருக்கிறது. மார்பின் கீழ்ப்பகுதியிலும், இடுப்பிலும் தசைமடிப்புகள் அழகுறக் காட்டப்பட்டிருக்கின்றன. பாகுபலி சிற்பத்தில் வழக்கமாக இடம்பெறும் இருபெண்டிர் சிற்பங்களும் இதில் காணப்படவில்லை. இச்சிற்பம் பார்சுவநாதர், நேமிநாதர் ஆகிய சிற்பங்களைக் காட்டிலும் பிற்பட்டகாலத்தில் தோற்றுவிக்கப் பட்டிருக்கலாம்.

முகமண்டப விதானச் சிற்பம்

முகமண்டபத்தின் விதானத்தில் ஒரே கற்பலகையில் செதுக் கப்பட்ட தாமரை மலர் சிற்பம் ஒன்று அழகுற பொருத்தி வைக் கப்பட்டுள்ளது. இக்கற்பலகையின் நடுபக்கத்தில் ஐந்து வரிசை இதழ்களையுடைய மலர்ந்த தாமரை மலரும், அதன் பொகுட்டினை ஆறுகிளிகள் வட்டமாக அமர்ந்து கொத்துவதையும், மலர்ந்த இதழ்களில் நான்கு கிளிகள் ஆங்காங்கே அமர்ந்து விளையாடி மகிழ்வதையும் சிற்பக் கலைஞன் திறம்பட வடித்துள்ளான். மலரைச் சுற்றியுள்ள பகுதியில் படர்ந்து செல்லும் கொடிகளும், நான்கு மூலைகளில் நான்கு கந்தர்வர் சிற்பங்களும் காணப்படு கின்றன. இவையனைத்தும் சதுர வடிவ சட்டம் போன்ற அமைப் பினுள் அடங்குபவையாகத் திகழ்கின்றன.

விசயநகர அரசர்களாட்சியிலும், அதற்குச் சற்று பிற்பட்ட காலத்திலும் உருவாக்கப்பட்ட கோயில் மண்டபங்களில் இது போன்ற தாமரை மலரின் சிற்பம் அல்லது திக்பாலர்களின் சிற்பம்

இடம் பெற்றிருத்தலைக் காணலாம். பாளமாக உள்ள ஒரே கல்லில் இத்தகைய சிறிய வேலைபாடுகளை அழகுறச் செதுக்குவதென்பது பண்பட்ட கலைஞர்களால் மட்டுமே முடியும் என்பது தெளிவாகிறது.

பிற சிற்பங்கள்

மேற்கூறப்பட்ட சிற்பங்களன்றி பார்சுவநாதர் கோயிலில் ஏராளமான பிற்காலச் சிற்பங்களையும் காணலாம். தனியாக உள்ள ஐந்து கருவறைகளில் பிரம்மதேவர், சுவாலாமாலினி ஆகியோரது சிற்பங்கள் காணப்படுகின்றன. இச்சிற்பங்களை அபிநவ ஆதிசேனபட்டாரகர் எனும் மடாதிபதியின் அனுமதியின் பேரில் குணமாலையம்மாள் என்பவர் நிறுவியதாக அறியவருகிறோம். இச்சிற்பங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகும்.

அலங்கார மண்டபத்தின் ஒவ்வொரு தூண்களிலும் ஏராளமான சிறிய புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் தீர்த்தங்கரர்கள், யக்ஷன், யக்ஷி, அஷ்டமங்கலச் சின்னங்களைக் கரங்களிலேந்தி நிற்கும் பெண்டிர் முதலிய சிற்பங்களைக் காணலாம். மேலும் சமணசமய புராணங்களில் வரும் சில காட்சிகளைக் குறிக்கும் சிற்பங்களும் ஆங்காங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. இச்சிற்பங்கள் அனைத்தும் கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதில் ஐயமில்லை.

கோயிலின் வடகிழக்குப் பகுதியில் ஒரு கருவறையில் சேத்திர பாலகர் சிற்பம் ஒன்றும் காணப்படுகிறது. நான்கு கரங்களுடன், திகழும் இவருக்குப் பின்புறம் இவரது வாகனமாகிய நாயும் இடம் பெற்றுள்ளது. சைவ சமயக் கோயில்களில் காணப்படும் பைரவர் சிற்பங்களுக்கும், இதற்கும் உருவ அமைப்பில் வேறுபாடுகள் எவையும் இல்லை. இதனை பைரவர் என்பதற்குப் பதிலாக சேத்திர பாலகர் என அழைக்கின்றனர். இதுவும் பிற்காலத்தைச் சார்ந்ததாகும்.

உலோகத் திருவுருவங்கள்

சமயம் வளர்ச்சியடைந்து வந்த காலை சமயச் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும், அதிகரித்து வரலாயின. கோயில்களில் புதியதாக அலங்காரமண்டபம், சித்ரமண்டபம், தேர்மண்டபம் போன்றவை கட்டப்படலாயின. விழாக்களும் அதிகரித்து வந்தமையால், அவ்விழாக்காலங்களில் உலோகத்தால் செய்யப்பெற்ற இறைத்திருவுருவங்களை ஊர்வலமாகக் கொண்டு

செல்வதும் வழக்கமாயிற்று. எனவே சமயச்சடங்குகளும், திருவிழாக்களும் அதிகமாக்கப்பட்டதிலிருந்து இறைத் திருவுருவங்களை மிகுந்த அளவில் உலோகத்தினால் உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

சித்தாமூரில் ஏராளமான உலோகத்திருவுருவங்கள் பார்சுவ நாதர் கோயிலினுள் வைக்கப்பட்டிருக்கின்றன. கருவறையுள் இருபத்திநான்கு தீர்த்தங்கரர் உலோகத்திருமேனிகளும் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பிரம்மதேவர், தரணேந்திரன், பத்மாவதி, சரஸ்வதி, சர்வானயக்ஷன். பூரண புஷ்கலை முதலிய பலரது திருவுருவங்களையும் இங்கு காணலாம். பார்சுவநாதரின் திருவுருவம் நின்ற கோலத்தில், சுற்றிலும் அலங்கார வேலைப்பாடுடைய பிரபையினைக்கொண்டு விளங்கு கிறது. இவையன்றி மேரு, அஷ்டமங்கலச்சின்னங்கள் முதலிய வையும் கருவறையில் உள்ளன. பெரும்பாலான திருவுருவங்கள் சிறியவையாகவே இருக்கின்றன.

அர்த்தமண்டபத்தின் நடுவில் கோமதீஸ்வரர், ஆதிநாதர், மகாவீரர் ஆகிய மூவரது படிமங்களும் சற்று உயரமானதாகத் திகழ்கின்றன. சித்தாமூரிலுள்ள படிமங்களுள் அழகாகவும், பெரியதாவும் இருப்பவை இம்மூன்றும்தான். தாமரைமலரானான பத்மபீடத்தில் மூவரும் தனித்தனியாக நின்றவண்ணம் இயற்கை யாகவும், எளிமையாகவும் இருக்கின்றனர். இம்மூன்றும் மிக்க வாறும் கி.பி 16ஆம் நூற்றுண்டைச் சார்ந்தவை எனக்கூறலாம். எஞ்சியவை சமயப்பற்று மிக்க மக்களால் பிற்காலத்தில் வழங்கப் பட்டிருக்க வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. K. R. Srinivasan, "Some aspects of religion as revealed by early mounments & literature of the South," Journal of the Madras University, 1960, No.1, PP 141-142
2. C Sivaramamurti, Panorama of Jain Art-South India, P 42
3. C. Sivaramamurti, Panorama of Jain Art-South India, P 42-43
4. Mackenzie Manuscripts, Mss No. 12, Sec2.

6

கோயில் வழிபாட்டு முறையும் திருவிழாவும்

மனித சமுதாயம் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு கோயில் ஒரு சிறந்த அமைப்பாகத் திகழ்ந்து வந்திருக்கிறது. இக்கோயில் வழிபாட்டின் முதன்மை கருதியே ஆன்றோர் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என மொழிவாராயினர். சமுதாயத்தினை ஒருங்கிணைத்து நெறிப் படுத்தும் இந்த கோயில் களில் வழிபாட்டு முறைகளையும் உரியபடி வகுத்துள்ளனர். இந்த வழிபாட்டு முறைகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் விரிவடைந்து இறுதியில் நெறிப் படுத்தப்பட்டிருப்பதை அறியவருகிறோம். இவை பற்றிய செய்திகளைச் சமய நூற்கள் விரிவாகக் கொண்டி லங்குகின்றன.

தற்காலத்தில் சமண சமயக் கோயில்களில் நடைபெறும் வழி பாட்டு முறைகளும், அவை தொடர்பான சடங்குகளும் மிக்க வாறும் இந்து சமயக் கோயில்களில் செயல்படுத்தப்படுவை போன்றிருப்பதைக் காணலாம் இவற்றுள் சிலவற்றைத் தவிர எஞ்சியவற்றுள் மிகுந்த ஒற்றுமை காணப்படுகிறது. தொடக்க காலத்தில் சமணசமயம் எளிமையான வழிபாட்டு முறையினைக் கொண்டிருந்தது. பின்னர் காலப்போக்கில் அன்றைய சமுதாய நிலைகளுக்கேற்பவும், அதன் தேவைகளை நிறைவு செய்வதற்கேற்ற வண்ணமும், இந்து சமயத் தாக்கத்தினாலும், கோயில்கள், இறைத்திருவுருவங்கள் பல்கிப் பெருகியமையாலும். விரிவான வழிபாட்டு முறைகளைப் பின்பற்றலாயிற்று. அவற்றைத் தமிழ்ச் சமண சமுதாயமும் ஏற்றுக்கொண்டமையால் இன்றளவும் அவை குறைவற கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் சித்தாமூர்க் கோயில்களில் நடைபெற்றுவரும் தினசரி வழிபாட்டு முறைகள் பற்றிக் காண்போம்.

உபாத்தியார்

சமணக்கோயில்களில் வழிபாட்டினைத் தினமும் செய்து வருபவர்கள் உபாத்தியார்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் முற்காலத்தில் சமயக் கல்வியினைக் குழந்தைகளுக்குப்

புகட்டிவந்த ஆசிரியர்களாகத் திகழ்ந்தமையால் தான் உபாத்தியார் (வாத்தியார்) எனப் பெயர் பெறுகின்றனர். பள்ளிக்கூடம் என்ற தனிக் கல்வியமைப்பு ஏற்படுவதற்கு முன்னர் கோயில்களே சிறுவயதினருக்குக் கல்வியறிவு புகட்டும் கல்விச் சாலைகளாக விளங்கின. பொதுவாக உபாத்தியார் சமண சாத்திரங்களைக் கற்றறிந்தவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும், பூசைகளைக் குறைவறச் செயலாற்றும் திறமை பெற்றவராகவும் இருக்கவேண்டும். இத்தகையோரின் சந்ததியினரே பரம்பரை பரம்பரையாக கோயிலில் பூசை செய்து வருகின்றனர். இவர்களது சந்ததியினருக்குச் சிறு வயதிலிருந்தே சமய நூற்கள், வழிபாட்டு முறைகள் முதலியவை பற்றி கற்றுக்கொடுக்கப்படுகின்றன. உரியகாலம் வந்தபின்னர் இவர்கள் கோயிலில் பூசைகளைச் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

சித்தாமூரில் பார்சுவநாதர் கோயிலில் பூசை செய்வதற்கென மூவரும், மலைநாதர் கோயிலில் வழிபாட்டு முறைகளை நிறைவேற்றுவதற்கென ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டுள்ள இவர்கள் கோயிலில் அன்றாட பூசைப் பணிகளைத் தவறாமல் செம்மையுற நடத்தி கொண்டிருக்கின்றனர். இவ்வழிபாடுகளைச் செய்வதற்குரிய சம்பளத்தினை சித்தாமூர் மடம் வழங்கிவருகிறது

நித்திய வழிபாட்டு முறைகள்

பார்சுவநாதர் கோயிலில் தினமும் நான்கு முறை வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இவற்றை முறையே காலை பூசை, உச்சிக் கால பூசை, சந்திக்கால பூசை, அர்த்தசாம பூசை எனக் கூறுவர். காலை வேளையில் உபாத்தியார் பார்சுவநாதர் திருவுருத்தினை தண்ணீர், பால், சந்தனம் முதலியவற்றால் அபிடேகம் செய்து, பின்னர் அத்திருவுருவத்தின் பாதங்களில் பூக்களைச் சார்த்துவர். பிறகு வெண்பொங்கல் நைவேத்தியமாகப் படைக்கப்படும். அபிடேகம் செய்வதற்கு முன்பு பிரசஷ்தை எனப்படும் சமண ஆச்சாரியார் பெயர்களை கூறி வணங்கும் நிகழ்ச்சியினைச் செய்து விட்டுத்தான் பிறசடங்குகளைச் செய்வது மரபாகும். பூசையின் போது மந்திரங்கள் மொழிந்து, மூலவருக்கு கற்பூர தீபாராதனை செய்யப்படுகிறது. பார்சுவநாதருக்குச் செய்யப்படுவது போன்றே நேமிநாதர், மகாவீரர், தருமதேவி ஆகியோருக்கும் வழிபாடுகள் செய்யப்படுகின்றன. உச்சி வேளையின் போது தீபாராதனை மட்டும் செய்வது வழக்கமாகும். மாலைக் கால வழிபாட்டின்போது தேங்காய் உடைத்து தீபாராதனை செய்கின்றனர். மேலும் அஷ்டமங்கலச் சாத்தும் அப்போது நடைபெறுவதுண்டு.

அர்த்த சாமப் பூசையின் போது தீர்த்தங்கரர்களுக்கும், எட்டு திக் பாலர்களுக்கும், துவார பாலகர்களுக்கும் கற்பூர தீபாராதனை செய்யப்படுகிறது.

பண்டிகை நாட்களின் போது பார்சுவநாதர் கோயிலில் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மேலும் பார்சுவநாதர், நேமிநாதர் ஆகியோருக்கு சதுர்தசி, பௌர்ணமி, அஷ்டமி முதலிய நாட்களில் சிறப்பாக பஞ்சாமிர்த அபிடேகமும் செய்து வருதலைக் காணலாம். இதுபோன்று பத்மாவதியம்மன், சுவாலாமாலினி, சரஸ்வதி ஆகியோருக்கு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் சாத்துபடி செய்வதும் உண்டு. அந்த நாட்களில் பெண்டிருக்கு விரதம் கடைப்பிடிப்பதனைப்பற்றி (விரதானுஷ்டானம்) உபாத்தியார் கூறி சிறப்பு வழிபாடு செய்வதும் மரபு ஆகும்.

மலைநாதர் கோயிலில் காலையில் மட்டும் வழிபாடு நடத்தப் பெறுகிறது. அப்போது தண்ணீர், பால், சந்தனம் ஆகியவற்றால் தீர்த்தங்கரர்களுக்கு அபிடேகம் செய்து, மலர்கள் படைத்து, மந்திரங்கள் கூறி, தீபாராதனை செய்கின்றனர். நவராத்திரி, ஆட்டானிக நோன்பு, அட்சய திருதியை, பொங்கல் முதலிய நாட்களின் போது சிறப்பு வழிபாடும் செய்யப்பட்டு வருகிறது. மார்கழி மாதம் முப்பதுநாளும் சகஸ்ரநாமம் கூறி பூசை செய்வது வழக்கமாகும். இந்த நாட்களில் ஏராளமான அகல்விளக்குகளை மரச்சட்டங்களில் வரிசை வரிசையாக ஏற்றிவைத்து வழிபாடு செய்கின்றனர்.

திருவிழா

இறைமையை வளர்க்கும் கோயில்களில் பலதரப்பட்ட மக்களும் ஒற்றுமையுடம் கூடி மகிழும் வண்ணம் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. சமயச் சடங்குகள் விரிவாக்கம் பெற்றமையால் ஏற்பட்ட இத்திருவிழாக்கள் இறையுணர்வையும் வளர்ப்பதற்கு வழிவகை செய்கின்றன. ஒரு சமயத்தைச் சார்ந்த மக்கள் பல்வேறு ஊர்களில் வாழ்ந்து வந்த போதிலும், அவர்கள் ஒன்றாகக் கூடி மகிழ்வதற்குத் திருவிழாக்கள் அரிய வாய்ப்பினை நல்குகின்றன. மேலும் உற்றார், உறவினருடன் அன்புடன் பழகி விருந்தோம்பலில் சிறந்து விளங்குவதற்கும் திருவிழாக்கள் ஒரு கருவியாகத் திகழ்கின்றன. அன்றாட வாழ்வில் வழக்கமாகச் செய்துவரும் வேலைகளிலிருந்து சிறிது விடுபட்டு உள்ளத்திற்கு உவகையூட்டும் வகையில் இவை அமைந்து வருகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

சித்தாமூரில் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் பிரம்மோத்சவம் என்னும் திருவிழா மிகவும் சிறப்பிற்குரிய தொன்றாகும். இது மிக்கவாறும் பங்குனி மாத இறுதியிலும், சித்திரை மாதத் தொடக்கத்திலும் பத்து நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். அப்போது பல்வேறு சமணதலங்களிலும் வாழும் மக்கள் இங்கு குழுமி விழாவில் பங்கு கொள்கின்றனர்.

இவ்விழா தொடங்கப் பெறுவதற்குரிய தியதியினை மடாதிபதியவர்கள் முறைப்படி குறிப்பது வழக்கமாகும். தியதி குறித்த பின்னர் திருவிழா நடைபெற இருக்கும் செய்தியினை ஓலைச்சீட்டில் எழுதி, அதனை முதலில் பார்சுவநாதர் சிற்பத்தின் பாதங்களில் வைத்துப் பூசை செய்வர். இவ்வாறு பூசைசெய்து பெறப்பட்ட ஓலைச்சீட்டுக்களை ஒவ்வொரு சமணசமயத் தலங்களிலும் உள்ள ஓலைக்காரர் என்பவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். ஓலைக்காரர்கள் சமயத்தில் பற்று நிறைந்தவர்களாகவும், அந்தந்த ஊர்களில் செல்வாக்கு உடையவர்களாகவும் இருப்பவர்களாகும். இவர்கள் மடாதிபதியிடமிருந்து பெற்றுக்கொண்ட ஓலைகளில் கண்டுள்ளபடி ஊர்மக்களுக்குச் சித்தாமூரில் திருவிழா நடைபெற இருக்கும் தியதியினைத் தெரிவித்து, அனைவரும் திருவிழாவில் கலந்து அதனைச் சிறப்பு செய்யவேண்டுமாறு கேட்டுக்கொள்வர். பொதுவாக சித்தாமூரிலிருந்து முதன்முதலாகத் திருவிழா பற்றிய செய்தியினைப் பெருமண்டூர் கிராம மக்களுக்கு அறிவிப்பது தான் வழக்கமாகும். பெருமண்டூரில் முன்பு வாழ்ந்தபலர் சித்தாமூர் கோயிலுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு, சமயப்பணிகள் சிறந்து விளங்கக் கருவியாக இருந்தமையே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. எனவேதான் திருவிழாவிற்கு தேவையான நித்தியபாலை இன்றளவும் பெருமண்டூர் மக்களே வழங்கி வருகின்றனர். சித்தாமூரில் நடைபெறும் பத்து நாள் திருவிழாவினை பொதுமக்களிடமிருந்து பெற்ற பணத்தினாலும், பணம் படைத்தோர் அளிக்கும் கொடையினாலும், மடத்தின் ஒரு பகுதி வருமானத்தினாலும் சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர்.

பத்து நாட்கள் நடைபெறும் பிரம்மோத்சவ விழாவின் போது ஒவ்வொருநாளும் தனித் தனியாக சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. முதலாவது நாள் காலையில் கொடிமரத்தைச் சுற்றி தர்ப்பைக் கொடியினைச் சுற்றும் நிகழ்ச்சி நடைபெறும். அதனைத்தொடர்ந்து சிறப்பு வழிபாடுகளும் செய்யப்படுகின்றன. அன்று மாலையில் அங்குரார்பணம் என்னும் சடங்கினைச் செய்

கின்றனர். அதாவது சர்வானயக்ஷனை ஊர்வலமாகக் குளக்கரைக்கு எடுத்துச்சென்று, அங்கு பூசைகள் செய்து, பாலிகைகள் வைப்பதற்கென மண் எடுத்து வரும் நிகழ்ச்சி இதுவாகும். இதன்பிறகு அந்தமண்ணினைக் கலசங்களிலிட்டு பாலிகைகளை வைக்கின்றனர். இவ்வாறு கடபாலிகாஸ்தானம், ஸ்தம்பபாலிகாஸ்தகனம், பஞ்சபாலிகாஸ்தானம் என்னும் பாலிகை இடும் சடங்குகளைச் செய்கின்றனர். இரவில் சர்வான யக்ஷன் உலோகத்திருவுருவத்திற்கு அபிடேகம் செய்து, அதனை அலங்கரித்து கோயிலைச் சுற்றி ஊர்வலமாகக் கொண்டு செல்வர். இந் நிகழ்ச்சி முடிவுற்ற பின்னர் துவஜபூசை என்னும் கொடிமர பூசை செய்து, திரிமேகலா அர்ச்சனை செய்து கொடி ஏற்றப்படும். இதனை மடாதிபதியே ஏற்றுவது வழக்கமாகும். இதற்குப் பிறகு மடாதிபதி கோயிலில் பூசைசெய்யும் உபாத்தியார்களுக்கும், பண்டிதர்களுக்கும் சம்பாவனை என்னும் தட்சிணை வழங்குவார்.

இரண்டாவது நாள் காலையில் வழக்கம் போல அபிடேகம், ஆராதனை முதலிய செய்து விட்டு பார்சுவநாதர் திருவுருவத்தினை சூரிய வாகனத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல் கின்றனர். அன்று இரவில் இத்திருமேனியினை சந்திரவாகனத்தில் கொண்டு செல்வது வழக்கமாகும். மூன்றாவது நாள் காலையிலும், இரவிலும் தேவேந்திர வாகனத்தில் பார்சுவநாதர் வீற்றிருந்து வீதிகளில் உலாவருவார். இதுபோன்று நான்காவது, ஐந்தாவது நாள் திருவிழாவின் போது காலையிலும், இரவிலும் முறையே நாகவாகனம், ஹம்சவாகனம் ஆகியவற்றில் பார்சுவநாதர் எழுந்தருளுவார். ஆறாவது நாள் காலையில் தேவேந்திரவாகனத் திலும், இரவில் யானைவாகனத்திலும் பார்சுவநாதர் வீதியுலா நடைபெறும்.

ஏழாவது நாள் தேர்த்திருவிழாவாகும். இந்த தேர்த் திருவிழா சித்தாமூரில் மட்டும்தான் கொண்டாடப்படுகிறது. பிற சமணக்கோயில்கள் எவற்றிலும் தேர்த்திருவிழா நடைபெறு வதில்லை. இந்த திருவிழாவில் காலையில் தேரினைச் சிறந்த முறையில் அலங்காரம் செய்து, அதில் பார்சுவநாதர் திருவுருவத்தை எழுந்தருளவித்து, மக்கள் தேரினை இழுத்துச் செல்கின்றனர். பொதுவாக பிறநாட்களில் திருவிழாவில் கலந்து கொள்ள இயலாமற்போனவர்களும் தேர்த்திருவிழாவினைத் தவறாது கண்டு களிக்கின்றனர். அன்றைய தினம் மகாவீர ஜெயந்தி ஜென்மாபிடேகமாதலால் இரவுநேரத்தில் மகாவீரருக் கும், பார்சுவநாதருக்கும் அபிடேகம், சிறப்பு வழிபாடு முதலியன

செய்யப்படும். பின்னர் பார்சுவநாதர் தங்கவிமானத்தில் எழுந்தருளுவார். அவரைத் தொடர்ந்து மகாவீரரையும் ஊர்வலமாக எடுத்துச் செல்வதுண்டு.

எட்டாம், ஒன்பதாம் நாள் திருவிழாவில் பார்சுவநாதரை முறையே பல்லக்கிலும், குதிரை வாகனத்திலும், தேவேந்திர வாகனத்திலும், சிம்மவாகனத்திலும் எழுந்தருளச் செய்து ஒவ்வொரு வீதியிலும் ஊர்வலமாக கொண்டு செல்வது வழக்கமாகும். பொதுவாக தீர்த்தங்கரர் உலாவரும்போது ஆங்காங்கே தீபாராதனைகள் செய்து, மக்கள் வழிபாடு செய்வதும், காணிக்கை செலுத்துவதும் வழக்கமாக நடைபெறுபவையாகும்.

பத்தாவது நாள் காலையில் நடைபெறும் நிகழ்ச்சி மகாபிடேகம் என அழைக்கப்பெறும். அப்போது பார்சுவநாதர், நேமிநாதர், மகாவீரர், பாகுபலி முதலியோரது திருவுருவங்களைக் கோயிலுக்கு அருகிலுள்ள தேர்வடிவ மண்டபத்தில் வைத்து, அவற்றிற்கு அருகில் ஆயிரத்து எட்டு கும்பங்களை நிறுவி அபிடேகம் செய்வார்கள். இதுவன்றி பஞ்சாமிர்த அபிடேகமும் செய்யப்படுவதுண்டு. இறுதி நாளான அன்று தீர்த்தங்கரரை ஊர்வலமாக எடுத்துச் செல்வதில்லை மாறாக, தீர்த்தங்கரரைத் தேர்வடிவமண்டபத்தில் நிறுவி அபிடேகம், சிறப்பு வழிபாடு முதலியன மட்டும் செய்கின்றனர். தேர்வடிவ மண்டபத்தில் தீர்த்தங்கரர் திருமேனிகள் வீற்றிருப்பது தேரிலேயே பவனி வருவதற்கு ஒப்பாக இருப்பதைக் காணலாம். இந்த மகாபிடேகத்தினை மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கண்டுகளிக்கின்றனர். அன்று இரவில் திருவிழா இனிது நிறைவு பெறுவதைக் குறிக்கும் வகையில் பூசைகள் அனைத்தும் முடிவுற்ற பின்னர், மடாதிபதி கொடியினை இறக்குவது வழக்கமாகும்.

பொதுவாக சித்தாமூரில் நடைபெறும் பத்துநாள் திருவிழாவினில் சிலநாட்களில் நடைபெறும் சடங்குகளுக்குரிய செலவினைப் வசதி படைத்த செல்வந்தர்களே ஏற்றுக்கொள்வதுண்டு. எஞ்சிய நாட்களுக்குரிய செலவு பொதுமக்களது பணத்தினைக் கொண்டும், மடத்தின் வருமானத்தைக் கொண்டும் செய்யப்படுகிறது. விழாக்காலத்தில் சிலநாட்களில் பாட்டுக்கச்சேரி, மேளக்கச்சேரி, சமயசொற்பொழிவு முதலியவை மாலைநேரத்தில் நடைபெறுவதுண்டு. இன்னிசை நிகழ்ச்சி சமயத்தொடர்புடையதாக இருக்குமேயன்றி வெறும் மனித உணர்வுகளை தூண்டிவிடுவதாக இருப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சமயசொற்

பொழிகள் எல்லா தரப்பட்ட மக்களின் மனதில் நல்லெண்ணத் தினை வளர்க்கும் விதத்தில் ஆன்றோர்களால் சிறப்புற நிகழ்த்தப் பெறுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு திருவிழாவின்போது நாடகமும் நடைபெற்றதாக அறியக்கிடக்கிறோம். இதுவும் குறிப்பாக மகாவீரர் வாழ்க்கை வரலாற்றினை ஒட்டியதாகவே இருந்திருக்கிறது.

சித்தாமூர் திருவிழாவின்போது சமணசமயம் தொடர் புடைய புத்தகக் கண்காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. சமணம் பற்றிய பல்வேறு நூற்களும் அக்கண் காட்சியில் இடம் பெறுவதால், அனைவருக்கும் சமணசமய நூற்கள் திருவிழாவின் போது எளிதில் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அரிய நூற்களைக் கற்பதனாலும், ஆன்றோர்களது சொற் பொழிவுகளைக் கேட்பதனாலும் மனித மனம் பக்குவமடையு மல்லவா! மேலும் விழாவினைக்காண பல ஊர்களிலிருந்தும் மக்கள் சித்தாமூருக்கு வருகின்றனர். இவர்களுள் தேவை பட்டோருக்குத் தினமும் இலவசமாக மடம் உணவளிக்க ஏற்பாடு செய்கிறது. வசதிபடைத்தோரும், ஏழைகளும் எவ்வித வேறு பாடின்றி உணவுஉண்டு ஒற்றுமையுணர்வுடன் திகழ இது வழி வகை செய்கிறது.

இவ்வாறு சித்தாமூரில் நடைபெறும் திருவிழா இறை யுணர்வையும், நல்லெண்ணத்தையும், அன்புடைமையையும், சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் நிலை நாட்டப் பேருதவி யாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

7

கல்வெட்டுச் செய்திகள்

சித்தாமூரில் சோழர்காலக் கல்வெட்டுக்களும், விஜயநகர-நாயக்க மன்னர்களது கல்வெட்டுக்களும், பிற்காலத்தைச் சார்ந்த சாசனங்கள் சிலவும் காணப்படுகின்றன இவையன்றி மாறங்கியூர், பரனூர், திருமழபாடி என்னுமிடங்களிலுள்ள சில கல்வெட்டுக்களும் சித்தாமூரைப் பற்றிய செய்திகளைக் கொண்டு விளங்குகின்றன. இத்தொல்லியல் சான்றுகளின் வாயிலாக அறியக்கிடக்கும் செய்திகளை விரிவாக இங்கு காண்போம்.

1. **பார்சுவநாதர் கோயில் வளாகத்திலுள்ள கிணற்றுக்கு அருகில் தரைப்பகுதியில் பதிக்கப் பெற்றிருந்த கற்பலகையில் காணப்பட்ட கல்வெட்டு**[1]

ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேசரி
தேவர்க்கு யாண்டு யஎ-வது (17-வது)
சிங்கபுரநாட்டுக் கீழ்வழிச் சிற்ரு
மூர்க் காட்டாம் பள்ளியில் ஒத்
துரைக்கு மண்டபத்திற்குச் சோ
ணாட்டுத் தென்கரைக் குள
மங்கல நாட்டுப் புத்தாம் பூகு
டையான் மதியனறிந்திகை
சந்திராதித்தவற் நந்தா
விளக்கொன்றெரிப்பதற்கு
இவ்வூர்ப் பள்ளியுடைய
ஆரம்பனந்தியும் இவ்வூர்
பாதமூலத்தாரும் இவ்வூர்
ஊராருங் கைவழிவை ....
(இறுதிப்பகுதி சிதைந்துள்ளது)

"கோ இராசகேசரிதேவரது பதினேழாவது ஆட்சியாண்டில், சிங்கபுர நாட்டுக் கீழ்வழியிலிருக்கும் சிற்றுமூர்க் காட்டாம் பள்ளியிலுள்ள ஒத்துரைக்கும் மண்டபத்தில் சந்திரனும், சூரியனும் உள்ளவரை (சந்திராதித்தவற்) நந்தா விளக்கு ஒன்று

எரிப்பதற்காகச் சோழநாட்டைச் சார்ந்த தென்கரைக்குளமங்கல நாட்டுப் பிரிவிலுள்ள புத்தாம்பூர் என்னும் ஊரில் வாழ்ந்த மதியன் அறிந்திகை என்பவரால், இங்குள்ள பள்ளியிலிருந்த ஆரம்பநந்தி, இவ்வூரைச் சார்ந்த பாதமூலத்தார் ஊர்ச் சபையினர் (ஊரார்) ஆகியோரது பொறுப்பினில் வழங்கப் பட்ட (தர்மம்)'' என்பது இதன் பொருளாகும்.

இக்கல்வெட்டினைக் கொண்ட கற்பலகை முன்பு மலைநாதர் கோயிலுக்கு அருகில் இடம்பெற்றிருந்து, பிற்காலத்தில் பார்சுவ நாதர் கோயில் வளாகத்திலுள்ள கிணற்றிற்குப் பக்கத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. தற்போது இது கிணற்றின் அருகிலும் இல்லை. மிக்கவாறும் கோயில் புதுப்பிக்கப்பட்ட போது இது சிதைக்கப்பட்டிருக்கலாம். 1937 ஆம் ஆண்டிலேயே இது காணப்பெறவில்லையெனக் கல்வெட்டறிக்கை கூறுகிறது.[2]

இச்சாசனத்திலிருந்து சிற்றாமூர் சிங்கபுர நாட்டுப்பிரிவினில் கிழக்கு நோக்கிச்செல்லும் சாலையை ஒட்டி அமைந்திருந்த ஊர் என்பதும், இங்குள்ள மலைநாதர் கோயில் காட்டாம் பள்ளி என அழைக்கப் பெற்றதும், இங்கு ஓத்துரைக்கும் மண்டபம் ஒன்று இருந்ததென்பதும் தெரிய வருகிறது. இந்த மண்டபத்தில் நந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காகத்தான் சோழ நாட்டின் உட்பிரி வாகிய தென்கரைக் குளமங்கல நாட்டைச் சார்ந்த புத்தாம்பூர் என்னும் ஊரில் வாழ்ந்த மதியன் அறிந்திகை என்பவர் ஏற்பாடு (தானம்) செய்துள்ளார். இதனைக் காட்டாம் பள்ளியிலிருந்த ஆரம்பநந்தியும், இவ்வூரிலுள்ள பாதமூலத்தாரும், இவ்வூர்க் குழுவினரும் பொறுப்புடன் கண்காணித்திருக்க வேண்டும். கல் வெட்டின் இறுதிப்பகுதி சிதைந்துள்ளமையால் எத்தகைய தானம் அளிக்கப்பட்டதென்று அறிவதற்கில்லை. மிக்கவாறும் பொன், பணம், ஆடுகள், நிலம் இவற்றுள் ஏதாவது ஒருவகைத் தானம் வழங்கப்பட்டிருக்கலாம்.

கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ள ஓத்துரைக்கும் மண்ட பம் சமணசமயக் கோட்பாடுகளையும், அறவுரைகளையும் மக்களுக் குத் தெளிவுற உரைப்பதற்காகக் கட்டப்பட்ட மண்டபமாக இருக்கவேண்டும். இப்பள்ளியிலுள்ள ஆரம்ப நந்தி என்பார், கோயிலை நிர்வகித்தும், சமண நெறிகளைப் போதித்தும் வந்த துறவியாதல் வேண்டும். எனவே தான் அவர் பள்ளியுடைய ஆரம்பநந்தி எனக் குறிப்பிடப் பெற்றுள்ளார். பாதமூலத்தார் இவ்வூரில் வாழ்ந்த சமணப் பெரியோராவார். சித்தாமூரில் அக்

காலத்தில் ஊர் என்னும் ஆட்சிக் குழுவும், அதன் உறுப்பினர்களும் இருந்தமை சிறப்புக்குரியதாகும். சோழராட்சியில் ஊர், சபை, நாடு முதலிய அமைப்புகள் இருந்தனவென்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

கல்வெட்டில் கூறப்பட்டுள்ள தென்கரைக் குளமங்கலநாடு, புத்தாம்பூர் ஆகிய பகுதிகள் சோழநாட்டினில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடித் தாலுகாவிலுள்ளவையாகும். இத் தாலுகாவிலுள்ள பலகல்வெட்டுக்களும் குளமங்கலநாட்டுப் பிரிவினைக் குறிப்பிடுகின்றன.[3] குளமங்கலம் என்னும் பேரூரின் நடுவே வில்லுனிஆறு என்னும் காட்டாறு பாய்த்து செல்வதால், தெற்கிலுள்ள பகுதி தெற்கு குளமங்கலம் எனவும், வடக்கில் உள்ளது வடக்கு குளமங்கலம் எனவும் அழைக்கப்பெற்று இரு ஊர்களாகத் திகழ்கின்றன.[4] சித்தாமூர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தென்கரைக் குளமங்கலம் மிக்கவாறும் வில்லுனி ஆற்றிற்குத் தெற்கிலுள்ள பகுதியாக இருக்கலாம். இந்த ஊரின் பெயரடிப்படையில் நாட்டுப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அது தென்கரைக்குளமங்கல நாடு என அழைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

புத்தாம்பூரும் ஆலங்குடித்தாலுகாவிலுள்ள செம்பட்டு என்னும் கிராமத்தை அடுத்துள்ள ஒரு ஊராகும். இது பண்டைய கல்வெட்டுக்களில், செம்பியன் புத்தாம்பூர், புத்தாம்பூர் என பல்வேறு பெயர்களைக் கொண்டு விளங்குகிறது.[5] இந்த புத்தாம்பூரில் காணப்பட்ட சமண திருவுருவத்தை மக்கள் முன்பு **மொட்டைப்பிள்ளையார்** என வழிபட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.[6] இச்சிற்பம் மிக்கவாறும் இங்குள்ள மேடை ஒன்றில் அமைக்கப்பட்டிருக்கும் அருகக்கடவுளின் திருவுருவமாகத்தான் இருக்கவேண்டும். இது ஏறத்தாழ நான்குஅடி உயரமுள்ளது.[7] எவ்வாறுயினும் புத்தாம்பூருக்கும், சித்தாமூருக்கும் அக்காலத்தில் தொடர்பிருந்தமைக்கு முக்கியகாரணம் இரண்டும் சமணத்தலங்களாகத் திகழ்ந்தமையே எனலாம். புததாம்பூர் சித்தாம்மூரிலிருந்து ஏறத்தாழ 200 மைல் தெற்கில் உள்ள ஊராகும். இவ்வூரில் வாழ்ந்த மதியன் அறிந்திகை என்பவர் தாம் சித்தாமூர்க் கோயிலுடன் இணைந்த ஓத்துரைக்கும் மண்டபத்தில் நந்தாவிளக்கெரிக்கத் தானம் அளித்துள்ளார்

இந்த கல்வெட்டில் சோழ அரசனது பட்டப்பெயரான இராசகேசரி என்பது மட்டும் உள்ளதேயன்றி, இயற்பெயர் இடம்

பெறவில்லை. சோழமன்னர்கள் பரகேசரி, இராசகேசரி எனும் பட்டப் பெயர்களை ஒருவுரையடுத்து ஒருவராகக் கொண்டிருந்தனர். இந்த அரசர்களுள் முதலாம் இராசராசனுக்கு முந்தியவர்களது கல்வெட்டுக்களில் தான் இயற்பெயர் குறிப்பிடப்படாமல் பரகேசரி அல்லது இராசகேசரி என்னும் பட்டப் பெயர்கள் மட்டிலும் காணப்படுகின்றன.[8] இராசராசன் காலத்திலிருந்து பட்டப்பெயரும், இயற்பெயரும் இணைந்து வருவதைக் காணலாம். இதுவன்றி இயற்பெயர் மட்டிலும் குறிப்பிடப் படுவதும் உண்டு. இராசராசனுக்கு முன்பு முதலாம் ஆதித்தன் (கி.பி. 871-907), கண்டராதித்தன் (கி.பி. 950-957), சுந்தரசோழன் (கி.பி. 957–973) ஆகியோர் இராசகேசரி என்னும் பட்டப்பெயரினைக் கொண்டிருந்தனர். இவர்களுள் பதினேழு ஆண்டுகளும், அதற்குமேலும் ஆட்சிசெய்தவன் முதலாம் ஆதித்தனுகும். சித்தாமூரிலுள்ள இராசகேசரியின் கல்வெட்டு பதினேழாவது ஆட்சியாண்டைப் பெற்றிருப்பதால், அது முதலாம் ஆதித்தனது ஆட்சியில் கி.பி. 888–ல் பொறிக்கப்பட்ட தென்பது தெளிவாகும். கல்வெட்டறிக்கைத் தொகுப்பில் இதனை முதற்பராந்தகனுக்கு முந்தியகல்வெட்டு என வரிசைப் படுத்தியிருப்பதும், இது முதலாம் ஆதித்தனது காலத்தது என்பதனை உறுதிப்படுத்துவதாகும்.[9] மேலும் இங்குள்ள மற்றொரு கல்வெட்டு இம்மன்னனின் அரசியுடையதாகையால், இந்த இராசகேசரி முதலாம் ஆதித்தன் என்பதில் ஐயமில்லை.

2. மலைநாதர் கோயில் சிற்பங்களுக்கு அடியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு.[10]

ஸ்வஸ்திஸ்ரீ காடவர்கோன்பாவை கனைகழற்காற்
சோழர்க்கு நீடுபுகழ்த்தேவியர் நீணி
லத்துப் பீடு சிறந்தமரும் சிற்றூமூர் செய்திறங்கல்
மீட்ப்பித் தறம் பெருக வாக்குமவள்

"ஒலிக்கின்ற கழல்களையணிந்த சோழமன்னனுடைய புகழ்மிக்க தேவியாகிய காடவர்கோன்பாவை, இந்த நெடிய நிலப்பரப்பில் பெருமை பொருந்தி விளங்கும் சிற்றூமூரில், முன்பு செய்யப் பட்ட அறத்தினை மீண்டும் நிலைபெறச் செய்து சமண அறங்கள் பெருக வழிவகை செய்தாள்" என்பது இதன் பொருளாகும். அதாவது சிற்றூமூர்க் காட்டாம் பள்ளிக்கு முன்னர் செய்யப் பட்டிருந்த தானம் போன்றவை ஏதாவது காரணத்தினால் தடை பெற்றிருந்து, பிறகு நல்ல முறையில் நடைபெறுவதற்குக்

காடவர் கோன்பாவை வழிவகுத்து நல்லறம் பெருக்கியுள்ளாள் என்பது புலனாகும்; இந்த அரசி எத்தகைய அறத்தினை மீட்பித்தாள் என்பதும், முன்பு என்னென்ன அறச்செயல்கள் செய்யப்பட்டன என்பதும் கல்வெட்டில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இது பெரும்பாலும் ஆதித்த சோழனது பதினேழாவது ஆட்சி ஆண்டில் ஒத்துரைக்கும் மண்டபத்தில் நந்தாவிளக்கெரிக்க ஏற்பாடு செய்தமையைத் தொடர்ந்து நிறைவேற்ற முடியாமல் ஏதோ காரணத்தால் தடை ஏற்பட்டு மீண்டும் அது நிலை பெறுவதற்கு காடவர்கோன்பாவை (ஆதித்த சோழனது மனைவி) செய்த ஏற்பாட்டினைக் குறிப்பதாக இருக்கவேண்டும். இக் கோயிலுக்கு முதன் முதலாக ஆதித்தனது ஆட்சியில் நிவந்தம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாலும், அதற்குமுன்பு வேறு எதுவும் தானம் அளிக்கப்பட்டதற்குச் சான்று இல்லையாதலாலும், காடவர்கோன்பாவை மீட்பித்த அறம் நந்தாவிளக்கெரிப்பதில் தடை ஏற்பட்டு, அதனை மீண்டும் நிலைபெறச் செய்தது என்று கொள்வதே முறையாகும்.

இக்கல்வெட்டில் சோழமன்னது பெயரோ அல்லது காடவர் கோன் பாவையின் இயற்பெயரோ குறிப்பிடப்படவில்லை. பல்லவ அரசர்கள் பொதுவாக காடவர்கோன் என்றும், காடுவெட்டிகள் எனவும் அழைக்கப் பெற்றனர். எனவே சோழமன்னனுக்குத் தேவியாக வாய்த்த பல்லவர் வழிவந்த ஒரு இளவரசியே காடவர் கோன்பாவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளாள். பல்லவப்பேரரசர்களும், சோழர்களும் தங்களுக்குள் பலமுறை போரிட்டும், மணவினை முடித்து நல்லுறவு கொண்டும் இருந்திருக்கின்றனர். சோழப் பெருவேந்தருள் முதலாம் ஆதித்தன், முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் பல்லவ இளவரசியரை மணந்தமை வரலாறு கூறும் உண்மையாகும். இந்தக்கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ள சோழன் முதலாவது ஆதித்தனாகவும், காடவர்கோன் பாவை அவனது தேவியாகிய திரிபுவன மாதேவியாகவும் இருத்தல் வேண்டும்.

முதலாவது ஆதித்தனது கல்வெட்டுக்கள் சிலவற்றில் திரிபுவ மாதேவி என்னும் அவனது அரசியினுடைய தாயார் காடு வெட்டிகள் தமர்மேட்டியார் எனக் கூறப்பட்டிருக்கிறது.[11] இதே ஆதித்தனது வேறொரு கல்வெட்டில் மூன்றும் நந்திவர்ம பல்லவனது அரசி மாறம்பாவையார் நியமத்திலுள்ள பிடாரி கோயிலுக்குத் தானம் வழங்கிய செய்தி இடம்பெற்றிருக்கிறது.[12] ஆதித்த சோழனது ஆட்சிக்காலத்தில் பல்லவ அரசன் நந்திவர்

முனுடைய அரசியாகிய மாறம்பாவை சோழநாட்டிலுள்ள கோயிலுக்குத் தானம் வழங்கியிருப்பது ஈண்டு முக்கியமாகக் கவனிக்கவேண்டியதாகும். இவ்விரு அரசர்களுக்கும் இடையே இருந்த உறவினை இது வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது. எனவே திரிபுவனமாதேவியின் தாயாராகிய காடுவெட்டிகள் தமர்மேட்டியாரும், மாறம் பாவையும் மூன்றுவது நந்திவர்மனது மனைவியர் என்பது தெளிவாகும். அவ்வாறுயின் திரிபுவன மாதேவி நந்திவர்மனது மகள் என்பதும், அவளை மணந்தவன் முதலாம் ஆதித்த சோழன் என்பதும் நன்கு புலப்படுகிறது. ஆகவே சித்தாமூர்க் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காடவர் கோன்பாவை திரிபுவனமாதேவி எனவும், அவளது கணவனுகிய கனைகழற்கால் சோழன் முதலாம் ஆதித்தன் எனவும் உறுதியாகக் கூறலாம். இம்மன்னன் கி.பி. 871-லிருந்து கி.பி. 907 வரை ஆட்சிபுரிந்துள்ளமையால், அவனது அரசியின் கல்வெட்டும் அந்த காலத்திற்குள் பொறிக்கப் பெற்றிருக்க வேண்டும். இங்குள்ள முதல்கல்வெட்டு ஆதித்தசோழனது பதினேழாவது ஆட்சியாண்டில் (கி.பி. 888-ல்) தோற்றுவிக்கப்பட்டிருப்பதால், காடவர்கோன்பாவைக் கல்வெட்டு குறிப்பாக கி.பி. 888-லிருந்து கி.பி. 907-க்குள் வடிக்கப்பெற்றிருக்கவேண்டு மென்று கூறலாம்.

3. விக்கிரம சோழன் கல்வெட்டு.[13]

பார்சுவநாதர் கோயில் கருவறையின் அடித்தளத்தில் காணப்பட்ட இக்கல்வெட்டு, கோயிலைப் புதுப்பித்தபோது சிதைக்கப்பட்டிருக்கவேண்டும்.

"ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி ஸ்ரீவிக்கிரமச்சோழ தேவற்கு யாண்டு 18ஆவது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து காலிபுரகோட்டத்து சிங்கபுரிநாடு சித்தாமூர் சிங்கபுரிநாத ஸ்வாமிக்கு நாம் தற்மாகக் கட்டளையிட்டோம் 22 அடி கோலால் குழி 100 கொண்டது ஒருமாவாக இன்னுட்டு வெண்கலத்தூரும் கொள்ளாறும் நெமலியும் வீரணூரும் எளமங்கலமும் விழுக்கம் அருகாவூர் நெற்குணம் தொண்டூரும் விடாரும் நமுண்டியும் கள்ளபுலியூரும் கெங்கபுரமும் அண்ண மங்கலமும்யில்லி விடுமொழியனூரும் நெடியும் பெரு நல்லூரும் சோமாசிபாடி யிவ்வூர்களில் வூர்நிலம் நீர்காலும் பயிர்சிறுவளூரும் மயல்மங்கையான சோழ நல்லூரும் மங்கலமும் கணமான கருணுகரபேதிமங்கல மும் பென்னகரும் சோணியகுன்றம் மாதிருமங்கலமும் பெருவிளங்கூரும் சாத்துவான்பாடியும் வளத்தியும்

கோட்டபூண்டியும் மலையனூரும் தொறுப்பாடியும் கழக்களூரும் அம்பூரும் நெல்லுழான பூண்டியூரும் வெண்மணிபத்தூரும் பாம்பூண்டியும் தென்சிவிறியும் ஊறலும் கீழானடிப்புரமும் நாகபுரமும் சிறுநாங்கூறும் அத்திப்பாக்கமும் நீ . ரூரும் ஆத்திப்பாக்கமும் மாம்பாக்கமும் வெஞ்சிநல்லூரும் வல்லமும் கழணிநல்லூரான வேதிமங்கலமும் நாட்டாமங்கலமும் நெனூரும் ஆனைத்தூரும் கடம்பூரும் தவளகணையூரும் ஆதனூரும் மண்ணூரான வித்தியாசற்பேதமங்கலம் செதிப்புறையூர் தாயனூரும் நொச்சிலியூரும் கொழப்புலியூரும் எய்யிலும் சந்தியமங்கலமான சோழங்குணம் நிச்சரூபவேதமங்கலம் வயிலூரும் களத்தூரும் பாக்கமும் பாக்கமும் தணியலும் பிடஞகத்தூரும் வள்ளிகு ...... ம் உலக்கையூரும் களவாய்ப்புத்தூரும் செல்ல பிறட்டி சறுவபெதிமங்கலம் கருப்பூரும் கூடலூரும் மாதப்பூண்டியும் பாக்கம் சித்தாமூர் அருமொழி தேவரான சறுவபேதிமங்கலமும் வள்ளிவாகையும் மங்கலமும் மேற்கிளையூரும் சிறுபிறையூரும் ஈச்சூரும் தீவனூரும் ஆகயிவ்வூர்களில் ஊரால் நிலம் மூன்றுமா நஞ்சைநிலம் இத்தேவற்கு சர்வ மானியமாகக் கட்டளையிட்டோம்.''

முதற் குலோத்துங்கசோழனுடைய மைந்தனுகிய விக்கிரம சோழனின் 18ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1136) சித்தாமூரிலுள்ள சிங்கபுரிநாதர் கோயிலுக்குப் பல்வேறு ஊர்களில் மூன்று மா அளவை வீதம் ஏராளமான நிலங்கள் சர்வமான்யமாக வழங்கப்பட்டதைக் குறிப்பது இக்கல்வெட்டாகும். இந்த சாசனத்தில் குறிப்பிட்டுள்ள பலஊர்கள் இன்றளவும் அந்தந்த பெயர்களைக்கொண்டு தற்போதைய தென்னுர்க்காடு, வடஆர்க்காடு மாவட்டங்களிலுள்ளதை அறிவோம். மேலும் பல ஊர்கள் தற்போது எங்கு, எந்த பெயர்களைக் கொண்டுள்ளன என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. எவ்வாருயினும் விக்கிரம சோழனுட்சியில் சித்தாமூர்க்கோயிலுக்கு ஏராளமான நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சித்தாமூர் அக்காலத்தில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் காலிபுரக்கோட்டத்தில் சிங்கபுரிநாட்டுப் (சிங்கபுர நாடு) பிரிவில் உள்ள ஊர் என்பது தெளிவாகிறது. மேலும் சிங்கபுரீநாதர் கோயில் எனக்குறிப்பிட்டிருப்பது பார்சுவநாதர் கோயிலாக இருப்பதால், இக்கோயிலும் சோழராட்சியிலேயே தோற்றுவிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது. அவ்வாருயின்

விசயநகர மன்னர்கள் காலத்தில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு புதியபாணியில் கட்டப்பட்டிருக்க வேண்டுமேயொழிய, முதன் முறையாக கட்டப்பட்டதென்று கூறுவது முறையாகாது.

4. குலோத்துங்க சோழன் கல்வெட்டு[14]

பார்சுவநாதர் கருவறையை அடுத்துள்ள மண்டபத்தின் அடிப் பகுதியில் காணப்பட்ட கல்வெட்டு.

"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு ஆண்டு 12-ஆவது ஜெயங் கொண்ட சோழமண்டலத்து காலிபுரகோட்டத்து திருப் புலி...திருவமடவளாகத்து தேவரடியார் பொன்மெஞ் ஞானனுன ராஜகெம்பீரமார......யிவன் அகமுடையாள் தேவர்மகள் கம்பரும்பூர் உத்தம சோழ வளநாட்டு சிங்க புரி நாட்டு சித்தாமூரை தீர்கமானியம் பண்ணி பள்ளி யாழியார் கோயிலில் திருநிலே மண்டபத்து பாரீச தேவற்கு பொருவதாகக் கொடுத்தேன்."

இக்கல்வெட்டு மிக்கவாறும் இரண்டாம் குலோத்துங்க சோழனது (கி.பி. 1136—1150) ஆட்சிக் காலத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். இந்த மன்னனது 12ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1148) திருமடவளாகத்து தேவரடியாரகிய பொண்(ன்) மெஞ்ஞானனுன ராஜ கம்பீரமார(ாயன்) என்பவரது மனைவி, உத்தமசோழ வளநாட்டின் பிரிவாகிய சிங்கபுரி நாட்டிலுள்ள சித்தாமூரை தீர்க்கமானியமாகச் செய்து இக்கோயிலுள்ள பாரீச தேவர்க்குக் கொடுத்துள்ளாள். பார்சுவநாதர் கோயில் பள்ளி யாழியார் கோயில் எனவும், அதிலுறையும் தீர்த்தங்கரர் பாரீச தேவர் எனவும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பாகும்.

5. மலைநாதர் கோயில் மண்டபத்தின் தரைப் பகுதியில் பரப்பப் பெற்றிருந்த கற்பலகையில் காணப்பட்ட கல்வெட்டு.[15]

ஸ்வஸ்தி ஸ்ரீ ராஜாதி
ராஜ தேவர்க்கு
யாண்டு ய—வது (10-வது)
சிற்ருமூர்த் திரு
வூராம் பள்ளியாழ்
வார் பள்ளிச்

சந்தமான தெந
ட்டி புலம் நாலுமாவு
மிக் கோயில்
சூழ்ந்த நத்
தமு மித்தேவர்
க்கே விட்டேன்
பாண்டிய நாடு
கொண்டா னென்
செங்கேணி. களி
தர்மம் அழிவு செய்
வார் மும்மலராய
னுக்கு அறவான்.

"இராசாதிராசனது பத்தாவது ஆட்சியாண்டில் சிற்றூரிலுள்ள திருவூராம் பள்ளியிலுறையும் தீர்த்தங்கரருக்குப் பள்ளிச்சந்த நிலமாக தெனட்டி(?) புலம் நாலுமாவும், இந்தக் கோயிலைச் சுற்றியுள்ள நத்தமும் பாண்டியநாடு கொண்டான் எனப்படும் செங்கேணிமும்மலராயன் தானமாக அளித்துள்ளார். இத்தருமத்திற்கு இடையூறு ஏற்படுத்துவோர் மும்மலராயனுக்குத் தீங்கு விளைவித்தவராவர்," என்பது இதன் விளக்கமாகும்.

இந்தக் கல்வெட்டும் தற்போது கோயிலின் மண்டபத்தில் காணப்பெறவில்லை. காலப்போக்கில் இது சிதைக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள சோழ அரசன் இரண்டாவது இராசாதிராசனும்[16] (கி.பி. 1163-1179). இங்கு இவனது பத்தாவது ஆட்சியாண்டு குறிப்பிடப்பட்டுள்ளமையால், இது கி.பி. 1173 ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டதாகும். இவ்வரசனது கல்வெட்டுக்கள் செஞ்சித்தாலுக்காவிலுள்ள வீரணாமூர், மேல்சேவூர் ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன.[17]

சித்தாமூரிலுள்ள இக்கல்வெட்டிலிருந்து முக்கியமான வரலாற்றுண்மை ஒன்றும் தெரியவருகிறது. இங்குள்ள காட்டாம் பள்ளிக்கு நிலதானம் வழங்கியவர் பாண்டியநாடு கொண்டான் எனப்படும் செங்கேணி சம்புவராயர் பரம்பரையில் வந்த மும்மலராயனாகும். சோழப் பேரரசுக்குட்பட்டு செங்கேணி சம்புவராய சிற்றரசர்கள் தமிழகத்தின் வடபகுதியினை ஆட்சி புரிந்து வந்தனர். இரண்டாம் இராசாதிராசனது ஆட்சியின்

போது இலங்கையரசன் முதலாம் பராக்கிரமபாகு (கி. பி. 1153-1186) பெரும் படையுடன் வந்து போர்புரிந்து பாண்டியமன்னன் குலசேகரனை வெற்றிகண்டான். எனவே இராசாதிராசன் பெருமாள்நம்பி சம்புவராயர், செங்கேணி அம்மையப்பன் சம்புவராயர் என்றழைக்கப்பெற்ற அண்ணன்பல்லவராயர் ஆகியோரின் தலைமையில் படைகளை அனுப்பி பாண்டியநாட்டை மீட்டுக்கொடுத்து, குலசேகரனை ஆட்சியில் அமர்த்தினான் சிறிது காலத்திற்குப் பின்னர் குலசேகரன் இலங்கையரசனுடன் சேர்ந்து சோழரை எதிர்த்தமையால், இராசாதிராசன் செங்கேணி அம்மையப்பன் சம்புவராயரின் கீழ்ப்படைகளை அனுப்பிப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான்.[18] இவ்வாறு பாண்டியநாட்டினை வெற்றிகண்டமையால் தான் செங்கேணி அம்மையப்பன் சம்புவராயன் "பாண்டிய நாடு கொண்டான்" என்னும் பட்டப்பெயர் பெற்றுள்ளார். இவரேதான் சித்தாமூர்க் கோயிலுக்குத் தானம் வழங்கியவராகும். ஆனால் இவரது பெயர் சம்புவராயன் என்பதற்குப்பதிலாக கல்வெட்டில் மும்மலராயன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள 'தெனட்டிபுலம்' எந்த நிலத்தைக் குறிக்கிறதென்பது தெரியவில்லை. ஆனால் இது நான்கு மா பரப்பளவினைக் கொண்டதாக இருந்திருக்கிறது. மா என்பது ஒரு நில அளவையாகும். மூன்று மா சேர்ந்தது ஒரு ஏக்கர் பரப்புடையதாகும். சித்தாமூர்க் காட்டாம்பள்ளியைச் சுற்றியுள்ள நத்தமும் தானமாக அளிக்கப்பட்டிருக்கிறது. நத்தம் என்பது பொதுவாக மக்கள் வாழும் குடியிருப்பு பகுதியையோ அல்லது வீட்டுமனைக்குரிய இடத்தையோ குறிப்பதாகும்.[18]

மேற் கூறப்பட்டுள்ள சோழர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுக்களில் சில சொற்கள் கிரந்த வரிவடிவத்தினைப் (grantha script) பெற்றுள்ளன. சில இடங்களில் 'கே, தே, டே' என்பனபோன்ற நெடில் எழுத்துக்களுக்குப் பதிலாக குறில் எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பொதுவாக பண்டைய கல்வெட்டுக்களில் இத்தன்மையினைப் பரவலாகக் காணலாம்.

6 விஷ்ணுதேவ மஹாராயர் கல்வெட்டு[19]

சிம்மபுரிநாதர் கருவறைக்கு முன்னருள்ள மண்டபத்தில் காணப்பட்ட கல்வெட்டு, இது தற்போது மண்டபத்தில் காணப் பெறவில்லை. சக ஆண்டு 1140-ல் (கி.பி. 1218) பொறிக்கப்

பட்ட இச்சாசனம் மகாமண்டலேஸ்வரர் விஷ்ணு தேவராயர் ஆட்சிபுரிந்தபோது சித்தாமூரிலுள்ள சிங்கபுரிநாதர் கோயிலுக்கு வழிபாட்டுச் செலவிற்காகவும், திருவிழாச் செலவிற்காகவும் இவ்வூரில் குளத்திற்கு கீழுள்ள 91 குழி நிலத்தினையும், மலையனூர் கோயிலுக்கு வழிபாட்டுச் செலவிற்கென 30 குழி நிலத்தினையும் பள்ளிச்சந்தமாகக் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது.

இந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விஷ்ணுதேவ ராயரும் விஜயநகர அரசரான கிருஷ்ணதேவராயரும் ஒரு வரல்லர். கிருஷ்ணதேவராயர் கி.பி. 1509-1530 ஆண்டுகளில் ஆட்சிபுரிந்தவர். சித்தாமூரிலுள்ள மலைநாதர் கோயில் மலையனூர் கோயில் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது இக்கல்வெட்டு ஒன்றில் தான். எனவே மலையனூர்கோயில் என்னும் பெயரே மலைநாதர் கோயில் எனவும், தற்காலத்தில் மல்லிநாதர் கோயில் எனவும் வழங்கப் பெற்று வருகிறது.

7. அச்சுதப்ப நாயக்கர் கல்வெட்டு

இந்த கல்வெட்டு சித்தாமூர் குளக்கரையில் இடம்பெற்றிருந்தது. ஆனால் தற்போது அங்கு இல்லை.

> "ஸ்வஸ்தி ஸ்ரீமஹாமண்டலேஸ்வரர் ஸ்ரீ வீரபிரதாப ஸ்ரீரங்கதேவ மஹாராயர் ஸ்ரீராஜ்யம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சகாப்தம் 1504-ன் மேல் செல்லா நின்ற சுபா...ஸம்வத்சரத்து சிம்மநாயற்று பூர்வபக்ஷத்து பஞ்சமியும் செயவாரமும் பெற்ற திருவோண நட்சத்திரத்து நாள் அச்சுதப்ப நாயக்கர் அய்யன் காரியத்துக்கு கற்தனை திம்மப்ப நாயகன்......... சிற்றாமூர் ஸ்வாமி சிம்மபுரிநாத ஸ்வாமியார் திருக்கோயில் மோளக்காரர் உடொல் நாகசரம் நட்டுவன் ஆகசனம் அஞ்சுபேருக்கும் படிசீவிதத்துக்கு அடித்துண்டாக வடக்குத்தாங்கலும் அதுக்குச்சேந்த கழனிகொல்லை கிணறு பட்டடைகளும் அடித்துண்டாக கட்டளையிட்டோம் இதுக்கு அஹிதம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலும் மகாபாதகம் பண்ணினவர்கள் போகிற நரகத்தில் போகக் கடவராகவும்."

இச்சாசனம் சாலிவாகன ஆண்டு 1504 (கி.பி. 1582)-ல் ஸ்ரீரங்கதேவமகாராயர் ஆட்சியின்போது அவரது பிரதிநிதியாகிய அச்சுதப்பநாயக்கரின் நற்காரியத்திற்கென திம்மப்ப

நாயக்கர் என்பவரால் சித்தாமூர் பார்சுவநாதர் கோயிலில் மேளம், நாதஸ்வரம் முதலிய இசைக்கருவிகள் வாசிப்பவர்களுக்கும், நட்டுவனுக்கும் ஆகிய ஐந்துபேருக்கு வடக்கு குளத்தினை ஒட்டியுள்ள கழனி, கொல்லை, கிணறு முதலியவற்றை வழங்கியுள்ள செய்தியினைக் கொண்டு விளங்குகிறது.

இந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அச்சுதப்பநாயக்கர் தஞ்சையை ஆண்ட நாயக்கமன்னராக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. மேலும் சித்தாமூரில் காணப்பெறும் மற்றொரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ள இரகுநாதநாயக்கர் இவரது மைந்தராக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.[21]

8. வேங்கடபதி தேவ மஹாராயர் கல்வெட்டு[22]

பார்சுவநாதர் கோயிலின் கோபுரத்தில் காணப்படும் இக் கல்வெட்டு சக ஆண்டு 1508 (கி.பி. 1586)-ல் பொறிக்கப்பட்டதாகும்.

> "ஸ்வஸ்தி ஸ்ரீமன் வெங்கிடபதி தேவ மஹாராயர் ராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1508-க்கு மேல்செல்லா நின்ற குரோதி வருஷம் சித்தாமூர் சிம்ம புரி நாத ஸ்வாமியார் கோயில் தேவரடியார் சேவகம் 12க்கு முட்டுக்காரன் மென்மடியிவர்கள் மானியங்களுக்கு ரகுநாத நாயக்கர் அய்யன் உத்தராபடிக்கு மண்டுவ பாப்பு நாய்க்கர் வயல் நீர்........ வேண்டிக் கடவன சறுவமானியமாக நடத்திவரக் கடவனாராகவும். இதற்குக் இரண்டகஞ் செய்தால் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போகவும்."

அதாவது வேங்கடபதி தேவமகாராயர் ஆட்சி புரிந்த காலத்தில் சித்தாமூர் சிம்மபுரிநாதர் கோயிலில் பணிபுரிந்த பன்னிரண்டு தேவரடியார்களுக்கு இரகுநாத நாயக்கர் சில நிலங்களைச் சர்வமானியமாகக் கொடுத்திருக்கிறார் என்பதாகும்.

9. வேங்கடபதிதேவ மஹாராயர் கால மற்றொரு கல்வெட்டு.[23]

இது கலசஸ்தாபன மண்டபத்திலுள்ள (தேர்வடிவமண்டபம்) தளவரிசைக் கல்லில் பொறிக்கப்பட்டிருப்பது,

"ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரர் வேங்கிடபதி தேவமஹாராயர் ஸ்ரீராஜ்யம் பண்ணி அருளா நின்ற சாலிவாகன சகாப்தம் 1525க்கு மேல் செல்லா நின்ற சுபகிருது வருஷம் கார்த்திகை மாசம் 15 தியதி பாப்பு நாயக்கர் அவர்கள் சீமையும்

காளத்தி அப்பா பிள்ளையவர்கள் வாரபத்து நிலத்திலே ரகுநாத நாயக்கரையனுக்கு புண்ணியமாக சித்தாமூர் சிம்மபுரிநாத சுவாமியார் நேமிநாத சுவாமியார் மானியம், பண்டிதர் பூஜிகர் தேவரடியார் மேளக்காரர் பிறவு வடக்குத்தாங்கல் இவர்கள் மானியர்களுக்கு நீர்க் கூலியில்லாமல் சற்வமானியமாக கட்டளையிட்ட படிக்கு ரகுநாத நாயக்கரய்யன் தீட்சிதரய்யன்... பாதத்தாணை இந்த தர்மம் சந்திராதித்தவல் வரைக்கும் நடத்தி வரக் கடவதாகவும். இந்த தர்மத்துக்கு அஹிதம் பண்ணின வர்கள் கெங்கைக்கறையில் காராம் பசுவையும் மாதா பிதாக்களையும் கொன்ற தோஷத்திலே போகக்கடவ ராகவும்."

இந்த சாசனம் வேங்கடபதி மகாராயர் ஆட்சிக்காலத்தில் சக ஆண்டு 1525-ல் (கி.பி. 1603) பாப்புநாயக்கர் அவர்களது சீமைக்குட்பட்ட காளத்தி அப்பாபிள்ளை என்பவரின் நிலத்தில் இரகுநாத நாயக்கருக்குப் புண்ணியம் ஏற்படுகிற வகையில், சித்தாமூர் கோயிலில் பணிபுரியும் பூசாரிகள், பண்டிதர்கள், தேவரடியவர்கள், மேளக்காரர் முதலியோருக்கு தண்ணீர்வரி செலுத்தப்படாத நிலங்களைச் சர்வமானியமாக வழங்கிய செய்தியினைக் கொண்டு விளங்குகிறது.

10. பார்சுவநாதர் கோயில் மானஸ்தம்பத்தின் அடிப்பகுதியில் ஒருபுறமுள்ள கல்வெட்டு.[24]

சகஆண்டு 1500-ல் (கி.பி. 1578) எழுதப்பெற்ற தமிழ்க் கல்வெட்டு இதுவாகும். இங்குள்ள மானஸ்தம்பம் **புஸ்செட்டி** (Bus setti) என்பவரால் நிறுவப்பட்ட செய்தி இதில் இடம் பெற்றிருக்கிறது. இவர் ஜகதாபிகுத்தி என்னும் ஊரைச்சார்ந்த வணிகரான பாயிசெட்டி (Bayisetti) என்பவரின் மைந்தர் எனவும் அறியவருகிறோம்.

11. மானஸ்தம்பத்தின் மற்றொரு புறமுள்ள கல்வெட்டு.[25]

இது சமஸ்கிருத மொழியினை கன்னட எழுத்துக்களால் எழுதப்பெற்றதாகும். இதுவும் இங்குள்ள மானஸ்தம்பம்

மகாநாககுலத்தில் தோன்றிய புஸ்ரேஷ்டி (புஸ்செட்டி) என்பவரால் நிறுவப்பட்ட செய்தினைக் கொண்டு விளங்குகிறது.

இவ்விரண்டு கல்வெட்டுக்களும் பார்சுவநாதர் கோயிலிலுள்ள மானஸ்தம்பத்தை புஸ்செட்டி என்பவர் நிறுவினார் என்னும் ஒரே செய்தியினை தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் குறிப்பிடுகின்றன. இந்த மானஸ்தம்பம் கி.பி. 1578ஆம் ஆண்டு நிறுவப்பெற்றிருக்கிறது. கல்வெட்டில் கூறப்பட்டுள்ள பாயிசெட்டி, புஸ்செட்டி என்னும் பெயர்களும், ஜகதாபிகுத்தி என்ற ஊரின் பெயரும் தமிழ்ப்பெயர்களாகத் தெரியவில்லை. மிக்கவாறும் இவர்கள் கர்நாடக மாநிலத்தவராகவும், இவ்வூர் அந்த மாநிலத்திலுள்ளதாகவும் இருக்கலாம். சித்தாமூருக்கும், கர்நாடக மாநிலத்தில் குறிப்பாக சிரவணபெல்கோலாவிற்கும் தொடர்பு இருந்தமையும், சித்தாமூரிலேயே கன்னட வரிவடிவம் கொண்ட இரு கல்வெட்டுக்கள் இருப்பதுவும் இக்கருத்திற்கு மேலும் வலிமையூட்டுவதாகும்.

12. பார்சுவநாதர் கோயில் கோபுரத்தின் உட்சுவரிலுள்ள கல்வெட்டு.[26]

சமஸ்கிருத மொழியில் எழுதப்பெற்ற இச்சாசனம் சகஆண்டு 1787-ல் (கி.பி. 1865) அபிநவ ஆதிசேனபட்டாரகர் என்பவரி பொதுமக்களிடமிருந்து பெற்ற பணத்தினால், தீர்த்தங்கரர்களது சிற்பங்களுடன்கூடிய கோபுரத்தினைக் கட்டி முடித்தார் என இயம்புகிறது.

அபிநவ ஆதிசேன பட்டாரகர் அப்போது சித்தாமூர் மடத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்த புதிய மடாதிபதியாக இருக்க வேண்டும். இந்த கோபுரம் ஆட்சி புரிந்தவர்களின் உதவியின்றி பொது மக்களிடமிருந்து பெற்ற பண உதவியினால் எழுப்பப்பட்டிருப்பதை நினைக்கும் போது, அங்குள்ள மக்களின் சமய உணர்வினையும், பற்றினையும் நன்கு அறியலாம்,

13. கோபுரத்தின் உட்சுவரிலுள்ள மற்றொரு கல்வெட்டு[27]

இது சமஸ்கிருதத்தைக் கன்னட எழுத்துக்களால் எழுதப்பெற்றதாகும். இந்த ஜினாலயத்திற்கு நல்ல பணிகள் செய்வதால் அடையும் புண்ணியத்தினைப் போற்றிப் பாடல்களாக இங்கு பொறிக்கப்பட்டிருக்கிறது.

இதில் ஆண்டு குறிப்பிடப்படவில்லையெனினும், இக்கல்வெட்டு கோபுரத்தின் உட்சுவரிலேயே அமைக்கப்பட்டிருத்தலால்

கோபுரப் பணி முடியப் பெற்ற கி.பி. 1865ஆம் ஆண்டிலேயே இதுவும் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். இக்கல்வெட்டுப் பாடல்களை முழுமையாக அறிவதற்கில்லை.

14. சன்னியாசிக்கல் என்னும் கற்பலகையிலுள்ள கல்வெட்டு[28]

சகஆண்டு 1503-ல் (கி.பி. 1581) வையப்ப கிருஷ்ணப்ப நாயுக்கரின் பிரதிநிதியாகிய பொம்மைப்பிள்ளை என்பவர் சித்தாமூரை சிதம்பரேஸ்வரர் கோயிலின் அபிடேக, வழிபாட்டுச் செலவுகளுக்காக வழங்கிய செய்தி இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது. இதில் சித்தாமூர் உடைக்காடு நாடு என அழைக்கப்பெற்ற திருக்கோவலூர் பற்றிலிருந்த ஊர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இந்த உடைக்காடு நாடு திருவதி இராச்சியத்தினுட்பட்ட வழுதிலம்பட்டுச் சாவடியிலுள்ள திருமுனைப்பாடி நாட்டின் ஒரு பிரிவு எனவும் அறிய வருகிறோம்.

செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த நாயக்க மன்னர்களுள் ஒருவர் கிருஷ்ணப்பநாயக்கராகும். இந்த கிருஷ்ணப்ப நாயக்கரும், வெங்கடப்ப நாயக்கரும் (கி. பி. 1570-1600) ஒருவரே என்று கூறுவாருமுளர்.[29] இவருடைய பிரதிநிதியாக இருந்தவர் பொம்மையப் பிள்ளையாவார். கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சிதம்பரேஸ்வரர் கோயில் சிதம்பரத்திலுள்ள நடராசப்பெருமான் கோயிலாகும்.[30] உடைக்காடுநாடு என்னும் திருக்கோவலூர் பற்று தென்பெண்ணையாற்றின் வடகரையிலுள்ள சிலஊர்களைக் கொண்ட நாட்டுப்பிரிவாகும். திருமுனைப்பாடி நாடு என்பது திருநாவலூர், திருவெண்ணெய் நல்லூர் முதலிய பல ஊர்களை உள்ளடக்கியதாகும். வழுதிலம் பட்டுச் சாவடி என்பது சிதம்பரத்தையும், அதனைச் சுற்றியுள்ள பகுதியையும் குறிக்கும்.[31] இவையனைத்தையும் தன்னகத்தே கொண்ட இராச்சியமே திருவதி இராச்சியமாகும். கடலூருக்கு அண்மையிலுள்ள திருவதிகை எனும் ஊரின் பெயரடிப்படையில் திருவதி இராச்சியம் என்னும் பெயர் இதற்கு வழங்கப் படலாயிற்று.

இக்கல்வெட்டிலிருந்து அறியப்பெறும் செய்திகளுள் சித்தாமூர், சிதம்பரம் சிவன் கோயிலுக்குத் தானமாக அளிக்கப் பட்ட செய்தி குறிப்பிடத்தக்கதாகும். சமணத்தலமாகத் திகழ்ந்த இவ்வூர் கி.பி, 1581 ஆம் ஆண்டில் சைவசமய

கோயிலுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கி.பி. 1578ஆம் ஆண்டில் பார்சுவநாதர் கோயிலில் மானஸ்தம்பம் நிறுவியசெய்தி முன்பே கூறப்பட்டிருப்பதை அறிவோம். இதிலிருந்து மூன்றாண்டிற்குள் சித்தாமூர் சிதம்பரம் கோயிலில் நடைபெறும் அபிடேக, வழிபாட்டுச் செலவுகளுக்காக வழங்கப்பட்டிருக்கிறது. சித்தாமூர் முழுவதும் தானமாக அளிக்கப்பட்டிருந்தால், அது சமயக் காழ்ப்பின் அடிப்படையில் செய்த தானமாகத்தான் இருக்க வேண்டும். பார்சுவநாதர் கோயில் கட்டப்பெற்று, அதில் மானஸ்தம்பம் நிறுவி அனைத்துப் பணிகளும் நிறைவுற்றிருக்கும் காலத்தில் (கி.பி. 1578-ல்) இவ்வூர் சிறப்புமிக்க சமணத்தல மாகத் திகழ்ந்திருக்க வேண்டுமென்பதில் கருத்துவேறுபாடில்லை. இந்த சமயத்தில் (கி.பி. 1581ல்) சித்தாமூர் முழுவதையும் சிதம்பரம் கோயிலுக்குத் தானமாக அளித்திருந்தால் அங்கு சமயப்போர் நிகழ்ந்து வேறு விபரீத விளைவுகள் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய நிகழ்ச்சிகள் கி.பி. 1581ஆம் ஆண்டில் நடைபெற்றதாக எந்தவித சான்றுகளும் இல்லை. மேலும் சித்தாமூர் தொடர்ந்து பிற்காலம் வரையிலும் சமண சமயதலமாகத் திகழ்ந்து பார்சுவநாதர் கோயிலின் கோபுரப் பணியும் இனிது நடைபெற்றிருக்கிறது. எனவே சிதம்பரம் கோயிலுக்கு வழங்கப்பட்ட சித்தாமூரிலுள்ள நிலப்பகுதி பார்சுவநாதர், மலைநாதர் கோயில்களையும், அவற்றிற்குரிய பள்ளிச்சந்த நிலங்களையும் தவிர்த்து எஞ்சியவை என்று கூறுவதே சாலப்பொருத்தமாகும். சித்தாமூரில் சைவசமயத் தினரும் வாழ்ந்து வந்தமையை வேறு சில கல்வெட்டுக்களினால் அறியக்கிடக்கிறோம். பெரும்பாலும் சைவசமயம் அப்போது இவ்வூரில் சிறப்படையத் தொடங்கியிருக்க வேண்டுமென்று கூறலாம்.

15. **பார்சுவநாதர் கோயிலில் பிரம்மதேவர், கணதரர், சரஸ் வதி, பத்மாவதி, ஜுவாலாமாலினி ஆகியயோரது கரு வறைகளை ஒட்டியுள்ள மண்டபத்தில் காணப்படும் கல் வெட்டு.**

ஓம் ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன சகாப்தஹ 1825 கலியப்தஹ 5004 பிரபவதி சகாப்தஹ 35 மேல் செல்லா நின்ற வருஷம் சுப கிருது நாம சம்வத்சரம் வைகாச மாதம் 11 தியதி திருப்பறம்பூர் டிப்டி கலக்டர் ஸ்ரீ டாலய்யா அவர்கள் களத்திரிம் மாதுஸ்ரீ குணமாலையம்மாள் தன் அத்யோபவர்க சுகநிமித்தம் சித்தாமூர் ஸ்ரீ சன்னதியில் ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமத் அபினவ லக்ஷ்மிசேன

பட்டாரக சுவாமிகள் ஆக்ஞானு மதியின் பேரில் சரஸ்வதி அம்மன் முதலான ஐந்து அம்மனை சன்னதியில் செய்வித்து பிரதிஸ்டா மகோத் சவமும் செய்விக்கப்பட்டது. இதற்கு நைவேத்தியத்திற்கு நஞ்சை நிலத்தில் காணிவிடப்பட்டது.

இந்த கல்வெட்டு இப்புத்தக ஆசிரியரால் படிக்கப்பெற்றதாகும். இது கிரந்தம், தமிழ் ஆகிய வரிவடிவங்களைக் கொண்டுள்ளது. இதில் ஆண்டு, தியதி முதலியவையும், வேறு சில பகுதிகளும் கிரந்த வரிவடிவத்தைப் பெற்றிருந்தபோதிலும், அச்சிடும் வசதிக்காக வரிவடிவ மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த சாசனத்தின் படி திருப்பறம்பூரைச் சார்ந்த உதவி ஆட்சியாளர் (Deputy collector) ஸ்ரீபாலய்யா அவர்களது மனைவியாகிய குணமாலையம்மாள், தாம் நல்ல உடல் நலத்துடன் திகழவேண்டி சித்தாமூர் கோயிலில் சரஸ்வதி, பத்மாவதி, ஜூவாலாமாலினி, பிரம்மதேவர், கணதரர் ஆகியோருக்குச் சிறிய கருவறைகள் கட்டி, அதில்அத்தெய்வங்களது சிற்பங்களை நிறுவினர் எனவும், அவற்றின் நைவேத்தியச் செலவிற்காக காணி நஞ்சை நிலம் அளித்தார் எனவும் அறிய வருகிறோம். மேலும் அப்போது புதியமடாதிபதியாக இருந்த அபினவ லஷ்மிசேன பட்டாரகரது அனுமதியுடன் மேற்குறிப்பிடப்பட்ட தெய்வங்கள் நிறுவப்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சாதவாகன ஆண்டு 1825-க்கும், கலிவருடம் 5004—க்கும் சமமான கிறித்தவ ஆண்டு 1903 ஆகும். இதே ஆண்டில் தான் தமிழ் வருடமான சுபகிருதும் வந்திருக்கிறது. எனவே இந்த கல்வெட்டு 1903 ஆம் ஆண்டு வைகாசி மாதம் (ஏப்ரல்) பதினொராம் தியதி பொறிக்கப்பட்டதென்பது தெளிவாகும்.

திருப்பறம் பூரைச் சார்ந்த ஸ்ரீபாலய்யா என்பவர் 1860-ல் சென்னைமாகாண அரசில் உதவி ஆட்சியாளராகப் பணிபுரிந்தவர் எனக்கூறப்படுகிறது. இவர் செஞ்சியிலுள்ள வெங்கடரமண சுவாமி கோயிலிருந்து யானைச் சிற்பங்களைச் சித்தாமூருக்கு கொண்டுவந்து தேர்மண்டபத்தில் நிறுவியதாகவும் கருதப்படுகிறது. ஆனால் இவர் எந்த ஆண்டிலிருந்து குறிப்பாக எந்த ஆண்டுவரை பணிபுரிந்தவர் என்பதனையோ அல்லது அவரைப் பற்றிய வேறுசெய்திகளையோ அறிந்து கொள்வதற்கில்லை. இவரது மனைவியாகிய குணமாலையம்மாள் 1903 ஆம் ஆண்டு சரஸ்வதியம்மன் முதலிய ஐந்து தெய்வங்களுக்கு கருவறைகள்,

கட்டியதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. மிக்கவாறும் இவ்வம்மையார் தனது வயதான காலத்தில் தான் இத்தகைய நற்காரியத்தைச் செய்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

16. அலங்காரமண்டபத்தின் முதல் வரிசையிலுள்ள மூன்ருவது தூணில் காணப்படும் கல்வெட்டு.

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம்
சகஸ்ராஷ்ட சப்ததிதிரி விக்ருதி
சம்வத்சரே உத்ராயனே புஷ்யமாச
சுத்தபௌர்ணமி சுபயோக தினத்தில்
சோமவாரம் திருதியில் பார்ஸ்வதீர்த்தங்கர
மண்டபம் புனருத்தாரணம் ஸ்வஸ்திஸ்ரீ
நிஜகடிக டில்லி கொல்லாபுர ஜினகஞ்சி
பெனுகொண்ட சதுர்த்த சித்த
சிம்மாசன தீஸ்வரராகிய லக்ஷ்மிசேன
பட்டாரக பட்டாச்சார்ய வர்யசுவாமிகள்
பார்ஸ்வநாத ஜினலயத்தில்
புனருத்தாரணம் செய்துவைக்கப்பட்டது
சாலிவாகன சகாப்தம் ....
விக்ருதி வருஷம் தை மாசம் 22

1951

இந்த கல்வெட்டும் புத்தக ஆசிரியரால் படிக்கப்பெற்றதாகும். இதிலும் கிரந்த வரிவடிவம் ஆங்காங்கே உள்ளது. இக்கல்வெட்டின்படி சாதவாகன வருடம் 1873, தமிழ்வருடம் விக்ருதியில் உத்ராயண காலமான தைமாதம் 22ஆம் தியதி திங்கட்கிழமையாகிய பௌர்ணமி நன்னாளில் பார்சுவநாத தீர்த்தங்கரர் கோயிலுள்ள இந்த மண்டபம் புதுப்பிக்கப்பட்டது என்பதாகும். இதனை டில்லி, கொல்லாபுரம், பெனுகொண்டா, ஜினகஞ்சி ஆகிய நான்கு புண்ணிய மடங்களுள், ஜினகஞ்சி (சித்தாமூர்) மடாதிபதியாக அப்போது வீற்றிருந்த ஸ்ரீ லக்ஷ்மிசேன பட்டாரக பட்டாச்சார்யவர்ய சுவாமியவர்கள் புனருத்தாரணம் செய்து வைத்தார் எனவும் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டின் இறுதியில் 1951 எனும் கிறித்தவ ஆண்டும் பொறிக்கப் பட்டிருக்கிறது

கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள சகஆண்டு 1873-ம் கிறித்தவ ஆண்டு 1951-ம் ஒன்றுகும். எனவே இந்த அலங்கார மண்டபம் 1951ஆம் ஆண்டு தைமாதம் 22ஆம் தியதி புதுப்பிக்கப்பட்டிக்

கிறது. இம்மண்டபம் கி.பி. 19ஆம் நூற்றுண்டுக் கலைப்பாணியைக் கொண்டு விளங்குவதாகும். (கோயிலின் கோபுரம் கட்டி முடிக்கப்பெற்ற 1865ஆம் ஆண்டிலேயே இதுவும் கட்டப் பெற்றிருக்கலாம்) பின்னர் காலப்போக்கில் இது சரிவர கண் காணிக்கப்படாமல் பழுதடைந்திருக்க வேண்டும். எனவே 1951ஆம் ஆண்டு அப்போதைய மடாதிபதி இதனைச் சீர்செய்து புதுப்பித்திருக்கிறுர் என்பது தெரியவருகிறது.

அலங்கார மண்டபத்திலுள்ள மேலும் ஐந்து தூண்களில் ஐந்து மடாதிபதிகளின் சிற்பங்களும், அவற்றின்கீழ் ஸ்வஸ்திஸ்ரீ லக்ஷ்மிசேன பட்டாரக பட்டாச்சார்ய வர்யசுவாமிகள் என்னும் பட்டப்பெயரும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றில் பட்டப்பெயர் மட்டிலும் இடம்பெற்றிருப்பதால், அவர்களுடைய இயற்பெயர்களையோ அல்லது அவர்கள் மடாதிபதியாக இருந்த காலத்தினையோ கூறுவதற்கில்லை.

17. திருமழபாடிக் கல்வெட்டு[32]

சித்தாமூரிலுள்ள கல்வெட்டுக்கள் மட்டுமின்றி திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த உடையார்பாளையம் தாலுகாவிலுள்ள திருமழபாடி என்னும் ஊரில் காணப்படும் கல்வெட்டொன்றும், தென்னுர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த திருக்கோவலூர் தாலுகாவில் மாறங்கியூர், பரனூர் என்னுமிடங்களிலுள்ள இரு கல்வெட்டுக்களும் சித்தாமூர் பற்றிய செய்திகளைக் கொண்டிலங்குகின்றன.

திருமழபாடியிலுள்ள வைத்தியநாத சுவாமி கோயில் என்னும் சிவன் கோயிலில் முதல் குலோத்துங்கசோழனது 45-வது ஆட்சியாண்டுக் (கி.பி. 1115) கல்வெட்டொன்று காணப்படுகிறது. இதில் இக்கோயிலுக்குப் பல்வேறு நபர்கள் வெவ்வேறு தானங்கள் வழங்கிய செய்தி இடம்பெற்றுள்ளது. சிற்றுமூரைச் சார்ந்த பெருமான் கற்பகம் என்றழைக்கப்பட்ட களப்பாள ராஜன் என்பவரது மகளாகிய இராசேந்திர சோழியார் என்னும் பெண்மணி திருமழபாடிக் கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிக்க ஏற்பாடு செய்திருக்கிறுர். இக்கல்வெட்டிலிருந்து கி.பி. 12ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே சித்தாமூரில் சைவசமயத்தவரும் வாழ்ந்திருக்கின்றனர் என்ற உண்மை புலனுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள களப்பாள ராஜன், அவரது மகளாகிய இராசேந்திரசோழியார் ஆகியோர் பற்றிய வேறு செய்திகளை அறிவதற்கில்லை.

18 மாறங்கியூர் கல்வெட்டு[33]

மாறங்கியூர் சிவன் கோயிலுள்ள ஒரு கல்வெட்டு கோனேரின்மை கொண்டான் மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் ஆட்சிக்காலத்தில் (கி. பி 1357) பொறிக்கப்பட்டதாகும். இதில் மாறங்கியூர் சிவன்கோயிலில் நடத்தப்பெற்ற சந்திவழிபாட்டிற்கும், அவ்வூரிலிருந்த முடிமன்னர்நாயகன் என்னும் பெயருடைய மடத்திற்கும் வழங்கப்பெற்ற தேவதான நிலங்களைச் சித்தாமூரில் வாழ்ந்த தியாகப்பெருமான் பெண்ணுகிய பெருமான் என்பவர் கண்காணித்து வந்த செய்தி கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கோயிலுக்கும், மடத்திற்கும் அந்த நிலங்கள் தானமாக வழங்கப்படவேண்டுமென மன்னனிடம் விண்ணப்பம் செய்தவரும் சித்தாமூரைச் சார்ந்த இவரேதான். அக்காலத்தில் சித்தாமூர் இருங்கோளப்பாடி நாட்டுப்பிரிவைச் சார்ந்த ஒரு ஊராகத் திகழ்ந்திருக்கிறது. இக்கல்வெட்டிலிருந்து கி. பி. 14 ஆம் நூற்றுண்டிலும் சைவசமயத்தினர் சித்தாமூரில் வாழ்ந்திருக்கின்றனர் என்பது தெரியவருகிறது. அவர்களுள் சிலர் வேறு இடங்களிலுள்ள சிவன் கோயில்களில் ஈடுபாடு கொண்டிருந்தமையும் அறியற்பாலதாகும்.

19. பரனூர் கல்வெட்டு[34]

திருக்கோவலூரைச் சார்ந்த பரனூர் என்னும் ஊரை எட்டியுள்ள சேரிப்பகுதியில் காணப்பெறும் கல்வெட்டு விசயநகர அரசரான இரண்டாம் தேவராயரது ஆட்சியில் கி.பி. 1433ஆம் ஆண்டில் எழுதப்பெற்றதாகும். அப்போது இவ்வரசனின் மகாபிரதானியாக பெருமாள் தேவதண்டநாயகர் இப்பகுதியின் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தார். இவர் அச்சமயத்தில் சித்தாமூரைத் தனது பெயரால் மகாபிரதான பெருமாள் தேவதண்டநாயகச் சதுர்வேதிமங்கலம் எனப்பெயரிட்டு இறையிலிசர்வமானிய ஊராகத் திகழச்செய்திருக்கிறர். கல்வெட்டில் சித்தாமூர் பெண்ணையாற்றின் வடகரையிலுள்ள திருக்கோவலூர் பற்றுகிய உடைக்காடு நாட்டைச்சார்ந்த பரனூரின் ஒரு சிற்றூர் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே கி பி. 1433ஆம் ஆண்டில் சித்தாமூர் மகாபிரதான பெருமாள் தேவதாண்டநாயகச் சதுர்வேதிமங்கலம் என்னும் பெயரிடப்பட்டு, வரிசெலுத்தப்பட வேண்டாத சர்வமானிய ஊராகத்திகழ்ந்திருக்கிறது. அதாவது நான்கு வேதங்களையும் நன்கு கற்றறிந்த (சதுர்வேதி) பிராமணர்களுக்கு எந்த வித

வரியும் செலுத்தப்படவேண்டாத தானமாக இவ்வூர் அளிக்கப் பெற்றிருக்கிறது என்பது புலனாகும்.

இதுகாறும் கூறப்பட்ட கல்வெட்டுச் செய்திகளை ஒட்டு மொத்தமாக நோக்கினால் பல்வேறு உண்மைகள் தெரிய வருகின்றன கி. பி. 9 ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே சமணம் சித்தாமூரில் வேரூன்றியிருக்கிறது. சோழராட்சியில் மலைநாதர் கோயில் தோற்றுவிக்கப்பட்டு பலதானங்கள் அதற்கு வழங்கப் படடிருப்பதைக் காணலாம். சமண சமயத்தலமாக விளங்கிய இவ்வூரில் கி.பி. 12ம் நூற்றாண்டில் சைவசமயத்தவரும் வாழ்ந்து வந்திருக்கிருக்கின்றனர். பொதுவாக கி.பி. 9ம் நூற்றாண்டிலிருந்து கி பி. 12ம் நூற்றாண்டுவரை சமணசமயம் சிறப்புற்று, மலைநாதர் கோயிலும் நல்ல முறையில் கண்காணிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. அதன்பின்னர் சைவசமயம் இங்கு செல்வாக்குப் பெறறிருக்கவேண்டும். கி.பி. 13,14,15 ஆம் நூற்றாண்டுகளில் இங்கு சமணசமயம் எந்த நிலையிலிருந்தது என்பதை விளக்கப் போதிய சான்றுகளில்லை. மாறாக, சைவசமயத்தின் செல்வாக்கினை வேறு இடங்களிலுள்ள கல்வெட்டுக்களின் மூலம் உணரமுடிகிறது. பரனூர், மாறங்கியூர் முதலிய இடங்களிலுள்ள சாசனங்கள் சமணசமயம் பற்றி எதுவும் கூறவில்லை. கி.பி 15ம் நூற்றாண்டில் சித்தாமூர் மகாபிரதான தேவதண்டநாயக சதுர்வேதிமங்களம் எனப்பெயரிடப்பட்டு பிராமணர்களுக்கு இறையிலி சர்வமானிய மாக வழங்கப்பட்டிருப்பதிலிருந்து, இவ்வூரில் சைவசமயமே செல் வாக்குற்றிருந்ததை அறியமுடிகிறது. அப்போது இங்கு சமண சமயத்தவர் எந்த நிலையில் இருந்தனர் என்பது பற்றிக் கூற சான்றுகள் எவையும் இல்லை. மலைநாதர் கோயில் அந்த சமயத்தில் இருந்தபோதிலும், அதில் வழிபாடு தவறாமல் நடைபெற்றதா என்றும் கூற இயலவில்லை. எவ்வாறாயினும் கி,பி, 15ஆம் நூற்றாண்டில் சமணசமயம் சித்தாமூரில் செல்வாக்குடன் திகழ வில்லை என்பது உறுதியாகிறது.

பின்னர் பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் இங்கு சமண சமயம் மீண்டும் புத்தொளி பெறலாயிற்று. அப்போது சித்தா மூரில் பார்சுவநாதர் கோயில் பெரிதாக்கப்பெற்று, மடமும் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. கி.பி. 1578ஆம் ஆண்டில் பார்சுவ நாதர் கோயிலில் மானஸ்தம்பம் நிறுவப்பட்டிருப்பதால், அந்த ஆண்டில் கோயில் கட்டடப்பணிகள் முடிவடைந்திருக்கவேண்டும். ஆனால் கி பி. 1581 ஆம் ஆண்டு சித்தாமூரிலுள்ள சைவசமயத் தவர் வாழ்ந்த பகுதி சிதம்பரம் நடராசப்பெருமான் கோயில்

செலவுகளுக்காகத் தானமாக வழங்கப்பெற்றிருக்கிறதாக அறிகிறோம். எனவே கி.பி. 16ஆம் நூற்றுண்டிலும் இவ்வூரில் சைவ சமயம் நிலை பெற்றிருந்திருக்கிறது. இதற்குப் பின்னர் சமண சமயமே மேலோங்கியிருந்ததாகத் தெரிகிறது. கி.பி. 19ஆம் நூற்றுண்டில் பார்சுவநாதர் கோயிலின் கோபுரப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன. நவாப்புக்கள், ஆங்கிலேயர் ஆகியோரது ஆட்சியில் சித்தாமூர்க் கோயிலுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்படாவிட்டாலும், தொடர்ந்து சமணசமயமே இங்கு நிலை பெற்றிருக்கிறது என்பது நன்கு புலனுகிறது.

அடிக்குறிப்புக்கள்

1. SII, vol, VII, No. 828, ARE, 201/1902
2. ARE, 1937-38, pt, 2, P. 109
3. ARE, 211, 212/1914, Inscriptions of Pudukkottai State, No 224
4. அரங்க. பொன்னுசாமி, தாளுண்மை நாட்டு வரலாறு, பக், 94-96
5. Inscriptions of Pudukkottai State, No 224, ARE, 211, 212/1914
6. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக் 136
7. A manual of Pudukottai State, vol, II, p, 993
8. K. A. Nilakanta sastri, The Colas, p 141
9. SII, vol, VII p, 507, Appendix-A
10. SII, vol, VII, No 830, ARE, 203/1902
11. SII, vol, III, No 94
12. ARE, 13/1899
13. தென்னிந்திய கோயில் சாசனங்கள் (தெ. கோ. சா,) பாகம் 1, சாசனம் 26
14. தெ. கோ. சா; பாகம் 1, சாசனம், 28
15. SII, vol, VII, No 829, ARE, 202/1902
16. SII, vol, VII, p, 509, Appendix-A
17. ARE, 222/1904, 526/1937-38
18. K. A. Nilakantasastri, Op-Cit, pp, 367-373

19. Tamil Lexicon, vol, 4, P 2149
20. தெ. கோ. சா. பாகம் 1, சாசனம் 27
21. தெ. கோ. சா. பாகம் 1, சாசனம் 29
22. தெ. கோ. சா. சாசனம் 29-ன் விளக்கவுரை
23. தெ. கோ. சா, பாகம் 1, சாசனம் 30
24. தெ. கோ. சா, பாகம் 1, சாசனம் 31
25 ARE, 517/1937-38
26. ARE, 518/1937-38
27. ARE, 520/1937-38
28. ARE, 519/1937-38
29. ARE, 68/1935-36
30. C. S. Srinivasachari, A History of Gingee and its rulers, P, 92
31. ARE, 1935-36, pt, II, p 88
32 C. S. Srinivasachari, Op-cit, P, 126
33. SII, vol, V, No. 640
34. ARE, 102/1935-36, also pt, 2, P 83-84

8

சித்தாமூர் மடம்

பண்டைக் காலத்தில் துறவற நோன்பினை ஏற்றுக்கொண்ட சமணசமயத் துறவியர் மழைக் காலத்தில் ஒன்றுகூடி வாழும் பழக்கத்தினை மேற்கொண்டனர். இவர்கள் ஒருங்கிணைந்து வாழ்ந்த இடங்கள் மலைக் குகைகளாதலின், அங்கு கற்படுக்கைகளும் வழிபாட்டுச் சின்னங்களும் ஏற்படுத்தப்படலாயின. இத்தகைய பாழிகளில் துறவறம் நோற்ற அருந்தகையோர் சமய நெறிகளைப் பற்றிய கருத்துப் பரிமாற்றங்களை அவ்வப்போது மேற்கொண்டதன் பயனாக சமயப்போதனைகள், வழிபாட்டு முறைகள் முதலியவை வளம் பெற வாய்ப்பு ஏற்படலாயிற்று. காலப் போக்கில் மலைக்குகை இருப்பிடங்களாகிய பாழிகளின் அடிப் படையில் மடங்கள் உருவெடுத்தன. இந்த மடங்கள் சமயத்தினை மையமாகக் கொண்ட சமுதாயத்தில் பெருஞ்செல்வாக்குற்று கோயில்களையும், அவற்றிற்குரிய நிலங்களையும், பிற சொத்துக்களையும் கண்காணிக்கும் அதிகாரம் பெற்றவையாகத் திகழ்ந்தன. மடங்களுக்கும் நிலம் முதலிய பல தானங்கள் வழங்கப் பெற்று, அவை பொருளாதாரம் மேம்பட்ட நிலையை அடைந்தன. இந்த மடங்கள் சமயபோதனை, உணவளித்தல், அடைக்கலம் கொடுத்தல் மருத்துவ வசதி செய்தல் முதலிய பல்வேறு தொண்டுகளைச் செய்து வரலாயின. எனவேதான் சமயத்தில் ஊறித்திளைத்த சமுதாயத்தில் மடங்கள் வலிமை மிக்க அமைப்பாகத் திகழ முடிந்தது.

சித்தாமூர் மடத்தின் தோற்றம்

சித்தாமூர் கி. பி. 9 ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்தே சமணசமயத்தலமாகத் திகழ்ந்தது என்று முன்பு கண்டோம். ஆனால் அந்த நூற்றுண்டில் இங்கு மடம் இருந்ததாகத் தெரியவில்லை. இங்குள்ள சோழர்காலக் கல்வெட்டில் ஒத்துரைக்கும் மண்டபம் ஒன்று இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறதேயன்றி மடம் என்ற தனியான அமைப்பு இருந்ததாகக் குறிப்பிடவில்லை.

சித்தாமூர் மடத்தினைப்பற்றிய செய்திகள் மெக்கன்சி அவர்கள் தொகுத்த சுவடிகள் சிலவற்றில் காணப்படுகின்றன. இவற்றுள் சில சுவடிகள் படிக்க முடியாத அளவில் சிதைந்தும்

வேறு சில சுவடிகள் கருத்து முரண்பாடுகளைக் கொண்டும் விளங்குகின்றன. இருப்பினும் சில வரலாற்றுண்மைகளை நிலை நாட்டுவதற்கு இச்சுவடிகள் பெரிதும் துணைபுரிகின்றன.

செஞ்சியை கி. பி. 1478-ல் ஆட்சி புரிந்த கவரை வெங்கடபதி நாயக்கர் என்பார் தனக்கு பிராமண வகுப்பைச் சார்ந்த ஒரு பெண்மணியைத் திருமணம் செய்துகொடுக்குமாறு அந்தணர்களை வேண்டினார். அதற்கு அவர்கள், சமணசமயத்தவர் தங்களது சமுதாயத்தினின்றும் ஒருபெண்ணைக் கொடுக்க முன்வருவார்களானால் தாங்களும் பிராமணப் பெண்ணொருத்தியை மணம் முடித்துத் தருவதாக வாக்களித்தனர். எனவே வெங்கடபதி நாயக்கர் சமணரது விருப்பத்தினைக் கேட்கவும், அவர்களும் திண்டிவனத்திலிருந்த தங்கள் சமயத்தலைவருடைய ஆலோசனையின் பேரில் ஒப்புக்கொண்டனர். நாயக்க மன்னன் மனம்மகிழ்ந்து சமணப்பெண்ணைத் திருமணம் புரிய வேண்டிப் பெண்வீட்டிற்குச் சென்றபோது எவரும் இல்லாமலிருந்ததையும், பந்தலில் ஒரு பெண்நாய் கட்டப்பட்டிருப்பதையும் கண்டான். தனக்குச் சமண சமயத்தவர் பெண் கொடுக்க விரும்பாமல் இவ்வாறு செய்தமையால் அவமானமுற்று, அவன் சமண சமயத்தவரைக் கொன்றழிக்குமாறு ஆணைபிறப்பித்தான். இதற்கு அஞ்சிய சமணர் சிலர் வேறு நாட்டிற்குச்சென்று வாழலாயினர்; சிலர் சைவசமயத்தவராயினர்; இன்னும் சிலர் ரகசியமாகவே சமணராக வாழ்ந்து வந்தனர்.

இந்த நாயக்க மன்னது கொடுமைகளுக்கு அஞ்சி உப்பு வேலூரைச் சார்ந்த சமணப்பெருந்தகை ஒருவர் சிரவணபெல் கோலாவிற்குச் சென்று சமயநூற்களைக் கற்றறிந்து, வீரசேனாச்சாரியார் என்னும் பெயர் பூண்டு துறவற நோன்பியாகத் திகழ்ந்தார். சிறிது காலத்திற்குப் பின்னர் இவர் சமண நெறிகளைப் பரப்புவதற்காகத் தமிழகத்திற்கு வந்தார்.[1] அக்காலத்தில் பாலாற்றிற்கும், பெண்ணையாற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த சமண சமயத்தவர்களுக்காக இவர் சித்தாமூரில் மடத்தினைத் தோற்றுவித்து சமயதீட்சை அளித்தும் சமய நெறிகளை மக்களுக்குப் போதித்தும் வரலானார்.[2] இச்செய்தியினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, கி.பி. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீரசேனாச்சாரியார் என்பவரால் சித்தாமூரில் சமணமடம் தோற்றுவிக்கப்பட்டது என்பது நன்கு புலப்படுகிறது.

ஓவியச் சான்றுகள்

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பெருமண்டூரில் சமணக்கோயில் ஒன்றுள்ளது. இக்கோயிலின் கருவறையுள் தீட்டப்பெற்றிருக்கும் சில ஓவியங்கள் சித்தாமூரில் வீரசேனாச் சாரியார் மடம் ஏற்படுத்தியதனை விளக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன. பெருமண்டூர்ப் பகுதியில் வாழ்ந்த சமணர் தலையில் கூடைகளைச் சுமந்து தங்களது வேலைகளைக் கவனித்துக் கொண்டு வருங்கால், ஒருநாள் வீரசேனாச்சாரியார் அங்குதோன்றி தாம் சித்தாமூரில் சமண சமயத்தினை நிலைநாட்டி, அங்குமடம் ஒன்றை ஏற்படுத்த இருப்பதைத் தெரிவிப்பதாக ஒருபகுதியில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அடுத்து, இச்செய்தி யினைக் கேட்டமக்கள் மகிழ்ச்சியுற்று தங்கள் தலையில் வைத்திருந்த கூடைகளை அங்கேயே போட்டுவிட்டு வீரசேனாச்சாரியாருடன் சித்தாமூரை நோக்கிச் செல்வதாக உள்ள சித்திரங்கள் இடம் பெற்றிருக்கின்றன[3] அதாவது இப்பகுதியில் வாழ்ந்த சமண சமயத்தவர் இன்னலுற்று வறுமையில் வாழ்ந்த நிலையில் தங்கள் சமயத்தின் மீது பற்று மிகுந்தவராகத் திகழ்ந்தமையால், வீரசேனாச்சாரியார் சித்தாமூரில் சமணசமயத்தினை நிலைபெறச் செய்து மடம் ஏற்படுத்த விருப்பத்தைக் கூறியவுடனே, தங்களது அன்றாட வேலைகளைக் கூட விட்டுவிட்டு, அவர்பின்னால் சென்றிருக் கின்றனர் என்பதை அறிவுறுத்துகிறது. மெக்கன்சி சுவடித் தொகுப்பில் சித்தாமூர் மடத்தினை வீரசேனாச்சாரியார் தோற்று வித்தார் எனக் கூறப்பட்டிருக்கும் செய்தியினை மெய்ப்பிக்கும் வகையில் இவ்வோவியங்கள் அரியசான்றுகளாகத் திகழ்கின்றன.

மடத்தின் பெயர்

சித்தாமூரிலுள்ள மடம் ஜினகஞ்சி மடம் என்றழைக்கப் பெறுகிறது. திருப்பருத்திக் குன்றமாகிய ஜைன காஞ்சியின் பெயரடிப்படையில்தான் இதற்கு ஜினகஞ்சிமடம் எனப் பெயரிடப் பட்டிருக்கவேண்டும். ஆனால் எப்போது முதல் இப் பெயர் சித்தாமூர் மடத்திற்கு வழங்கப்பட்டது என்று உறுதி யாகக் கூறுவதற்கில்லை ஜைனகாஞ்சியில் சமணமடம் இருந்தமை யும், அதில் **சமந்திரபத்ராச்சாரியார், சிவகோடி ஆச்சாரியார், பூஜ்யபாதர், அகளங்கர், நிஷ்களங்கர்** முதலானோர் மடாதிபதி களாக இருந்தமையும், பின்னர் நாட்டில் குழப்பமும், அமைதி யின்மையும், ஏற்பட்டமையால் கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்குப் பிறகு காஞ்சிமடம் அழிந்ததென்பதையும் மெக்கன்சி சுவடிகள் வாயிலாக அறியக் கிடக்கிறோம்.[4] எனவே ஜைனகாஞ்சி மடம்

அழிந்த பின்னர் அங்கிருந்து துறவியர் சித்தாமூருக்கு வந்திருக்கக் கூடும் என்றும், அவர்களது வருகைக்குப் பின்னர் இங்குள்ள மடம் ஜினகஞ்சிமடம் என அழைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூற இடமுள்ளது.

சித்தாமூர் மடாதிபதிகள்

சித்தாமூர் மடத்தினைத் தோற்றுவித்தவர் உப்புவேலூரைச் சார்ந்த வீரசேனாச்சாரியாராவார். சிரவணபெல்கோலாவிற்குச் சென்று சமண சாத்திரங்களைக் கற்றறிந்த இப்பெருந்தகையோரே சித்தாமூர் மடத்தின் தலைமைப் பொறுப்பினிலமர்ந்த முதலாவது மடாதிபதியாவார். இவர் ஒரு சமயம் காஞ்சீபுரத்திலிருந்த வைணவசமய ஆச்சாரியாரான தாதாச்சாரியாரைச் சமயவாதில் வென்றதாகக் கூறப்படுகிறது. பிற்காலத்தில் வீரசேனாச்சாரியார் தமது சொந்த ஊரான உப்புவேலூரில் இறந்ததாகவும் அறிய வருகிறோம்.[5]

சித்தாமூரில் வீரசேனாச்சாரியாருக்குப் பின்னர் தொடர்ந்து மடாதிபதிகளாக இருந்த அனைவரைப்பற்றியும் அறிவதற்கில்லை. எனினும் ஒருசிலரது பெயர்கள் மெக்கன்சி சுவடித்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. த்ரைவித்யா சக்கரவர்த்தி எனும் **முனிபத்ர தேவாச்சாரியார்** இவர்களுள் முக்கியமானவராகும். இவர் கி.பி. 1816-ல் மடாதிபதியாக இருந்தபோது **கர்னல்மெக்கன்சி** இவரைச் சந்தித்திருக்கிறார். மெக்கன்சியவர்களுக்கு இவர் சமண சமயத்தைப் பற்றியும், செஞ்சி, சேத்துப்பட்டு ஆகிய பகுதிகளிலுள்ள சமணத்தலங்கள் பற்றியும், சித்தாமூர் மடம் பற்றியும் விளக்கமான பதில்களைக் கூறியுள்ளதாக அறியக் கிடக்கிறோம்.[6] கி.பி. 1865-ல் அபிநவ ஆதிசேன பட்டாரகர் என்பவர் மடாதிபதியாகத் திகழ்ந்தார். இவரது காலத்தில் தான் சித்தாமூர்க் கோயிலின் கோபுரம் கட்டப்பெற்றிருக்கிறது.[7]

பின்னர் சின்னகுழந்தைசுவாமி, விமலநாதசுவாமி, அப்பாவு சுவாமி என்பவர்கள் முறையே மடத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்றிருக்கின்றனர். இவர்கள் மூவரும் வீரணாமூரைச் சார்ந்தவர்களாகும் தற்போது சித்தாமூரிலுள்ள மடம் முன்பு சிறியதாக இருந்து, அப்பாவு சுவாமியவர்களது காலத்தில் பெரிய அளவில் கட்டப்பட்டு இன்றளவும் நன்னிலையில் இருந்து வருகிறது. இந்த மடத்தில் இப்புதிய கட்டடம் 1915 ஆம் ஆண்டில் கட்டப்பெற்ற தெனப் பொறிக்கப்பட்டிருக்கிறது. எனவே அப்பாவுசுவாமி 1915 ஆம் ஆண்டில் மடாதிபதியாக இருந்தவர் என்பது தெரிய வருகிறது. இவர்களுக்குப் பின்னர் சக்கரவர்த்தி சுவாமி

அவருடைய மைந்தர் சமுத்திரவிஜயன் சுவாமி ஆகியோர் மடாதிபதிகளாகத் திகழ்ந்திருக்கின்றனர். இவ்விருவரும் அகலூரைச் சார்ந்தவர்களாகும். இவர்களுக்குப் பிறகு வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள எறும்பூரைச்சார்ந்த சந்திரகீர்த்தி சாஸ்திரியாரும், தச்சூரைச் சார்ந்த ஸ்ரீபாலவர்ணி சுவாமியும் மடாதிபதியாக இருந்தனர். ஸ்ரீபாலவர்ணிசுவாமி இளமையிலேயே சிரவணபெல்கோலாவிற்குச் சென்று சமணசாத்திரங்களை நன்கு கற்றறிந்து, பின்னர் சித்தாமூர் மடத்தின் பொறுப்பினை ஏற்று நடத்தியவராகும்.[8] அண்மைக்காலத்தில் தலைமைப் பொறுப்பினின்றும் விலகிய இவர் தமது சொந்த ஊரில வாழ்ந்து வருகிறார்.

தற்போது வளத்தி என்னும் ஊரைச் சார்ந்த சக்கரவர்த்தி சுவாமிகள் மடாதிபதியாக இருக்கிறார். ஆங்கில ஆட்சியின் போதிருந்து தாசில்தார், முன்சிப், மாவட்ட உதவி ஆட்சியாளர் போன்ற பதவிகளை வகித்து சிறந்த நிர்வாகி என்ற நற்பெயர் பெற்றவராகும். எழுபத்திரண்டு வயதான இப்பெருந்தகையோர் சமண தத்துவங்களில் சிறந்த புலமை படைத்தவராகும். சமண சமுதாயம் மறுமலர்ச்சி பெற்று நாட்டிற்கு நல்ல பணிகள் பல ஆற்றிடவேண்டுமென்பதற்காகப் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டுவருகிறார்.

மடாதிபதியின் உடமைகள், உடை, உணவு முதலியன

மடாதிபதி காவி உடையணிந்து தலையில் காவி நிற தலைப்பாகை அணிவது வழக்கமாகும். மயிற்பீலியாலான கட்டு விசிறி, கமண்டலம், ஜபமாலை முதலியவை இவருக்குரியவையாகும். வெளியிடங்களில் நடந்து செல்லும் போது மரக்கட்டையிலான பாதக்குறடுகள் அணிவதுண்டு. மடாதிபதிக்கென்றே தனியாக அலங்காரம் மிக்க குடையும் உண்டு. இதுபோன்று இவருக்கென மரத்தால் செய்யப்பட்ட ஆசனம் ஒன்றும் இருக்கிறது. இவற்றை மடாதிபதியைத் தவிர வேறு எவரும் பயன்படுத்தக்கூடாது.

மடாதிபதி கோயிலுக்கு அல்லது வேறு இடங்களுக்குச் செல்லும்போது பாங்கா என்னும் சின்னத்தை ஒருவர் ஊதி ஒலி எழுப்பி, அவரது வருகையைத் தெரிவிப்பது வழக்கம். தொலைவிலுள்ள ஊருக்குச் சென்றால் அந்த ஊரின் எல்லையிலிருந்து பாங்காவினை ஊதி அவ்வூர் மக்களுக்கு அவரது வருகையைத் தெரிவிப்பர். இவ்வாறு வெளியூர்களுக்குச் செல்லும்போது அவர்

பல்லக்கில் அமர்ந்து, அதனைப் பணியாட்கள் சுமந்துசெல்வார்கள். ஆனால் தற்காலத்தில் பல்லக்கிற்குப் பதிலாக மாட்டுவண்டி கார் போன்ற ஊர்திகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மடாதிபதி ஒருவேளை மட்டிலும் உண்பது மரபாகும். அதற்குப் பின்னர் தேவைப்பட்டால் தண்ணீர் அல்லது பால் போன்றவற்றை மட்டும் அருந்துவர். ஒரு முறை உண்ணுகின்ற உணவும் இனிப்பு, புளிப்பு, உப்பு போன்ற சுவையற்றதாகவே இருக்கும். தவசீலராய் ஒழுகும் மடாதிபதி உணவின் சுவையினை அதிகம் அனுபவித்தல் நன்றன்று என்பதற்காகத்தான் இத்தகைய உணவை உட்கொள்வர். இதுபோன்று பல்வேறு வகையான கிழங்கு தானிய வகைகள், கொழுப்புச்சத்து நிறைந்த பொருட்கள் முதலியவை அவரது உணவில் இடம்பெறுவதில்லை. முற்றும் துறந்தநிலை இவர்களுக்கு வலியுறுத்தப் பெறுவதால், அதிகமான கட்டுப்பாடுகளையும், விரதங்களையும் ஏற்கவேண்டியிருக்கிறது.

மடாதிபதியின் தகுதிகள், அதிகாரங்கள், பணிகள்

பொதுவாக அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவராகத் திகழ்பவரே மடத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்பதற்குரியவராவார். இவர் சமயத்தில் மிகுந்த பற்றுடையவராகவும், சமணநெறிகளைக் குறைவறக் கடைப்பிடிப்பவராகவும், சமய நூற்களை நன்கு கற்றறிந்தவராகவும், ஒழுக்க சீலராகவும் இருத்தல் வேண்டும். பண்டைக்காலத்தில் திருமணம் செய்யாமல் பிரம்மச்சரிய விரதத்தினைக் கடைப்பிடிக்கும் துறவியே மடாதிபதியாக இருக்க இயலும். ஆனால் காலப்போக்கில் குடும்பவாழ்வினில் ஈடுபட்டு பின்னர் பிரம்மச்சரிய விரதத்தைக் கொண்டொழுகுபவரும் மடாதிபதியாகலாம் என்ற நிலை ஏற்பட்டது. சித்தாமூரில் திருமணம் ஆனவர்களும், திருமணம் ஆகாதவர்களும் மடாதிபதிகளாக இருந்திருக்கின்றனர்.

மடத்தின் தலைமைப் பொறுப்பினிலிருப்பவர் தமக்குப் பின்னர் வேறு ஒருவரை மடாதிபதியாக நியமிப்பது வழக்கமாகும். மடாதிபதி தமது முதுமைக்காலத்தில் வேறொருவரை நியமனம் செய்வதற்குள் இறந்து போனால், சமண சமயத்தினர் அனைவரும் கூடி புதிய மடாதிபதியினைத் தேர்ந்தெடுப்பதுண்டு. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவரை கொல்லாபுரம், டெல்லி, பெனுகொண்டா ஆகிய இடங்களுள் ஏதாவது ஒன்றிலுள்ள திகம்பர சமண மடாதிபதி தீட்சை அளித்துமடாதிபதியாக பதவி ஏற்கச் செய்வர்.

புதியதாக நியமனம் செய்யப்படுபவர் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் நிகழ்ச்சியை பட்டாபிஷேகம் என்று கூறுவர். பட்டாபிஷேகத்திற்குரிய நாள் அறிவிக்கப்பட்டபின்னர், அந்த நாளன்று சமண சமூகத்தவர் சித்தாமூர்க்கோயிலில் ஒன்று கூடுவர். இந்நிகழ்ச்சியின் போது மடாதிபதியும், புதியதாக நியமனம் செய்யப்பட விருப்பவரும் மடத்திலிருந்து கோயிலுக்கு மங்கல இசை ஒலிக்க அழைத்துவரப்படுவர். பின்னர் நியமனம் செய்யப்பட இருப்பவரை மணையில் அமரச்செய்து, ஓமத்தீ வளர்த்து வழிபாடு நடத்தி, மடாதிபதி அவரிடம் மயிற்பீலியும், கமண்டலமும் கொடுத்து மடத்தின் தலைமைப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுமாறு கூறி நல்லாசி வழங்குவார். புதியவர் அப்போது சமணம் தழைக்க நற்பணிகளையும், சமண சமுதாயம் சீர்பெற சிறந்த தொண்டுகளையும் ஆற்றுவதாகக் கூறி உறுதி மொழிவார். இதற்குப் பின்னர் கோயிலில் பூசைகள் நடத்தப்பெற்று, அவை முடிந்த பிறகு புதிய மடாதிபதி மடத்திற்கு அழைத்துவரப்பட்டு பொறுப்பேற்றுச் செயல்படுவார். இந்த பொறுப்பேற்கும் நிகழ்ச்சியிலிருந்து புதிய மடாதிபதி **ஸ்வஸ்திஸ்ரீ லட்சுமிசேனபட்டாரக பட்டாச் சார்யவர்ய சுவாமிகள்** என்னும் பட்டப்பெயர் பூண்டு விளங்குவார்.

மடாதிபதி மடத்திற்கு மட்டுமின்றி அனைத்து சமணக்கோயில்களுக்கும் தலைவராக இருப்பதால் அவர் **சர்வ ஜினாலய பரிபாலகர்** என்று அழைக்கப்படுகிறார். எனவே திகம்பரப்பிரிவு கோயில்கள் அனைத்தும் இவரது ஆணையின் கீழ்செயல்படுபவையாகும். தமிழ் நாட்டில் சித்தாமூரில் மட்டிலும் மடம் இருப்பதால், இம்மாநிலத்திலுள்ள திகம்பர சமணர் அனைவருக்கும் தலைவராக இவர் திகழ்கிறார்.

மடாதிபதியின் பணிகள் இருவகைப்படும். ஒன்று சமயப் பணி, மற்றொன்று நிர்வாகப்பணி. மடத்தினையும், கோயில்களையும் நிர்வகிக்கின்ற முழுப்பொறுப்பும் மடாதிபதியைச் சார்ந்ததாகும். இவற்றிற்குரிய சொத்துக்கள், வருமானங்கள், செலவுகள் முதலியவற்றைக் கண்காணித்து வருவது இவரது நிர்வாகப்பணியாகும். இப்பணியினை நிறைவேற்ற இவருக்குத் துணையாக கணக்கர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மடாதிபதியே சமயத்தின் தலைவராக விளங்குவதால், இவரது சமயப்பணிகள் சிறப்பு மிக்கவையாகும். இவற்றுள் **சமண சமூகத்தவருக்குச் சமயபோதனை செய்வது இவரது**

இன்றியமையாத பணியாகும். அதாவது இவர் பல்வேறு ஊர் களுக்குச் செல்லுங்கால், அங்குள்ள சமண சமயத்தவருக்குச் சமய அறநெறிகளைப் போதித்து அவர்களது மனம் நன்கு பக்குவப்படுமாறு செய்வார். பொதுவாக ஆங்காங்கு உள்ள கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறும்போது, மடாதிபதி முக்கியமாக அழைக்கப்படுவாராதலின், அச்சமயத்தில் சமய போதனைகள் தவறாமல் செய்வது வழக்கமாகும். எனவே மக்களை நல்வழிப்படுத்தி, சமயத்தின் கோட்பாடுகளை யாவரும் அறியும்படிச் செய்வது இவரது தலையாய கடமையாகும்.

புதியதாக சமணக்கோயில்கள் கட்டப்படுமாயின் அவற்றைப் பிரதிட்டை செய்வது மடாதிபதியின் பணியாகும். இதுபோன்று புதுப்பிக்கப்பட்ட கோயில்கள் ஜீர்ணோதாரம் செய்யப்பட்டு, அவற்றில் வழிபாட்டினைத் தொடங்கிவைக்கும் போதும் மடாதி பதியே முன்னின்றி அவற்றைச் செய்வது மரபாகும். எல்லா கோயில்களிலும் திருவிழாக்கள் நடத்துவதற்கான தியதிகள் குறிப்பிடப்பட்டபின் அவ்விழாக்கள் மடாதிபதியின் அனுமதி யுடன் தான் நடத்தப் பெறுகின்றன.

பல்வேறு ஊர்களுக்குச் செல்லும்போது, அவ்வூர் இளைஞர் களுக்குப் பூணூல் அணிவித்தலை மடாதிபதியே செய்வது வழக்கம். இந்தச் சடங்கினை உபதேசம் செய்தல் என அழைப்பர். இந்த நிகழ்ச்சியின் போது ஓமத்தீ வளர்த்தி வழிபாடு செய்து, பின்னர் பூணூல் அணிவிக்கப்படும். மேலும் மடாதிபதி தர்மோபதேசம் செய்து பஞ்சமந்திரம் ஓதி அவ்விளைஞர்கள் அறவழி நடக்குமாறு ஆசி வழங்குவார். சிறுமியர்களுக்குப் பூணூல் அணிவிக்கப்படுவ தில்லையாதலால், அவர்களுக்குப் பஞ்சமந்திரம் ஓதுவித்து, தீர்த்த நோன்பினை மேற்கொள்ளுமாறு கூறி அருளுரை வழங்கப் படுகிறது. உபதேசம் பெற்றவர்கள் மட்டுமே பருவம் எய்திய பின்னர் திருமணத்திற்கு உரியவர் என்று கருதப்படுவதால், அனைத்து இளைஞர்களுக்கும் மடாதிபதி பூணூல் அணிவிப்பது மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது.

கோயில்களில் எவ்வித இடையூறுமின்றி வழிபாடுகள் நடை பெற்று வருவதற்கான வழிவகைகள் செய்வதும் மடாதிபதியின் பொறுப்பாகும். கோயிலில் பூசை செய்யும் உபாத்தியாயர்கள் இதில் மடாதிபதிக்கு உறுதுணையாக நிற்பார் கள். கோயில்களில் பணிபுரிவோருக்குள் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அவற்றைச் சரிசெய்தும், தவறிழைத்தவருக்கு தண்டனை வழங்குவதும் மடாதிபதியின் பணிகளாகும்.

மடத்தின் தொண்டுகள்

பண்டைக்காலத்திலிருந்தே நம்நாட்டில் எல்லா சமயங்களையும் சார்ந்த மடங்கள் சமயத்தொண்டும், சமுதாயத் தொண்டும் ஆற்றி வந்தமையால் தான் மிகவும் வலிமைமிக்க அமைப்புகளாக அவை செயல்பட முடிந்தது. காலப்போக்கில் அரசியல், சமய, சமுதாய அமைப்புகள் மாறுபட்டதனல் இந்த மடங்களின் செல்வாக்கு குறையலாயிற்று. ஆனல் சமயக் கோயில்கள் இன்னமும் முழுமையாக மடங்களுக்கு கீழ் இயங்குபவையாக இருப்பதனல், இந்த மடங்கள் இன்றளவும் சிறப்பு வாய்ந்தவையாகவும், செல்வாக்குடையனவாகவும் திகழ்கின்றன.

சித்தாமூர் மடத்தின் கீழுள்ள கோயில்கள் எவையேனும் சரிவர கண்காணிக்கப்படாமல், பழுதடைந்து வருமானல் அவற்றை அவ்வூர் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க புதுப்பிப்பதற்கு வேண்டிய உதவிகளை மடம் செய்து வருகிறது. இது போன்று கோயில்கள் போதிய வருமானமின்றி வழிபாடற்ற நிலைக்குள்ளாக நேரிடின், அத்தகைய கோயில்களில் வழிபாட்டினை மீண்டும் நிலைபெறச் செய்வதற்கு வேண்டிய பொருளுதவியினையும் மடம் செய்து வருகிறது. புதியதாகக் கோயில் கட்டுவதற்கும் சில சமயத்தில் சித்தாமூர்மடம் உதவிசெய்வதுண்டு. இவையனைத்தும் சித்தாமூர்மடத்தின் நிதிநிலை நன்ருக இருக்கும்போது தான் செய்யமுடிகிறது.

சமயக் கல்வியினை சிறுவர், சிறுமியருக்கு புகட்டுவதற்கென கோயிலில் அல்லது சத்திரத்தில் சிறப்பு வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சமயநூற்களை நன்கு கற்றறிந்த பெரியோர்களால் இத்தகைய கல்விபுகட்டப்பட்டு வருகிறது. வடமொழியிலும், தமிழிலும் இயற்றப்பட்ட சமயநூற்களை இளம்வயதினருக்குக் கற்றுக்கொடுப்பதோடு, அவர்கள் பண்பட்ட உள்ளம் கொண்டவர்களாகத் திகழ்வதற்காகவே அறிவுரைகளும், போதனைகளும் வழங்கப்படுகின்றன. இளமையிலிருந்தே மக்கட் செல்வங்கள் நன்னெறிகளால் வளர்க்கப்படவேண்டும் என்ற கருத்திலும் இத்தகைய சமய வகுப்புக்கள் நடத்தப்பெறுகின்றன. இவையன்றி மடாதிபதி வெவ்வேறு ஊர்களுக்குச் செல்லுங்கால் ஆங்காங்கே சமயக்கருத்துக்களை எடுத்துரைத்து சமயபோதனை செய்வதும் வழக்கமாகும்.

சித்தாமூர் மடம் சமயத்தொண்டுகள் மட்டுமின்றி சமுதாய மேம்பாட்டிற்கெனவும் பல தொண்டுகள் ஆற்றி வருவது குறிப்

பிடத்தக்கதாகும். வறட்சி, பஞ்சம் போன்றவற்ருல் சமண சமூகத்து விவசாயிகள் இன்னல்களுக்கு ஆளாகும் போது மடம் ஓரளவு கடனுதவி செய்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் இத்தகைய சூழ்நிலையின் போது மடத்திலிருந்து குறைந்த வட்டிக்குப் பணம் பெற்றுக்கொள்கின்றனர். இதனுல் ஏழை விவசாயிகள் இயற்கை பொய்த்துவிட்ட சூழ்நிலையிலும் ஓரளவு துன்பத்தினைத் தாங்கி வாழ வழிபிறக்கிறது. கடனுகப் பெற்ற தொகையினைப் பணமாகச் செலுத்த இயலாவிடின், நெல்போன்ற தானியங்களாகவும் செலுத்த மடம் அனுமதிக்கின்றது. தற்காலத்தில் வங்கிகள் ஏழை மக்களுக்குக் கடனுதவி அளிப்பது போன்று சித்தாமூர் மடமும் செயல்பட்டு வருவது சிறப்பிற்குரிய ஒன்ருகும்.

சில சமயத்தில் சமணர்களுக்கிடையே ஏற்படும் சொத்துக்கள் பற்றிய வழக்குகள், பிரச்சினைகள் முதலியவற்றைச் சித்தாமூர் மடாதிபதி விசாரித்து நீதி வழங்குவதுண்டு. மூதாதையர் சொத்துக்கள் சந்ததியினருக்குப் பிரித்துக்கொடுக்கப்படும் போது வழக்குகள் ஏற்படுமாயின், அவை மடாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படுகின்றன. இது போன்று சமுதாய அமைப்பிற்குள் ஏற்படும் பல்வேறு விதமான வழக்குகளுள் பெரும்பான்மையானவை மடத்தின் மூலம் நல்லபடியாகத் தீர்த்துவைக்கப்படுவதால், மக்களுக்கு நீதி மன்றத்திற்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. நீதி மன்றத்தில் வழக்குகள் தொடருவதற்குச் செலவழிக்கப்பட இருக்கின்ற பணம், முயற்சி, நேரம், அலைச்சல் ஆகியவை மிச்சப் படுத்தப்படுகின்றன.

சித்தாமூரில் முன்பு பள்ளிக்கூடமும், மருத்துவ வசதியும் கிடையாது. இதனைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் மருத்துவ மனையும் உயர்நிலைப் பள்ளியும் கட்டுவதற்கு முன்வந்தபோது மடம் அதற்குச் சொந்தமான நிலங்களை வழங்கியிருக்கிறது. இந்த மருத்துவமனைக்கு ஆறரை ஏக்கர் நிலமும், பள்ளிக்கு மூன்றரை ஏக்கர் நிலமும் கொடுத்தபெருமை சித்தாமூர் மடத்தினையே சாரும். இதனுல் இவ்வூர்மக்களும், இதனைச் சுற்றியுள்ள ஊர்களில் வாழும் மக்களும் இலவசமருத்துவ உதவியும், கல்வி வசதியும் பெறமுடிகிறது. இவ்வாறு பல்வேறு வழிகளில் சமய, சமுதாய மறுமலர்ச்சி காண சித்தாமூர் மடம் பெருந்தொண்டாற்றி வருகிறதென்ருல் அது மிகையாகாது.

சித்தாமூர் மடத்தின் வருமானம்

மெக்கன்சி தொகுப்பில் சில சுவடிகள் சித்தாமூரிலுள்ள கோயில்கள், மடம் ஆகியவற்றின் நித்தியச் செலவு, வருமானம் முதலியவை பற்றிய செய்திகளைக் கொண்டவையாகும். ஆனால் அச்சுவடிகள் முற்றிலும் படிக்க இயலாத அளவில் எழுத்துக்கள் அழிந்த நிலையிலிருப்பதால் அவற்றின் விபரங்களை அறிந்து கொள்வதற்கில்லை ஒரு சுவடியில் சித்தாமூர், திருநறுங்கொண்டை, திருப்பருத்திக்குன்று, திருமலை முதலிய இடங்களிலுள்ள மடங்கள் (கோயில்கள்?) ஒவ்வொன்றிற்கும் ஆண்டு வருமானம் 4000 வராகன் கிடைக்கிற அளவிற்கு நிலங்கள் இருந்ததாகக் கூறப் பட்டிருக்கிறது. மேலும், சித்தாமூர் மடத்திற்கு (கோயிலுக்கு) விக்கிரம-சோழன் ஆட்சியில் 2500 வராகன் மதிப்பிற்குரிய நிலங் கள் வழங்கப் பட்டிருக்கிறது. பின்னர் விஷ்ணு தேவராயர் (கிருஷ்ண தேவராயர்?) 2400 வராகன் பெறுமான நிலங்களையும், ஸ்ரீரங்கராயர் 1400 வராகன் மதிப்பிற்குரிய நிலங்களையும், வெங்கடபதிராயர் 1000 வராகன் அளவிற்குரிய நிலங்களையும் அளித்ததாகக் கூறப்படுகிறது. மேற்குறிப்பிட்ட அரசர்களுள் விக்கிரம சோழன் காலத்தில் (கி.பி. 1120-1136) சித்தாமூர் மடம் தோற்றுவிக்கப்படவில்லை யாதலால், இம்மன்னன் நில தானம் செய்திருந்தால் அது மலைநாதர் கோயிலுக்குத் தான் செய்திருக்கவேண்டுமே ஒழிய, மடத்திற்கல்ல என்பது தெளிவாகும். இந்த அரசன் தானம் வழங்கிய செய்தி மெக்கன்சி சுவடியைத் தவிர, வேறு எவற்றிலும் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இப்பகுதி முகமதியராட்சியின் கீழ் வந்தபோது, அம்முகமதிய ஆட்சியாளருக்கு உதவியாக இருந்த பிராமணர்கள், ஆட்சி செய்தவர்களுக்குத் தெரியாமலே சித்தாமூர் மடத்திற்கு கொடுக்கப் பட்டுவந்த மானியங்களை 100 வராகன் அளவிற்குக் குறைத்திருக் கின்றனர். ஆர்க்காட்டு நவாப் ஆட்சியில் இந்த மானியமும் 40 வராகன் அளவிற்குக் குறைக்கப்படலாயிற்று. ஆங்கிலேயர் ஆட்சி புரிந்தபோது சித்தாமூர்க் கோயிலுக்கும், மடத்திற்கும் ஒரு ஆண்டிற்கு 60 வராகன் மானியம் மட்டுமே வழங்கப்பட்டிருந்ததாக அறிய வருகிறோம்.[9]

தற்காலத்தில் மடத்திற்கு ஏறத்தாழ 150 ஏக்கர் நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. இந்த நிலங்கள் வளத்தி, பெருமுகை, சித்தாமூர், எய்யில், விழுக்கம், உப்புவேலூர்,

கூடலூர், இளமங்கலம் முதலிய பல ஊர்களில் காணப்படுகின்றன. இந்த நிலங்களைப் பல்வேறு நபர்களுக்குக் குத்தகைக்கு விட்டு, அவர்களிடமிருந்து நெல் முதலிய தானியங்களைப் பெற்று வருகிறது. சித்தாமூரில் மடத்திற்குச் சொந்தமான சில வீடுகள் உள்ளன. இவற்றை வாடகைக்கு விட்டு அதன் மூலமும் வருமானம் கிடைக்கிறது. ஆனால் இதிலிருந்து கிடைக்கப்பெறும் தொகை மிகவும் குறைந்த அளவேயாகும்.

மடாதிபதிகள் வெளியூருக்குச் செல்லும்போது சிறுவர், சிறுமியர்களுக்கு உபதேசம் பண்ணுவதற்காக, அவரவர் தகுதிக்கேற்ப காணிக்கை வழங்குவதுண்டு. அவர் அவ்வூரை விட்டுச் செல்லும்போதும் மக்கள் ஒன்றுகூடி தங்களால் இயன்ற அளவு பணம் காணிக்கையாகக் கொடுத்தனுப்புவதுண்டு, இவை அனைத்தும் மடத்தினையே சேரும்.

ஒவ்வொரு திருமணமும் நடைபெறும் போது, **ஓமவரி** என்னும் சம்பாவனைப் பணம் வசூலிக்கப்பெற்று, அது மடத்திற்கு அனுப்பப்படுவதுண்டு. இதுபோன்று ஒவ்வொரு சமணக் குடும்பமும் **அடுப்புவரி** என்று தங்கள் குடும்பவரியும் செலுத்துவதுண்டு. ஆனால் இது தற்காலத்தில் நடைமுறைப்படுத்தப் படாமல் இருந்து வருகிறது எனவே வருமானமும் குறைகிறது.

சித்தாமூர் மடத்திலிருந்த நூல்கள்

மடங்கள் பண்டைக்காலத்திலிருந்தே சமயக் கல்வி புகட்டும் நிறுவனங்களாகத் திகழ்ந்திருக்கின்றன. சமய நூல்களைக் கற்றறிந்த மடாதிபதிகள் தங்களது சீடர்களுக்கும், பொதுமக்களுக்கும் சமயதத்துவங்களையும், அவற்றின் விளக்கங்களையும் போதித்து வருதல் வழக்கமாகும். இவ்வாறு மடங்கள் கல்வி நிறுவனங்களாகச் செயல்பட்டமையால் அவற்றில் எண்ணிறந்த நூல்கள் இருக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. தனியாக நூலகங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு மடங்களே நூலகப்பணியினையும் ஆற்றிவந்திருக்கின்றன. சித்தாமூர்மடத்தில் ஏட்டுச்சுவடிகளாக ஏராளமான நூல்கள் இருந்ததாக அறியவருகிறோம். இவற்றின் பெயர்கள் மெக்கன்சித் தொகுப்பினில் காணப்படுகின்றன.

புராணம் : மகாபுராணம்.

காவியங்கள் : சத்ர சூடாமணி, முனிஸ்விரதம், நாககுமார காவியம், சந்திரபிரபாகாவியம், பார்சுவப்யுதயம்.

வியாக்கரண நூல்கள் : சக்தாயனம், கௌமாரம், அமரம் தனஞ்சயம்.

தர்க்க நூல்கள் : அஷ்டசகஸ்ரீ, கமலமார்த்தாண்டா, நியமனி தீபிகை, நியாய குமுதசந்திரிகா, நியாயமார்த் தாண்டா, தர்க்கபரிபாஷா, லகுவிருத்திபிரமய ரத்னமாலா.

ஆசார விதி நூல்கள் : யதியாசாரம், ஸ்ராவகாசாரம், சபானசாரம், ஆத்மானுசானம், த்ரைவர்ணிகா, சினசம்கிதா, ஏகசந்தி, ரத்னகரண்டம்.

கதைகள் : தர்மபரிக்ஷா, ஹரிவம்சா, புண்ய ஆஸ்ரவ, கௌமுதி.

பிராகிருத நூல்கள் : த்ரைலோகசாரம், கோமடசாரம், லப்திசாரம், பிராப்ருததிரையா, திரிபங்கி, அலபத்திரிபங்கி, ப்ரரூபனே, சத்திசம்.

தமிழ் நூல்கள் : சிந்தாமணி, சூடாமணி, நீலகேசி மேருமந்தரம், யசோதரம், நாலடியார், திருக்குறள், உதயண குமாரகாவியம், கலிங்கத்துப்பரணி, மண்டலபுருஷநிகண்டு, ஜினேந்திரமாலே, உள்ள முடையான்.

அஸ்டக நூல்கள் : விருஷபநாத அஸ்டகம், சந்திரநாத அஸ்டகம், நேமிநாத அஸ்டகம், பார்சுவநாத அஸ்டகம், அகளங்க அஸ்டகம், பாகுபலிநாத அஸ்டகம், வீரநாத அஸ்டகம், சமவசரணஸ்டகம், த்ரஸ்டாஸ்டகம், நேமிச்சந்திர அஸ்டகம், ஜெயமாலே, சிக்கசாமந்த பத்ரம், தண்டநாதஸ்துதி, புஷ்பாஞ்சலி, சத்திமுக்தாவளி, சகஸ்ரநாமம்.

இவையன்றி பூஜாங்கவிதி, கிரியாவந்தனே, பக்தாமரம் வைத்திய சாஸ்திரம் முதலிய நூல்களும் இந்தமடத்தில் இருந் திருக்கின்றன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நூல்களுள் மகாபுராணம், பார்சுவப்யுதயம், பூஜாங்கவிதி ஜினசம்கிதை, கிரியா வந்தனே ஆகியவை ஜினசேனச்சாரியாரால் இயற்றப்பட்ட வையாகும். த்ரைலோகசாரம், கோமடசாரம், லப்திசாரம் ஆகியவை நேமிசந்ராச்சாரியாராலும்; பிராப்ருத திரையா குந்தகுந்தாச்சாரியாராலும்; ரத்னகரண்டம், நியாய்சாஸ்திரம் ஆகியவை சமந்தபத்ராச்சாரியாராலும் தோற்றுவிக்கப்பட்டவை யாகும். பக்தாமரம் மானதுங்காச்சாரியாராலும், நாகுமார காவியம், மல்லிசேனாச்சாரியாராலும், வைத்திய சாஸ்திரம்

பூஜ்யபாதராலும், சக்தாயனம் சகடாச்சாரியாராலும், ஏகசந்தி ஏகசந்தியாச் சாரியாராலும், சிந்தாமணி திருத்தக்க தேவராலும், மேருமந்திர புராணம், நீலகேசி தர்க்கம் முதலியவை வாமனுச்சாரி யாராலும், திருக்குறள் ஹேலாச்சாரியாராலும் இயற்றப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

சமண நூல்களன்றி புத்த சமயத்தைச் சார்ந்த ஞானபிடகம், வினயபிடகம், அபிதர்மபிடகம் ஆகிய பிடகநூல்களும் இந்த மடத்தில் இருந்திருக்கின்றன. இதுகாறும் கூறப்பட்டவை அனைத்தும் கி.பி. 1816-ல் சித்தாமூர் மடத்தில் இருந்ததாக மெக் கன்சிச் சுவடித்தொகுப்பு குறிப்பிடுகின்றது.[10]

மேலும் அப்பாண்டை நாதர் உலாவின் ஏட்டுச் சுவடிகள் சித்தாமூர் மடத்திலிருந்து ஒரு சிலரால் பெறப்பட்டு அவை பின் னர் காணுமற்போய் விட்டதாகவும், பிற்காலத்தில் அச்சுவடிகளின் வேறு பிரதி சித்தாமூர் மடத்திலேயே கண்டுபிடிக்கப் பெற்று புத்தகவடிவில் அச்சிடப்பட்டதாகவும் அறியக் கிடக்கிறோம்.[11]

தற்போதும் சித்தாமூர் மடத்தில் பல சுவடிகள் காணப்படு கின்றன. இவை முறையாகப் பாதுகாக்கப் படாமையாலும், நெடுங்காலமாகக் கட்டிவைத்தவாறே இருப்பதாலும் சரியாகப் பயன்படுத்தும் வகையில் திகழவில்லை. இன்னும் சில ஏடுகள் சிதைந்தவாறு இருக்கின்றன. சிதைந்தவை போக எஞ்சியுள்ள வற்றில் நல்ல நிலையில் இருப்பவற்றை உரியவர்கள் மூலம் பதிப் பித்து புத்தகவடிவில் வெளியிடுவதற்கு மடம் முழு முயற்சி செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். சுவடிகள் மட்டு மின்றி பலர் அச்சிட்ட ஆங்கில, தமிழ், சமஸ்கிருத நூல்களையும் மடத்திற்கு அளித்துள்ளதாக தெரிகிறது.

அடிக்குறிப்புகள்

1. Mackenzie Manuscripts, Mss. 11, Sec 2
2. Mackenzie Manuscripts, Mss. 12 Sec 5
3. இவ்வோவியங்கள் பற்றிய செய்தியினைத் தெரிவித்த பேராசியர்

சிரே. தன்யகுமார் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

4. **Mackenzie Manuscripts Mss 68**

5. **Mackenzie Manuscripts, Mss** *11*, **Sec 2**

6. **Mackenzie Manuscripts, Mss 68**

7. **Annual Report of Epigraphy, 520/1937-38**

8. இம்மடாதிபதிகள் பற்றிய செய்திகள் சித்தாமூர் ஏ. ஆதிநாத பண்டிதர் அவர்கள் கூறியவையாகும்.

9. **Mackenzie Manuscripts, Mss 11, See 5**

10. **Mackenzie Manuscripts, No 68**

11. அப்பாண்டைநாதர் உலா, பக். 71-72

9

மக்கள் வாழ்க்கை முறைகள்

சித்தாமூரில் வாழும் சமண சமயத்தவர் பொருளாதார மேம்பாடற்றவர்களாதலின் எளிமையாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களது இல்லங்களும் பெரிய அளவிலன்றி தேவைக்கேற்ற வசதிகளையுடையனவாக இருக்கின்றன. மிகச் சில இல்லங்களே மாடியுடையனவாகவும், சற்று பெரியதாகவும் இருக்கின்றன. பெரும்பாலும் விவசாயத்தினை நம்பி வாழும் மக்களாக இருப்பதால் இவர்கள் தன்னம்பிக்கையும், தன்னிறைவும் உடையவர்களாகத் திகழ்கின்றனர். எளிமையிலும் இனிமை காணும் இம்மக்கள் பஞ்சம், வறட்சி போன்ற இன்னல்கள் ஏற்படும் போது தான் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகின்றனர். அதுவன்றி பிறநேரத்தில் மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் காணப்படுகின்றனர்.

சமயநிகழ்ச்சிகளிலும், பிறவற்றிலும் ஒற்றுமையுடன் கூடிச் செயல்படுவது இவர்களது சிறப்பான தன்மையாகும். கருத்து வேறுபாடுகள் எழுந்த காலத்திலும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்லும் மனப்பான்மையுடையவர்களாக இருப்பதால், சண்டை, சச்சரவுகள் அதிகம் ஏற்படுவதில்லை, எனவே தான் சமய - சமுதாய அமைப்புகளுக்குள் வேறுபாடின்றி நல்லுணர்வோடு வாழ வழிவகை பிறக்கிறது. தமிழகத்தில் வாழும் திகம்பர சமணசமயப் பிரிவினர் அனைவருமே ஒரேமாதிரியான வாழ்க்கைமுறை, சடங்குகள் முதலியவற்றைக் கொண்டுள்ளனர். பொருளாதார வசதிக்கேற்பவும், சுற்றுப்புற சூழ்நிலைக்கேற்பவும் சிலமாறுதல்கள் காணப்படுகின்றனவேயன்றி, மற்றவை எல்லாமே ஒரேமாதிரியான அமைப்பினை உடையவையாகும்.

1. குடும்பம்

நம் நாட்டிலுள்ள பெரும்பாலான சமுதாயத்திலிருப்பது போன்று, சமண சமூகத்திலும் தந்தையே குடும்பத்தலைவனாகக் கருதப்படுகிறார். குடும்பத்தினை நிர்வகித்துச் செல்லும் முழுப் பொறுப்பு தந்தையினுடையதுதான். தந்தை இறந்தபின் அக்குடும்பப் பொறுப்பினை ஏற்று நடத்துவது மூத்தமைந்தனின் கடமையாகும் குடும்பச் சொத்துக்களைக் கண்காணிப்பது,

விவசாயம் செய்தல், பொருளீட்டல், குழந்தைகளின் கல்வி, அவர்களது திருமணம் முதலிய அனைத்தையும் பொறுப்புடன் செய்வது தந்தையின் கடமையாகும். குடும்ப முன்னேற்றத்திற்கு தந்தை செய்யும் நற்பணிகளுக்கு உறுதுணையாக நின்று செயல்படுவது தாயின் பணியாகும். குடும்பநன்மை கருதி செய்யப்படும் காரியங்களில் தந்தையும், தாயும் கலந்து முடிவு செய்வதுதான் வழக்கமாகும். பொதுவாக எல்லாக் குடும்பங்களிலுமே தாய், தந்தையர் நன்கு மதிக்கப்பட்டு, அவர்களது அறிவுரைப்படியே மக்கள் செயல்பட்டுவருகின்றனர். எனவே தான் இவர்களால் அன்புடனும், ஒற்றுமையுடனும் வாழ இயலுகிறது.

இவர்கள் மிக்கவாறும் கூட்டுக் குடும்ப வாழ்வினையே மேற்கொள்கின்றனர். திருமணம் ஆன பின்னரும் மைந்தர்கள் தங்களது பெற்றோருடனேயே வாழ்ந்து வருகின்றனர். சொத்துக்கள் பிரிக்கப்பட்டு அவரவர்களுக்கென ஒதுக்கப்படும் போதுதான் தனிக் குடும்பங்கள் அமைக்க முன் வருகின்றனர். இதற்கு மாறாக சில சமயத்தில் திருமணமானவுடன் தனிக் குடும்பங்கள் ஏற்படுத்தப்படுவதும் உண்டு. அவ்வாறு செய்வது குடும்ப ஒற்றுமையினை நிலை நாட்டுவதற்காகத் தான் இருக்கும்.

மகளிர் ஒவ்வொரு குடும்பத்திலும் அன்புடன் நடத்தப் பெறுகின்றனர். சமய நிகழ்ச்சிகளிலும், வீட்டு நிகழ்ச்சிகளிலும் ஆடவரும், பெண்டிரும் ஒருமித்துப் பங்கு கொள்கின்றனர். உணவு சமைத்தல், வீட்டை சுத்தம் செய்தல், கறவையினங்களைக் கண்காணித்தல் போன்றவை இவர்களுடைய அன்றாட வேலைகளாகும். மகளிருக்கும் சொத்து உரிமை உண்டு.

2. சிலசடங்குகள்

மனிதவாழ்வின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை ஏராளமான சடங்குகள் நடத்தப்பெறுகின்றன வாழ்க்கையின் ஒவ்வொரு சடங்குகளுடன் தொடர்பு படுத்தி அவை ஒரு சங்கிலித் தொடராகச் செயல்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம். எல்லா சமூகத்தவரிடமும் இத்தகைய சடங்குகள் சிறிது மாறுபாடுகளுடன் இருந்து வந்து கொண்டிருக்கின்றன.

பிறப்பு

பொதுவாக ஒரு குழந்தை பிறந்த ஏழாவது நாள் 'ஏழாம் காப்பு' என்னும் சடங்கு நடைபெறுகிறது கோயிலில் பூசை

செய்யும் உபாத்தியார் குழந்தை பிறந்த வீட்டில் அன்று ஓமத்தீ வளர்த்து புண்ணியா வசனம் என்னும் வழிப்பாட்டினைச் செய்வார். பின்னர் குழந்தைக்குத் தங்கத்திலான வளையல்களையும், எருக்கம் பட்டையிலான அரை ஞாணினையும் அணிவிப்பார்கள். அந்த நாளிலேயே குழந்தைக்குப் பெயர் சூட்டுவதும் வழக்கமாகும். சில சமயத்தில் பின்னரும் பெயரிடப்படுவதுண்டு. பெயர் சூட்டும் சடங்கிற்கு 'நாம கரணம்' என்று கூறுவர். மாலையில் நடைபெறும் இச் சடங்குகள் முடிந்த பின்னர் விருந்தினர்களுக்கு உணவு வழங்கி மகிழ்வது மரபாகும். குறிப்பாக அவர்களுக்கு அரிசியும், வெல்லமும் கலந்த இனிப்பினையும் வழங்குவார்கள். இதனைக் **'காப்புஅரிசி'** என அழைப்படுதுண்டு.

காதுகுத்துதல்

குழந்தை பிறந்த மூன்றாவது மாதத்திலிருந்து மூன்றாண்டிற்குள் காதுகுத்துவது வழக்கமாகும். ஆண், பெண் ஆகிய இருபாற் குழந்தைகளுக்கும் காது குத்துவது சமண மரபாகும். அன்று உபாதியார் ஔபாசனம் என்னும் வழிபாடு செய்த பின்னரே இந் நிகழ்ச்சி நடைபெறும். பொதுவாக திருநறுங்கொண்டை, ஆர்ப்பாக்கம்ஆகிய இருஇடங்களிலுள்ள சமணக்கோயில்களுள் ஏதாவது ஒன்றில் வைத்து தான் இச்சடங்கினைக் செய்வது வழக்கம். ஆனால் காலப்போக்கில் வசதிக்கேற்ற முறையில் பிற இடங்களிலுள்ள கோயில்களிலும் காதுகுத்தும் சடங்கினைச் செய்துவருகின்றனர்.

பள்ளி செல்லல்

குழந்தைக்கு ஐந்து வயது நிறைவுற்றவுடன் கல்விகற்பதற்கெனப் பள்ளிக்கு அனுப்புவர். பண்டைக்காலத்தில் கோயில்களே கல்விச்சாலைகளாகத் திகழ்ந்தமையால், அங்கு ஆரம்பநிலைக் கல்வி புகட்டப்பட்டு வந்தது. மிக்கவாறும் விஜயதசமி நாளன்று குழந்தையைக் கோயிலுக்கு அழைத்துச்சென்று உபாத்தியார் மூலம் எழுத்துக்களை எழுதக் கற்றுக்கொடுப்பர். அக்குழந்தையை நெல்பரப்பப்பட்ட தரைப் பகுதியில் எழுதுவதற்கு உபாத்தியார் முதலில் கற்றுக்கொடுப்பார். அதன் பின்னர் தொடர்ந்து அதற்கு முறையான கல்வி கற்றுத் தரப்படும். ஆனால் தற்காலத்தில் பள்ளிக்கூடங்கள் தனிப்பட்ட கல்விநிலையங்களாகச் செயல்படுவதால், கோயிலில் எழுத்துக்களை எழுதத் தொடங்கும் நிகழ்ச்சியினைச் செய்துவிட்டு, பின்னர் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகின்றனர்.

உபதேசம் கொடுத்தல்

சமண சமயத்தினைச் சார்ந்த அனைத்து இளைஞர்களுக்கும் ஆங்காங்குள்ள கோயில்களில் வைத்துப் பூணூல் அணிவிக்கப் படும். இதனை உபதேசம் கொடுத்தல் என அழைப்பர். பூணூல் அணிவிக்கும் நிகழ்ச்சியினை மடாதிபதியே செய்வது வழக்க மாகும். சிறுவர்களுக்குப் பஞ்சமந்திரம் ஓதி பூணூல் அணிவிக்கப் படும். சிறுமியர்களுக்குப் பூணூல் அணிவிக்கப்படுவதில்லை யாதலால், அவர்களுக்குப் பஞ்சமந்திரம் ஓதி ஆசீர்வதிப்பது மரபாகும். உபதேசம் பெற்றவர்கள் மட்டுமே வயதுவந்த பின்னர் திருமணத்திற்கு உரியவர்கள் என்று கருதப்படுவதால், அனைத்து மக்களுக்கும் இந்த சடங்கு மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது.

திருமணம்

முன்பெல்லாம் சமணர் திருமணங்கள் நான்கு நாட்களுக்கு நடைபெறுவது வழக்கம். ஆனால் தற்காலச் சூழ்நிலையில் அதிக பொருட்செலவினை முன்னிட்டு பெரும்பாலும் ஒரேநாளில் திருமணச் சடங்குகள் நிறைவுபெறுகின்றன. பெரியோர்களால் முறைப்படி சாதகம் பார்த்து திருமணம் நிச்சயிக்கப்படும். திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக பந்தக்கால் நடுவர். இதனை மங்கலமகளிரே செய்வது குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் பெண்வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் ஒன்று கூடி திருமணத்தினை எல்லோரும் அறியும் வண்ணம் சம்மந்தம் கலத்தல் என்னும் சடங்கினைச் செய்வர்.

திருமணம் மணமகன் வீட்டிலேயே நடைபெறுவது மரபாகும். இத்திருமணத்தினைக் கோயிலில் பூசைசெய்யும் உபாத்தியார்களே நடத்திவைப்பர். திருமண நாளன்று பந்தலில் வண்ணக்கோலங் கள் தீட்டப்பெற்ற மணமேடையில், குத்துவிளக்குகள் ஏற்றி பூரணகும்பங்களை அமைப்பர். மணமேடையில் மணமகனையும், மணமகளையும் தனித்தனியே அமரவைத்து முதலில் ஓமத்தீவழி பாடு செய்வார்கள். பின்னர் மங்கலமகளிர் பூரணகும்பங்களை ஏந்தி ஊரின் ஒருபுறமுள்ள நீர்நிலையிலிருந்து தண்ணீர் எடுத்து வருவார்கள். அப்போது ஜலதேவதை வழிபாடு, அரசமர வழிபாடு முதலியனவும் நடைபெறும்.

மணமகன் கல்விகற்பதற்கென சிரவணபெல்கோலா செல்வது போன்றும், அவரைப் பெண்ணின் தந்தை தமது மகளை மணம் முடித்துத் தருவதாகக் கூறி அழைத்து வருவது பரதேசம்போதல்

நிகழ்ச்சியாகும். அதன் பின்னர் மணமக்களை முகம் மட்டிலும் தெரியும் வண்ணம் எதிரெதிராக நிற்க வைத்து முகதரிசனம் செய்து மாலை மாற்றச் செய்வார்கள். அவர்களுக்குத் தங்கத் திருலான நெற்றிப்பட்டமும் அணிவிக்கப்படும். பின்பு பெரியோர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட மங்கல நாணை உபாத்தியார் எடுத்துக் கொடுக்க, மங்கல மகளிர் தீபம் ஏந்த, மங்கல இசைமுழங்க, மணமகன் மங்கல நாணைப்பெண்ணின் கழுத்தில் அணிவித்து மூன்று முடிச்சு இடுவார். இதனைத் தொடர்ந்து அம்மிமிதித்தல், துருவநட்சத்திரவழிபாடு முதலியன நடைபெற்று மணமக்களுக்கு நல்லாசி கூறுவர்.

இறுதியாக நாகவல்லி முகூர்த்தம் என்னும் சிறப்புவழிபாடு நடைபெறும். அப்போது பூரணகும்பம், மாவிளக்கு, முளைப் பாலிகை முதலியவற்றை ஏந்திய மகளிருடன், மனையறம் படுத்த புதுமணத்தம்பதியர் எட்டு நாகதேவதைகளையும் வழிபடுவர். இதற்குப்பிறகு பூரண ஆகுதி, காப்புக்களைதல், நவக்கிரக ஆசீர் வாதம் முதலிய சடங்குகள் நடைபெறும். கடைசியில் மணமக்களை அமரச்செய்து, கலியாண வாழ்த்துப்பாடி, பெரியோர்கள் ஆசீர் வதித்து திருமணச் சடங்குகளை நிறைவுறச் செய்வார்கள்.

இறப்பு

சமண சமயத்தவர் இறந்து போனமையை 'சுகதிபிராப்தி அடைதல்' என்று கூறுகின்றனர். இவர்கள் இறந்தவர்களை எரிக்கும் வழக்கத்தினை மேற்கொள்கின்றனர் ஆனால் பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறந்துபோனால், அவர்களைப் புதைக்கின்றனர். பொதுவாக இறந்தவரது உடலினை ஊரினின்று சற்று தொலைவிலிருக்கும் சுடுகாட்டில் விறகு அடுக்கி எரியூட்டு கின்றனர். எரியூட்டும்போது மூத்தமைந்தன் கொள்ளி வைப்பது தான் மரபாக இருந்துவருகிறது. பிறகு எரிந்து சாம்பலான வற்றை அஸ்திகலசத்தில் சேர்த்து எங்காவது ஒரு பகுதியில் வைத்துவிடுவார்கள். ஒருவர் இறந்த பத்தாவது நாள் தசாவசு என்னும் சடங்கு செய்யப்படுகிறது. அன்று இறந்தவரின் உற்றார், உறவினர் அனைவரும் குளக்கரைக்குச் சென்று, அங்கு மூன்று செங்கல்களை நிறுவி, அவற்றிற்குப் பிண்டி படைத்து வழிபாடு செய்கின்றனர். இவ்வழிபாடு முடிவுற்ற பின்னர் அச் செங்கற்களைக் குளத்தினுள் போட்டுவிட்டு வீடுதிரும்புகின்றனர். இத்தகைய சடங்கினில் கலந்து கொண்டவர்களுக்கு வீட்டில் வைத்து உணவளிப்பது வழக்கமாகும்.

3. வழிபாட்டு முறைகள்

சமண சமயத்தவர் ஒவ்வொருவரும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்ய வேண்டும். அப்போது **பஞ்சமந்திரம்** சொல்லி, மலர் தூவி வழிபடுவது வழக்கமாகும். இச்சமயத்தவர் ஜினவழிபாடு. துறவோர் தொண்டு, நூலோம்புதல், புலனடக்கம், தவம், தானம் ஆகியவற்றை அவசியமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என சமயநூற்கள் கூறுகின்றன. காலையில் இறைவழிபாடு செய்த பின்னரே உணவு உண்பது வழக்கமாகும். அதன் பின்னர் தங்களது அன்றாட வேலைகளைக் கவனிக்கச் செல்வதுண்டு. வேலைகளை முடித்துவிட்டு ஓய்வுகிடைக்கும் நேரத்தில் சமய நூற்களைக் கற்றுத் தெரிந்து கொள்வது அவசியமாகும். மாலை நேரத்திலும் கோயிலுக்குச் சென்று பஞ்சமந்திரங்கள் கூறி வழிபாடு செய்ய வேண்டும். இரவில் தூங்கச்செல்லும் முன்னரும் வீட்டில் இறைவழிபாடு செய்வது வழக்கமாகும். கோயில் இல்லாத சிறுகுடியிருப்பு ஊராக இருக்குமானால் மேற்கூறிய வழிபாட்டு முறைகளனைத்தையும் வீட்டிலேயே செய்வது முறையாகும்.

சித்தாமூரிலுள்ள சமண சமயத்தவருள் மிக்கவாறும் வயது முதிர்ந்தவர்களே இத்தகைய வழிபாட்டு முறைகளைக் கடைப் பிடித்து வருகின்றனர். இவற்றை முழுமையாகக் கடைப் பிடிக்க இயலாவிட்டாலும், ஒரு சிலவற்றையாவது தவறாமல் செய்து வருகின்றனர். ஆனால் இளம் வயதினர் தற்காலச் சூழ் நிலைக்கேற்ப சிறிது மாற்றம் பெற்று, தினசரி இம்முறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

4. உணவுப் பழக்கம்

சமண சமயத்தவர் அனைவருமே மரக்கறி உணவினைமட்டும் உட்கொள்பவர்களாவர். சித்தாமூர் மக்களும் இதற்கு விதிவிலக் கல்ல. கொல்லாமையை வலியுறுத்தும் இவர்கள் உயிரினங்களைக் கொன்று, அவற்றின் புலாலுணவை உண்பதை அறவே விரும் பாதவர்களாகும். அரிசி, கேழ்வரகு, பயிறு தானியங்கள் முதலியவையே இவர்களது முக்கிய உணவாகும். வேருடன் கூடிய காய்கறிகள், உருளைக்கிழங்கு, கருணைக்கிழங்கு, போன்ற மண்ணிற்குக் கீழ்மறைந்திருக்கும் கிழங்கு வகைகளை இவர்கள் உண்பதில்லை. கீரை வகைகளில் அகத்திக்கீரை, முருங்கைக்கீரை போன்றவற்றையே உண்பது வழக்கமாகும். அதாவது, வேருடன் பிடுங்கப்பெற்ற கிழங்கு வகைகள், கீரைவகைகள் ஆகியவை

முழுவதுமாக நிலத்திலிருந்து அகற்றப் படுவதால் அவற்றின் உயிரை அழிப்பதற்கு ஒப்பாகிறது என்னும் கருத்தில் அவை தவிர்க்கப்படுகின்றன. அகத்திக்கீரை, முருங்கைக் கீரை போன்றவை செடிகள் அழிக்கப்படாமல் இலைகள் மட்டும் பறித்தெடுக்கப்படுவதால், அச்செடிகளின் உயிர் அழிக்கப் படவில்லை என்று கருதி, அவற்றை உணவில் சேர்த்துக்கொள் கின்றனர். காய்வகைகளில் சுரைக்காய், புடலங்காய் போன்ற வற்றையும் சமையலுக்கு எடுத்துக் கொள்ளமாட்டார்கள். ஆனால் தற்காலத்தில் உணவுவகைகளில் இதுபோன்ற மிகுந்த கட்டுப் பாட்டினைப் பெரும்பாலோரால் கடைப்பிடிக்க இயலவில்லை.

பொதுவாக சமண சமயத்தவர் எல்லோருமே காலையில் சூரியன் தோன்றும் முன்னரும், மாலையில் சூரியன் மறைந்த பின்னரும் உணவு உண்பதில்லை, சூரியஒளி இல்லாத இருட்டு வேளைகளில் உணவு உண்டால், அவ்வுணவில் சிறிய உயிரினங் களும் தங்களுக்குத் தெரியாமல் விழுந்து மடிந்து விடக்கூடும் என்ற கருத்தில்தான் இத்தகைய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. சித்தாமூரிலுள்ள சமணருள் பலரும் இக்கட்டுப்பாட்டினை மீறாமல் உணவு உண்டு வருகின்றனர். சமண சமயத்தவர்கள் தங்கள் உணவுப்பழக்கத்தினை ஒட்டி அவர்களுக்கே உரித்தான சில சிறறுண்டிகளைத் தயாரிப்பர் (உ-ம்) **பொரிமாவு**, (வறுத்த அரிசி) **வெள்ளைப்பூரி** (துவரம் பருப்பும், அரிசியும் கலந்து செய்வது) **தாமரைக்கொடி** (பெரியமுறுக்கு) **கச்சாயம்**, (கோலிவடிவினது) **பணியாரம்** (வெல்லம், அரிசிமாவு) **மோர்க்கலி**, **வேர்க்கடலை உருண்டை**.

5. நோன்புகள்

மனித மனம் ஒரு வழிப்படுவதற்கும், புலனடக்கத்தின் அவசி யத்தை வலியுறுத்துவதற்கும் நோன்புகள் மேற்கொள்ளப்படு கின்றன. மேலும் பலமுறை உண்ணும் வழக்கத்தினைத் தவிர்ப் பதால் வயிறு அது தொடர்பாகவுள்ள பிற உறுப்புக்கள் ஆகிய வற்றிக்கு ஓய்வு கிடைக்கப் பெற்று, சீரான உடல்நலம் பெற்றுத் திகழ வழி கோலுகிறது. இந்த நோன்புகள் இறைவழிபாட்டுடன் தொடர்புபடுத்தப் பட்டிருப்பதால் இறையுணர்வும், தெளிவான சிந்தனையும் மனதில் வளர முடிகிறது

சமண சமயத்தவருக்கு ஏராளமான நோன்புகள் சமய நூற் களில் கூறப்பட்டிருக்கின்றன, ஆடவருக்கு சிவராத்திரி நோன்பு,

சதுர்த்தசி நோன்பு, அனந்தவிரதம், பௌர்ணமி நோன்பு, பஞ்சமி நோன்பு, ஆட்டானிக நோன்பு, ஆவணி அவிட்ட நோன்பு, புஷ்பாஞ்சலி நோன்பு முதலிய பல்வேறு விரதங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது தீர்த்தங்கரர் வீடுபேற டைந்ததை நினைவுகூரும் வகையில் மாசிமாதம் சிவராத்திரி நோன்பு கடைப்பிடிப்பது வழக்கம். ஆடி, கார்த்திகை, பங்குனி ஆகிய மூன்று மாதங்களில் அஷ்டமியிலிருந்து பௌர்ணமி வரையிலும் ஆட்டானிக நோன்பு நோற்கப்படுகிறது. இந்த நோன்பு ஏற்பவர்கள் காலையில் கோயிலுக்குச் சென்று அருச்சனைகள் செய்து, மந்திரம் கூறி, சிறப்பு வழிபாடுசெய்வர். இந்த நாட்களில் ஒருவேளை மட்டும் உணவு உண்பது வழக்க மாகும். சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய நோன்பு நாட்களிலும் இவ்வாறே வழிபாடும், உணவுக்கட்டுப்பாடும் மேற்கொள்ளப் படுவதுண்டு. ஆவணி அவிட்டநோன்பு என்பது பூணூல் மாற்றுவது தொடர்பானதாகும். ஆவணி அவிட்டத்தன்று அதிகாலையில் தூயநன்னீராடி, கோயிலில் சாந்திநாத தீர்த்தங் கரருக்குச் சிறப்பு வழிபாடு செய்து பூணூலை மாற்றுவது மரபாகும். அன்றைய தினமும் ஒருவேளை மட்டிலும் உணவு உண்பர்.

ஆடவரைப் போன்று மகளிருக்கும் பல்வேறு நோன்புகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பௌர்ணமி நோன்பு, சதுர்த்தசி நோன்பு, அஷ்டமி நோன்பு முதலியவை குறிப்பிடத் தக்கவையாகும். இவற்றையெல்லாம் விட ஆனத்தீ என அழைக்கப்பெறும் தீர்த்த நோன்பினை மகளிர் தினமும தவறாமல் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தப் பட்டிருக்கிறது. அதாவது தினமும் ஒருவர் தீர்த்தங்கரரது பெயரினை ஐந்துமுறை கூறக்கேட்ட பின்னரே பெண்டிர் உணவு உட்கொள்ள வேண்டும் என்பதாகும். தீர்த்தங்கரரின் பெயரினைக் கூறுவதற்கு அப்போது அருகில் எவரும் இல்லாவிடின், தாங்களே ஐந்துமுறை தீர்த்தங்கரர் பெயரைக்கூறி அதன்பிறகே உணவு சாப்பிடத் தொடங்குவர். உணவினை உண்ணும்போது தீர்த்தங்கரர் சாட்சி யாகவும், அவர்களை நினைத்துத் தங்கள் வணக்கத்தினைத் தெரிவிப்ப தாகவும் இப்பழக்கம் அமைந்துள்ளது.

பொதுவாக சமணநூற்களில் கூறப்பட்டுள்ள அனைத்து விரதங்களையும் கடைப்பிடித்தல் சற்று சிரமமான காரியம்தான். சித்தாமூரில் வாழும் மக்கள் அனைவருமே இத்தகைய நோன்பு களைக் கையாண்டு வருகின்றனர் என்று கூறுவதற்கில்லை. பெரும்

பாலும் வயது முதிர்ந்த சிலர் மட்டிலும் தங்களால் இயன்றவரை செய்து வருகின்றனர். ஆனால் மாறிவரும் சூழ்நிலைகளினால் இளம் வயதினர் இவைபோன்ற நோன்புகளில் அதிக கவனம் செலுத்துவதில்லை.

6. பண்டிகைகள்

நம்நாட்டில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு சமயத்தினைச் சார்ந்த மக்களும் தங்களுக்குரித்தான முறையில் பல பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர். சில சமயம் ஒரே மாதிரியான பண்டிகைகள் வெவ்வேறு சமயத்தவரால் சிறிது மாறுபாடுகளுடன் கொண்டாடப்பட்டு வருகின்றன, சமணர் தீபாவளி, நவராத்திரி, பொங்கல், உகாதி முதலிய பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்கின்றனர் இப்பண்டிகைகள் சமய அடிப்படையில் தோன்றியவையாதலால், அப்பண்டிகையின் போது கோயில் வழிபாடு சிறப்புடன் நடத்தப் பெறுகிறது.

அறம் உரைத்த மகாவீரர் பாவாபுரியில் வீடு பேறடைந்த தன் நினைவாகத் தீப அலங்காரம் செய்து வழிபடுவதே தீபாவளியாகும். அன்றைய தினம் காலையில் எழுந்து நீராடி, புத்தாடை அணிந்து, கோயிலுக்குச் சென்று பரிநிர்வாண பூசை செய்வர். கோயிலில் மாவிளக்கு ஏற்றுவதும் சிறப்பான நிகழ்ச்சியாகும் மகாவீரர் மீது தோத்திரங்கள் பாடி, அறியாமை இருளை அகற்றி நல்லறிவு வழங்கியமைக்காக அவ்வருகதேவனுக்கு நன்றிசெலுத்தி வழிபடுவர். அன்று தங்கள் வீட்டினைக் கோலமிட்டு அழகுறச் செய்து, தீபங்கள் ஏற்றிவைப்பார்கள். வாணவேடிக்கைகள், இன்னபிறவும் மக்களது மகிழ்ச்சியினைப் பிரதிபலிப்பவையாகும். தின்பண்டங்கள், இனிய உணவு முதலியவற்றைச் செய்து பிறருக்கும் வழங்கி, தாங்களும் உண்டு களிக்கின்றனர்.

நவராத்திரியின் போது ஒவ்வொருநாளும் கோயிலில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. சரஸ்வதி பூசையன்று கலவித் தெய்வமாகிய ஜினவாணிக்குச் சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது. இதுபோன்று விசயதசமியன்று தருமதேவதை வழிபாடு மிகவும் சிறப்பாக நடைபெறும். இந்நாட்களில் மக்கள் கோயிலில் கூடி வழிபாடு செய்வதுடன், தோத்திரப்பாடல்கள் பாடியும் மகிழ்கின்றனர். இறுதியில் அங்கு குழுமியவர்களுக்கு சுண்டல், வெற்றிலைப்பட்டி, பொரி, நாட்டுச்சர்கரை முதலிய வற்றை வழங்குவது மரபாகும். இவ்வாறு பத்துநாட்களுக்கும் ஆகின்ற செலவினை ஒருநாள் ஒருகுடும்பம் வீதம் ஏற்றுக்கொள்கிறது.

விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட சமுதாயம் அனைத்தும் பொங்கல் திருநாளைச் சிறப்புடன் கொண்டாடுவது வழக்கம். முதல் நாள் புத்தரிசி சமைத்து இறைவழிபாடு செய்கின்றனர். அடுத்தநாளாகிய மாட்டுப் பொங்கலன்று கன்று காலிகள் அலங்கரிக்கப்பட்டு அவையும் புதுப்பொலிவு பெறுகின்றன. மூன்றும்நாள் காணும் பொங்கலாகும். அன்று மக்கள் வெவ்வேறு இடங்களுக்குத் தங்கள் உறவினரோடு சென்று இயற்கையைக் கண்டு மகிழ்கின்றனர்.

உகாதிப் பண்டிகையின் போது, விவசாயப் பெருமக்கள் தங்கள் நிலங்களில் விளைந்த தானிய வகைகளை ஆதிநாத தீர்த்தங்கரருக்குப் படைத்து வழிபடுகின்றனர். இவ்வுலக மக்களுக்கு வெவ்வேறு தொழில்கள் பற்றி அறிவுறுத்தியவர் ஆதிநாதர் என கருதப்படுவதால் இத்தீர்த்தங்கரர்க்கு அன்றையதினம் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

7. தொழில்கள்

சித்தாமூரில் வாழும் பெரும்பான்மையான சமண சமயத்தவர் விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டிருப்பவராகும். இப்பகுதியில் நெல், கேழ்வரகு ஆகியவை மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. பருவநிலைக்கேற்ப நிலக்கடலை, சோளம் முதலியவையும் பயிரிடப்படுவதுண்டு. இங்கு ஆற்றுநீர், ஏர் நீர்ப்பாசனம் மட்டுமின்றி, குழாய்க் கிணறு வசதிகளும் இருப்பதால் அவையும் பயிர்த்தொழிலுக்கு உதவியாக இருக்கின்றன. இந்த சமுதாயம் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் பிறதொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இங்குள்ள மக்களின் எளிய பொருளாதார நிலையும் வேறு பல தொழில்கள் பெருக ஏற்றதாக இருக்கவில்லை. அதனால்தான் இங்குள்ள அமைதிநிலையும் இயற்கையான சூழ்நிலை இன்னமும் அழிந்துவிடாமல் இருக்கிறது எனலாம்.

இவ்வூரில் கல்வி கற்ற பலர் ஆசிரியப்பணியில் ஈடுபட்டுள்ளனர். மிக்கவாறும் இவர்கள் பள்ளிக்கூடங்களில் பணி புரியும் ஆசிரியர்களாவார்கள். இளைய தலைமுறையினருக்குக் கல்வி புகட்டி நல்வழிப்படுத்தும் இவ்வாசிரியப் பெருமக்கள் எளிய நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர் இவர்களன்றிச் சிலர் அரசாங்கப் பணிகளிலும், தனியார் நிறுவனப் பணிகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

பண்டைக் காலத்தில் சமண சமயத்தவர் வாணிபத்தில் தலை சிறந்தவர்களாகத் திகழ்ந்தனர். காலப்போக்கில் தமிழகத்தில் சமணரைக் காட்டிலும், பிறசமூகத்தவரே வாணிபத்தில் அதிக கவனம் செலுத்தலாயினர். சித்தாமூரிலுள்ள மக்கள் வாணி பத்தில் அதிக ஈடுபாடற்றவர்கள். தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களை விற்பனை செய்பவர்களாகத் திகழ வில்லை. ஆடை அணிகலன் போன்ற பொருட்களை செஞ்சி, திண்டி வனம் முதலிய பேரூர்களுக்குச் சென்று பெற்றுக் கொள்கின்றனர். எளிமையான நிலையில் வாழும் இம்மக்கள் தங்களது தேவைக்கு மேலாகவுள்ள எவற்றிலும் அதிக பற்றில்லாமலிருப்பதால், தன்னிறைவுடன் அமைதியாக வாழ முடிகிறது.

10

நல்லறம் போற்றுமின்!

தமிழகத்தில் முன்பு சீரும், சிறப்பும் பெற்றிலங்கிய சமண சமயம் காலப்போக்கில் பல்வேறு காரணங்களால் செல்வாக் கிழந்தது. தற்காலத் தமிழ்நாட்டில் சமணர் பெருவாரியாக இல்லாவிடினும், செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்னூர்க்காடு தஞ்சாவூர் முதலிய மாவட்டங்களில் ஆங்காங்கே பல ஊர் களில் வாழ்ந்து வருகின்றனர். சமயத் தொண்டுகளிலும், சமுதாயத் தொண்டுகளிலும் இவர்கள் பிற சமயத்த வரைக் காட்டிலும் பின்தங்கிய நிலையில்தான் இருக் கின்றனர். சமண சமுதாயம் மறுமலர்ச்சிகாண சிலகாலத்திற்கு முன்பே பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை முற்றிலும் வெற்றி பெறுமளவிற்கு முழுமையான ஆக்கமும், ஊக்கமும், அளிக்கப்படவில்லை எனலாம். இந்த நிலையில் சமண சமயத்தவர் ஒன்றுபட்டு சமுதாயத் தொண்டுகள் பல ஆற்றி, நமது பண்பாட்டினை மேலும் சிறப்படையச் செய்ய வேண்டியது அவசியமாகிறது

இந்திய நாட்டிலுள்ள எந்த ஒரு சமயமாயினும் மக்களின் நல்வாழ்வினை கருத்திற்கொண்டு சமயநன்னெறிகளைப் போற்றி சமுதாயத்தினை நல்வழிச் செலுத்த அரும்பாடுபட வேண்டும். அவ்வாறு செயல்படும்போதுதான் சமயவேறுபாடின்றி ஒற்றுமை நிலவி மக்கள் நல்வாழ்வு பெற இயலும். சமய ஒற்றுமையின் அடிப்படையில் சமுதாய ஒற்றுமையும், அதன் மூலம் தேசிய ஒருமைப்பாடும் சிறந்தோங்க முடியும்.

சமய ஒற்றுமையும் தேசீய ஒருமைப்பாடும்

பரந்த இந்நிலவுலகில் தோன்றிய பல்வேறு சமயங்களும் வெளிப்படையாக வேறுபட்டிருப்பினும், அவற்றின் உட்கருத்து மனித நல்வாழ்வின் அடிப்படையில் இறைமையை அடைதல் என்பதாகும். இடத்திற்கேற்பவும், சமுதாய அமைப்புகளுக்கேற்ப வும் அவை மாறுபட்டுத் திகழ்கின்றனவேயன்றி, எல்லாச் சமயங்களும் ஒரேமாதிரியான கருத்துக்களை வலியுறுத்துவனவாக இருக்கின்றன எனவே சமயங்களுக்குள் வேற்றுமை பாராட்டுதல் தேவையற்ற ஒன்றாகும். இந்தியநாடு சமயசார்பற்ற ஒன்றாக

இருப்பதால் மக்கள் எந்த சமயத்தினையும் சார்ந்தவர்களாக இருக்கமுடிகிறது. அவரவர் தங்கள் சமயக்கருத்தினை பிறவற்றிற்கு இடையூறு ஏற்படா வண்ணம் பரப்புவதற்கு உரிமையுடையவர் களாக இருக்கின்றனர். பல்வேறு பண்பாட்டினையுடைய மக்களாயிருப்பினும், பல்வேறு சமயங்களைச் சார்ந்தவராயிருப் பினும் தேசீய ஒருமைப்பாட்டிற்குச் சிறிதும் தீங்கு ஏற்படாத வகையில் சமயங்கள் தழைத்தோங்குவதில் தவறில்லை.

சமண சமயத்தினரைப் பொறுத்தவரையில் அவர்களுக் குள்ளே ஒருசில உட்பிரிவுகளிருப்பினும் ஓரளவு ஒற்றுமையுணர் வுடன் காணப்படுகின்றனர். ஆனால் இந்த ஒற்றுமை இன்னமும் முழுமையானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் அமைந்திட வேண்டும். சமய சீர்மைக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் சமண சமயத்தவர்கள் ஒன்றுபட்டுச் செயல்படுவது இன்றி யமையாததாகும். சமண சமூகத்தவர் ஒன்றுகூடி நாட்டிற்கும், தங்களுக்கும் நல்ல பல திட்டங்கள் வகுத்து நமது நாட்டின் பண் பாட்டினையும், தேசிய ஒற்றுமையினையும் நிலை நாட்ட முன்வர வேண்டும். எல்லா சமயத்தவரிடமும் அன்புடைமையின் அடிப் படையில் சகோதரத்துவம் ஏற்பட இவர்கள் வழிகாட்டியாகத் திகழவேண்டும். எந்த ஒரு சமயமாயினும் சரி அது மக்களை நல்வழிப்பாதையில் செலுத்தி ஒற்றுமையுடன் வாழவழி கோலு வதாக இருக்கும்போதுதான் அது போற்றுதற்குரியதாக இருக்க முடியும்.

சமய–சமுதாய அமைப்புகள்

தமிழகத்தில் வாழும் சமணர்கள் தங்களது சமய–சமுதாயப் பணிகளை நன்கு செயலாற்றுவதற்கென மாநில அளவில் அமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கு முயற்சி செய்துள்ளனர். இத்தகைய அமைப்புகள் சமுதாய மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும், பொதுவாக ஒவ்வொரு ஊர்களிலும் சிறிய அளவில் அமைப்புகளும், அவற்றிற்கு மேலாக மாநில அளவில் உயர்மட்ட அமைப்பும் ஏற்படுத்தப்பட்டு அவை நெறிமுறைகளுடன் இயங்க வேண்டும் சித்தாமூரினையே தலைமைப் பீடமாகக் கொண்டு மடத்தின் துணையுடன் உயர்மட்ட அமைப்பு செயல்படுவது சாலச் சிறந்ததாகும்.

இந்த அமைப்புகள் ஊர்கள்தோறும் அல்லது மாவட்ட அளவில் சமயக் கருத்தரங்குகளைக் கூட்டி சமயத்தின் சிறந்த நெறிகளை யாவரும் அறியும் வண்ணம் செய்யலாம். அந்த

அறநெறிக்கருத்துக்கள் மக்கள் சமுதாய மேம்பாட்டிற்கு எந்த வகையில் பயனுள்ளவையாக இருக்கின்றன என்பதையும் தெளிவுபட விளக்கவேண்டும். எந்த சமயமாயினும் நெறிப் படுத்தப்பட்ட அமைப்புகளுடன் வேற்றுமை சிறிதும் பாராட்டாமல் மக்கள் நலனையும், நாட்டு நலனையும் கருத்திற் கொண்டு அன்புடைமை, சகோதரத்துவம், ஒற்றுமை ஆகியவற்றை நிலைநாட்ட முன்வரவேண்டும்.

சமுதாயத் தொண்டுகள்

நம் நாட்டிலுள்ள பல்வேறு சமயங்களும் வெவ்வேறு வழிகளில் சமுதாயத் தொண்டுகள் ஆற்றிவருகின்றன. சமண சமயமும் இத்தகைய சமுதாயத்தொண்டுகள் செய்துவரினும், இன்னமும் அவை சிறப்பாக செயலாற்றப்படவேண்டும். அவற்றுள் முக்கியமானது கல்வி நிறுவனங்கள் பலவற்றை ஏற்படுத்தி இளைய தலைமுறையினரை வளம்மிக்கவர்களாக விளங்கச் செய்வதாகும். சாதி, சமய வேறுபாடின்றி நமது மக்கள் கல்வியறிவு பெறும்போதுதான் நல்வாழ்விற்கு உகந்தவை எவை என்பதை அவர்கள் சிந்தித்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே பள்ளிகள், கல்லூரிகள் முதலிய கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் அறியாமை என்னும் இருளை அகற்ற அரும்பாடுபட வேண்டும்.

தற்போது சித்தாமூர் மடம் செய்துவரும் சில சமுதாயத் தொண்டுகளை மேலும் விரிவாக்கம் செய்து சமுதாயத்தில் நலிந்த மக்கள் பயனடையுமாறு செய்யவேண்டும். சித்தாமூர் மடம் ஏழை விவசாயிகளுக்கு இடுக்கண் வந்தகாலை குறைந்த வட்டியில் கடனுதவி செய்து வருகிறது. இந்த தொண்டு மேலும் சிறந்த முறையில் செயலாற்றப்பெற்று பலரும் பயன்பெற வேண்டும். ஊருக்கு ஊர் நிறுவப்படும் சமுதாய அமைப்புகளும் இத்தகைய பணியில் ஈடுபடுவது நல்லது. சமண சமூகத்த வருக்குள் ஏற்படும் சிறுவழக்குகளை மடாதிபதியே சுமுகமான முறையில் தீர்த்துவைத்து நீதி வழங்குவது போற்றுதற்குரிய தாகும். இதுபோன்ற தொண்டினையும் சமுதாய அமைப்புகள் செய்து வருவதில் தவறில்லை. பொருளாதார வசதியற்ற மக்களுக்கு எளியமுறையில் திருமணங்கள் செய்து நல்வாழ்வு வாழ வழி காட்ட சமய அமைப்புகளும், சமுதாய அமைப்புகளும் முன்வர வேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வு திருமண காரியங் களுக்கு ஒரு தடைக்கல்லாக அமையாமலிருப்பதற்கும், சமுதாயத்திலிருக்கும் சில சீர்கேடுகளைக் களைவதற்கும் இது மிகவும் துணைபுரியும்.

மேலும் நலிவுற்ற மக்களுக்கு மருத்துவவசதி எளிதில் கிடைப்பதற்கு இயன்ற உதவிகள் செய்திடல் வேண்டும். மருத்துவ வசதிகள் அரிதாக இருக்கின்றன. ஊர்களில் மருத்துவ மனைகள் கட்டி குறைந்த செலவில் அல்லது இலவசமாக மருத்துவ வசதி கிடைக்குமாறு செய்யவேண்டும். இதுபோன்று பல்வேறு சமூக நலப்பணிகளில் ஈடுபட்டு பொருளாதார வசதியற்ற மக்கள் பயன் பெற வழிவகைகள் செய்யவேண்டும். இத்தகைய சமுதாயத் தொண்டுகள் ஆற்றிடுவதன் மூலம் சமய–சமுதாய அமைப்புகளுக்குள் ஒற்றுமை நிலவி மேலும் வளர்ச்சிபெற வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

அறநெறிப் பிரசாரம்

நமது நாட்டில் மேலைநாட்டுப் பண்பாட்டின் தாக்கம் அதிகரித்து வருவதாலும், தொழில் மயமான சமுதாயம் ஏற்பட்டு வருவதாலும், விஞ்ஞான வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப் பெறுவதாலும் பண்டைய வழிமுறைகளும், மரபுகளும் மாற்றம் பெற்று வருகின்றன. இதனால் புதிய சமுதாயம் பழமையான மரபுகளைப் புறக்கணித்து விட்டு அதிவேகத்தில் செல்வது போன்று உணர்வு நம்மிடையே ஏற்படுவதுண்டு. மேலும் சமுதாயத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றி அவை எளிதில் சுமுகமான முறையில் தீர்க்கப்படாமல் இன்னல்கள் ஏற்படுகின்றன. மனிதாபிமான உணர்வுகள் குறைந்து குற்றங்கள் அதிகரித்து வருவதையும் காணலாம். இத்தகைய சூழ்நிலையில் மனிதமனம் ஒருவழிப்பட்டு முறையாகச் செயல்பட அறநெறிப்பிரச்சாரங்கள் அவசியமாகத் தேவைப்படுகின்றன.

ஒவ்வொரு சமயத்தவரும் தங்களது சமயங்களில் விளங்குகின்றன அறநெறிக்கருத்துக்களை உரியமுறையில் மக்களுக்குப் போதித்து அவர்கள் சிறந்த நெறியாளராகத் திகழ்வதற்கு வழி கோலவேண்டும். அத்தகைய முயற்சிகள் பிறசமயத்திற்கு ஊறு விளைவிக்காத வகையில் பரந்த நோக்குடன் செயலாற்றப் படவேண்டும்.

சமண சமயம் தோன்றிய காலத்திலிருந்தே அன்புடைமை, கொல்லாமை, வாய்மை முதலிய பல அறநெறிகளை வலியுறுத்தி வந்துள்ளது. மனிதசமுதாயம் பண்பட்டு வாழ இத்தகைய அறநெறிகளைப் பரப்புதல் இன்றியமையாததாகும். சித்தாமூர் மடம் மட்டுமின்றி, ஒவ்வொரு சமய அமைப்புகளும் இந்தப் பணியில் ஈடுபடுவதன் மூலம் இளந்தலைமுறையினரை மேலும் ஆக்கவழிகளில் நடத்திச் செல்ல இயலும்.

சிலப்பதிகாரம் எனும் காவியத்தைப் படைத்த இளங்கோவடிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமண நன்னெறிகளைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு வரந்தரு காதையின் இறுதிப்பகுதியில் திறம்பட விளக்கிக் காட்டியுள்ளமை இங்கு நினைவுகூரத் தக்கதாகும்.

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ்செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீ நட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கல்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லல் மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்."

அதாவது மானிட வாழ்க்கை சிறப்புற அமையவேண்டுமெனில் பிறருக்கு தீங்கு செய்யாதவாறு இருத்தல் வேண்டும். தெய்வம் உண்டென்பதை மெய்யறிவால் உணரவேண்டும் அத் தெய்வத்தினை உணர்ந்தோரது அறிவுரைப்படி நடத்தல் நலமாகும் பொய்யுரையையும், புறங்கூறுதலையும் விட்டொழித்தல் வேண்டும். கொல்லாமையைக் கடைப்பிடித்து ஊனுணவைத் துறக்க வேண்டும். தானம் செய்வதும், தவநெறி மேற்கொள்வதும் சிறந்த செயல்களாகும். பிறர் செய்த உதவியினை மறத்தலும், தீயோருடன் நட்புரிமை கொள்வதும் தீயவையாகும். பொய்யுரையினைக் கூறி வாழ்தல் இழிவாகும். அறவோர் கூடியிருக்கும் அவையினை விட்டகலாமல் அவர்களுடன் ஒத்துவாழ்தல் சிறப்பு தருவதாகும். பிறர் மனையாளின் மீது காமுறுதல் மிகப்பெரிய தவறாகும். அறத்தால் கடிமணம் புரிந்த துணைவியைக் கைவிடாது என்றும் காத்தல்

வேண்டும். வரைவின் மகளிரைச் சேருதல், கள்ளுண்ணுதல், களவு செய்தல் ஆகிய தீயகாரியங்களைச் செய்தலாகாது. இவ்வுலக வாழ்வினில் நாம் பெற்ற யாக்கையும், இளமையும், செல்வமும் நிலையற்றவை யாதலால் வாழ்நாளை வீணுக்காது தம்மாலியன்ற நல்லறங்களைச் செய்து வந்தால் இறுதியில் மானிடர் முத்தியடைவது திண்ணமாகும். காவியப்புலவனுகிய இளங்கோவடிகள் மக்கள் வாழ்வுநலம் பெறும் பொருட்டு இந்த அறநெறிகளைக் கடைப்பிடித்தொழுகுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளமையை யாவரும் கருத்தில் கொள்ளவேண்டும்.

கோயில்கள், கலைச்செல்வங்களைக் காத்தல்

நம் நாட்டு மக்களனைவரும் சமய நெறியில் ஈடுபட்டு இன்பப் பெருவாழ்வினைப் பெறவேண்டும் என்னும் நல்லெண்ணம் கொண்ட நம் முன்னேர் ஏராளமான கோயில்களை ஆங்காங்கே தோற்றுவித்துள்ளனர். இவ்வரிய கோயில்கள் கவின்மிகு சிற்பங்களையும், உலோகத்திருவுருவங்களையும், ஓவியங்களையும் கொண்ட கலைக்கருவூலங்களாகத் திகழ்ந்து நமது பண்பாட்டினைப் பறைசாற்றுவனவாக மிளிர்கின்றன. ஆனால் இவை காலப்போக்கினுலும், இயற்கையின் மாறுதல்களாலும், சரிவர கண்காணிக்கப் படாமையாலும் சிதைந்து கொண்டேவருகின்றன. நமது பண்பாட்டினைப் படம் பிடித்துக் காட்டும் இந்த கலைக் கருவூலங்கள் அழிந்து விடாதபடி காப்பது நமது தலையாய கடமையாகும்.

தமிழகத்தில் அழிந்தவைபோக தற்போது எஞ்சியிருக்கும் சமணக்கோயில்களைச் சரிவரப்புதுப்பித்து நல்லமுறையில் விளங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும். சித்தாமூர் மடமும், சமணசமயத்தவரும் இத்தகைய முயற்சியில் இணைந்து செயல்பட வேண்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோயில்களாக இருப்பின் அவற்றைக் கலைப்பாணி மாறுபடாதவகையில் தொல்லியல் துறையினரின் உதவியுடன் புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுதல் அவசியமாகும். தமிழக அரசு தொல்லியல் துறையும், இந்திய அரசின் தென்மண்டல தொல்லியல் பிரிவின் கீழ் இயங்கிவரும் கோயிற் கண்காணிப்புத் துறையும் இத்தகைய பணிகளை ஊக்குவித்து வருகின்றன. பண்டைய கலைச்செல்வங்களைக் காப்பதில் நமது அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருவதால் இந்த முயற்சிகள் மிகவும் வரவேற்கத் தக்கவையாகும். இது போன்று கோயில்களில் காணப்பெறும் ஓவியங்களையும் தொல்லியல் துறையினர் விஞ்ஞான முறைப்படி தூய்மை செய்து பாதுகாப்பதற்குரிய

ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆங்காங்கே வழிபாடற்ற நிலையிலும், கவனிப்பாரற்ற நிலையிலும் இருக்கும் சமண சிற்பங்களை அருங்காட்சியகங்களில் வைப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகளைச் செய்யவேண்டும். இவ்வாறு அனைத்துக் கோயில்களையும், சிற்பங்களையும் புதுப்பித்துக் காப்பது எளிதான காரியமில்லாவிடினும், படிப்படியாகத் தொடர்ந்து செயல் பட்டால் வெற்றியடைய வாய்ப்பு உண்டு என்பதில் ஐயமில்லை.

மேலும் நமது கலைச்செல்வங்கள், குறிப்பாக உலோகத் திருமேனிகள் திருடப்பட்டு அயல் நாடுகளுக்கு கடத்தப்பட்டிருக் கின்றன. இத்தகைய இழி செயல்களை ஒழிப்பதற்கு அரசு சட்டங்கள் இயற்றி தகுந்த நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இருப்பினும் பொதுமக்களும் இதில் மிகுந்த கவனத்துடன் இருந்து, அரசாங்க நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு தரவேண்டும். பொதுவாக கோயில்களைப் புதுப்பிப்பதற்கும், கலைச்செல்வங்களைக் காப்பதற்கும் அரசு ஏராளமாக நிதியுதவி செய்து வருகின்றது. இதுவன்றி தேவைப்படும்போது பொது மக்களும் மனமுவந்து இத்தகைய காரியங்களுக்குப் பொருளுதவி அளிக்க முன்வர வேண்டும். அந்த உதவி நமது பண்பாட்டினை நிலைநிறுத்தப் பயன்படுவதால், அது சமயத்தொண்டாக மட்டு மின்றி சமூகத்தொண்டாகவும் போற்றப்படுகிறது.

ஆய்வுத் தொகுப்புகளும், நூற்களும் வெளியிடல்

நமது நாட்டில் சமண சமயத்தின் வரலாறு, அதன் ஆக்கப் பணிகள், பண்டைய சமணக்கோயில்கள், கலைச்செல்வங்கள் போன்றவை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றை யாவரும் அறியும் வண்ணம் தொகுத்து நூற்களாக வெளியிட வேண்டும். இத்தகைய பணிகள் முன்பே செயலாக்கம் பெற்று வரினும், அவை முழுமையாகவும், சிறப்பாகவும் நடைபெற வழிகோல வேண்டியது அவசியமாகும். நமது பண்பாட்டினைப் பற்றிச் சரிவர நாம் அறிந்துகொள்ளாமலிருக்கும் நிலை முற்றிலும் மாறவேண்டும்.

பண்டைக்காலத்து சமண சமய சார்புடைய கல்வெட்டுக் களும், செப்புப் பட்டயங்களும், சுவடிகளும் என்னென்ன செய்தி களைக் கொண்டு விளங்குகின்றன என்பதைப் பற்றியும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்தகைய மூலச் சான்றுகளைப் பதிப்பித்து யாவரும் அறியும் வண்ணம் புத்தகங் களாக வெளியிடுவது நல்லது இவைபோன்று சமண சமயத்தவர்

யாத்த இலக்கியங்கள், இலக்கணங்கள் முதலியவற்றையும் உரை நடையுடனும், விளக்கச்செய்திகளுடனும் வெளியிட முன்வர வேண்டும். சமண சமயச்சான்றோர் அன்னைத் தமிழுக்கு ஆற்றிய அரும்பெருந் தொண்டினைப் பாமரர் முதல் படித்தவர் வரை அறியும் வண்ணம் செய்திடல் இன்றியமையாததாகும்.

இவையன்றி சமயத்தின் அறநெறிகருத்துக்களை எளிய முறையில் சிறுவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் கதைகளின் மூலம் தெளிவுபட விளக்கும் சிறுபுத்தகங்களாக அச்சிட வேண்டும். இளமையிலேயே அவர்கள் நன்னெறியாளராகவும் நமது பண்பாட்டினை உணர்ந்தவர்களாகவும் திகழ்ந்து எதிர் காலச்சமுதாயத்தினை வழிநடத்தும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்கச்செய்ய இவை உதவியாக இருக்கும். ஜைன இளைஞர் மன்றம், ஆச்சாரிய குந்தகுந்தர் கல்வி நிறுவனம் போன்றவை இத்தகைய பணிகளில் ஈடுபட்டிருப்பதுபோன்று மேலும் பல நிறுவனங்கள் முன்வரவேண்டும். சமண சமய செய்திகளை அவ்வப்போது தாங்கிவரும் மாத இதழ்கள் அல்லது வார இதழ் கள் ஊக்குவிக்கப்படவேண்டும். தமிழ் நாட்டில் தருமசீலன், விவேகசக்தி, சமூகபேரிகை, மும்மணிபோன்ற சமண சமய மாத இதழ்கள் சிறப்புற சிலகாலம் நடத்தப்பெற்று, பின்னர் போதிய பொருளாதார வசதியின்மையால் நிறுத்தப்படவேண்டிய தாயிற்று. இவைபோன்றே 1959 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற 'நல்லறம்' மாதஇதழ் சில ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்டது. 'மூக்குடை' மாத இதழ்மட்டிலும் பல்வேறு இடையூறுகளுக் கிடையே தொடர்ந்து நடத்தப்பெற்று வருகிறது. இத்தகைய இதழ்கள் சமயத்தின், சமுதாயத்தின், பண்பாட்டின் சிறப்பு பற்றிய செய்திகளை வெகு தொலைவிலிருப்பவருக்கும் தெரிவிக்கும் எளிய சாதனமாக அமைந்துள்ளதால், அவை மேலும் சிறந்த முறையில் வெளிவர மக்கள் மனமுவந்து உதவிசெய்திடல் வேண்டும்.

அறக்கட்டளைகள்

சமய சமுதாய மேம்பாட்டிற்காக பல்வேறு அறக்கட்டளைகளை நிறுவி அதன் மூலம் நல்ல பல காரியங்களைச் செய்ய இயலும். வணிகப் பெருமக்களும், வசதி படைத்தோரும், பலவித நிறுவனங் களும் வெவ்வேறு வழிகளில் அறக்கட்டளைகளை ஏற்படுத்தி சமுதாயம் முன்னேறுவதற்கு ஊக்கம் அளிக்கலாம். கல்வி நிறுவனங்களில் மாணவர்களது கல்வி பெருக உதவித்தொகை பரிசுத்தொகை போன்றவற்றை அறக்கட்டளையின் மூலம்

ஏற்படுத்தலாம். அறிவு சான்றோரின் அறிவுரைகள், சொற்பொழிவுகள் போன்றவற்றை நிகழ்த்துவதற்கும் அறக்கட்டளை உதவியாக இருக்கும்.

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவமணிகளை ஊக்குவிக்கும் வகையில் தற்போது ஜோதிமாலை அம்மாள் அறக்கட்டளை, பலதேவ நயினார் அறக்கட்டளை, பாகுபலிநாதன் அறக்கட்டளை சந்தனம் சாரித்திரமதி அம்மாள் அறக்கட்டளை, சந்தனம் குந்து நாத நயினார் அறக்கட்டளை முதலியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சமுதாய நலனை முன்னிட்டு பல்வேறு நிறுவனங்களும் இத்தகைய பணியில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கதாகும். ஏழைகளுக்கு மருத்துவ வசதி, கடனுதவி, திருமணம் செய்வித்தல் போன்றவற்றை சமூகசேவை நிறுவனங்களுடன் இணைந்து சமய அமைப்புகள் செய்யுமாயின் அது பாராட்டுதற்குரியதாக இருக்கும். கோயில்களைக் கண்காணித்தல், வழிபாடுகள் தவறாது நடைபெறச்செய்தல் ஆகியவற்றிற்குச் சமய அறக்கட்டளைகள் ஏற்படுத்தி சிறப்புற செயலாற்ற இயலும். இது போன்று பல்வேறு ஆக்கப்பணிகளுக்காக அறக்கட்டளைகள் ஏற்படுத்தி முறைப்படி செயல்படுத்தப்படுமாயின் சமுதாய வளர்ச்சியினைப் படிப்படியாக அடைய முடியும் என்பது திண்ணம்.

சுற்றுலாக்கள்

நமது பண்பாட்டின் நிலைக்களன்களாகிய பண்டைய கோயில்களைச் சென்று பார்ப்பதன் மூலம் அக்கால சமய நிலையினைப் பற்றியும், மக்களது இறையுணர்வினையும், கலைவளர்ச்சியினையும் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. பல்வேறு புனித தலங்களுக்குச் சென்று வருவதால் மனிதனது மனமும் பக்குவம் அடைகிறது. கலையும், சமயமும் ஒருங்கிணைந்தமையால் உருவாக்கப்பட்ட கோயில்களைக் கண்டு களிப்பதன் மூலம் முந்திய சமுதாயத்தில் மக்களின் நிலையையும், இன்றைய சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளையும் சிந்தித்துப் பார்க்க முடியும். மேலும் ஒரே காலக் கட்டத்தில் சமயவேறுபாடின்றி பண்டைய தமிழர் பல்வேறு சமயக் கோயில்களை எழுப்பி ஒற்றுமை உணர்வினை நிலைநாட்டியுள்ளமையையும் சுற்றுலாக்கள் செல்வதனால் அறியமுடிகிறது. எனவே சமய அமைப்புகளாயினும் இறையுணர்வை வளர்க்கும் வகையில் இத்தகைய புனிதத்தலப் பயணங்களை ஊக்கும் வண்ணம் செயல்படவேண்டும்.

11

துணை நூற்பட்டியல்

கல்வெட்டுத் தொகுப்பு

1. **South Indian Inscriptions,** vol. III, IV, V, VII, XII, XIV.

2. **Epigraphia Indica,** vol. III.

3. **Inscriptions of Pudukottai State** vol. I & II.

4. **Annual Report of Epigraphy,** 1899, 1902, 1904, 1914, 1915, 1922, 1935-36 1937-38, 1940-41, 1958-59.

இலக்கியங்கள்

1. *சங்க இலக்கியம் (பதிப்பு) எஸ், வையாபுரிப்பிள்ளை, பாரிநிலையம், சென்னை, 1967.*

2. *சிலப்பதிகாரம் (பதிப்பு) பொ. வே. சோமசுந்தரம், கழக வெளியீடு, சென்னை, 1975.*

ஆங்கில நூற்கள்

1. A. Chakravarti, **Jaina Literature in Tamil** (ed. K. V. Ramesh), Bharatiya Jnanapitha publication, Revised, New Delhi, 1974.

2. R. Champakalakshmi, **Jainism in South India**, unpublished M. Litt. thesis, university of Madras, Madras, 1958,

3. P. B. Desai, **Jainism in south India,** Sholapur. 1957.

4. A. Ghosh (ed) ,**Jaina Art and Architecture** Bharatiya Jnanapith Publication, New Delhi, 1975.

5 T. V. Mahalingam (ed), **Mackenzie Manuscripts, Vol. I,** university of Madras, 1972

6 K A. Nilakantasastri, **The Colas,** university of Madras, 1956.

7. R. B. Prasad Singh, **Jainism in Early medieval, Karnataka,** New Delhi, 1975.

8. M. S. Ramasamy Aiyangar, **Studies in South Indian Jainism,** Madras, 1922

9 C. S. Srinivasa chari, **A History of Gingee and its rulers,** Annamalainagar, 1943.

10. K. R. Srinivasan, **Cave temples of the Pallavas,** NewDelhi, 1965.

11. C. Sivaramamurti, **Panorama of Jain Art-South India,** New Delhi, 1983.

12 **Gazetter of South Arcot District.**

13. **Tamil Lexicon, Vol** 4 University of Madras.

ஆங்கில கட்டுரைகள்

1. K R. Srinivasan, "Some aspects of religion as revealed by early monuments and Literature of the South," **Journal of the Madras University,** Vol 32, 1960.

2. T. N. Subramaniyan, "The pallankoil copper plate," **Transactions of the Archaeo logical Society of South India,** 1958-59.

3 K. V. Raman, "Jainism in Tondaimandalam," **Bulletin of the Institute of Traditional cultures,** Jan-June, 1974.

4. K R. Venkatrama Aiyar, "South Indian Jainism, **Transactions of the Archaeological Society of South India,** Vol II, 1956–57.

தமிழ் நூற்கள், கட்டுரைகள்

1. க.ப. அறவாணன், சைனரின் தமிழிலக்கண நன்கொடை ஜைன இளைஞர் மன்றம், சென்னை, 1974.

2. ஏ.ஜே. அனந்தராஜய்யன் (பதிப்பு), தோத்திரதிரட்டு, கும்பகோணம்.

3. மா. இராசமாணிக்கனுர், பத்துப்பாட்டு ஆராய்ச்சி,

4. ஏ. ஏகாம்பரநாதன், கல்வெட்டில் சமணம், ஜைன இளைஞர் மன்றம், சென்னை, 1979.

5. மு. சண்முகம் பிள்ளை (பதிப்பு), அம்பாண்டைநாதர் உலா, சென்னைப் பல்கலைக் கழகம், 1974.

6. மு. சண்முகம்பிள்ளை (பதிப்பு), கலியாண வாழ்த்து' ஜைன இளைஞர் மன்றம், சென்னை. 1983.

7. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1970.

8. ஆர். பொன்னுசாமி, தானுண்மை நாட்டுவரலாறு சென்னை, 1983.

9. டி.எஸ். ஸ்ரீபால், தமிழகத்தில் ஜைனம், சென்னை, 1975

10. ஆர். சம்பகலக்குமி, ''சமணம்'', ஆய்வுத்தேன், 1976 பக். 22-24.

12

பின்னிணைப்பு

சித்தாமூர் பற்றிய பாடல்கள்

அச்சுக் கலை வளர்வதற்கு முன்னர் இலக்கியங்களும், இலக்கணமும், பாடல்களும் ஓலைச் சுவடிகளில் எழுதப் பெற்றிருப்பதை நாமறிவோம். சித்தாமூர் மடத்திலேயே ஏராளமான ஏட்டுச் சுவடிகள் இருந்தது பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது. இச்சுவடிகள் காலப்போக்கில் அழிந்துவிடும் தன்மையுடையதாகையால் அவற்றிலுள்ள செய்திகளை வெளிக்கொணர்ந்து புத்தக வடிவில் வெளியிட வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய சமண சமயச் சார்புடைய சுவடிகளை அறிஞர் பலரும் ஆராய்ந்து முறைப்படுத்தி வெளியிட்டு வந்துள்ளனர். ஆனால் அப்பணி இன்னமும் முழுமையாக நிறைவேற்றப் படவில்லை. சித்தாமூர் பற்றிய பாடல்கள் பல சுவடிகளில் காணப்படுகின்றன. அப்பாண்டைநாதர் உலா, தோத்திரத்திரட்டு, கலியாண வாழ்த்து முதலிய நூற்களில் சித்தாமூர் பற்றிய செய்திகளைக் கொண்ட பாடல்கள் மட்டிலும் இங்கு கொடுக்கப்படுகிறது. இப்பாடல்கள் பதிப்பாசிரியர்கள் தொகுத்த வண்ணம் எவ்வித மாற்றமும் செய்யப் படாமல் இப்பகுதியில் இடம் பெறுகிறது. கற்பதற்கேற்ற முறையில் பாடல்கள் பற்றி எழுதப்பட்ட சிறுகுறிப்பு மட்டும் இப்புத்தக ஆசிரியருடையதாகும்.

அப்பாண்டைநாதர் உலா

அனந்தவிசயர் அருளிச் செய்த அப்பாண்டைநாதர் உலாவில் ஓரிரு இடங்களில் சித்தாமூரிலுள்ள சிங்கபுரிநாதரையும் (பார்சுவ நாதர்), மலைநாதரையும் பற்றிய குறிப்புகள் உள்ளன. திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்டு சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள 'அப்பாண்டைநாதர் உலா' என்னும் புத்தகத்திலுள்ள படி இங்கு பாடல் வரிகள் கொடுக்கப்படுகின்றன.

.... தங்குபுகழ்ச்
சித்திநகர் தன்னிலுயர் சிங்கபுரிநாதர்தாள்

பத்தியுடன் பணிந்து பாங்காக-நித்த நித்தம்
நேமிசின நாதர்பதம் நீங்காம லேயென்றும்
பூமிதனிற் சென்னியுறப் போற்றுவேன்-பூ மிகவே
கொண்டுமலே நாதர் குளிர்மா மலர்ப்பதத்தைப்
பண்டையவினே யாறப் பணிந்தேத்தி

(கண்ணிகள் 24–27)

திருநறுங்கொண்டைக்கு அருகிலுள்ள சமணதலங்களைப் பற்றிக் கூறுமிடத்து சித்தாமூர் சிங்கபுரி எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

வங்காரம் பொன்னூர் வளத்தி குறக்கோட்டை
சிங்கபுரி வீரைத் திருப்பறம்பை......

(கண்ணிகள் 88)

ஜினதேவனைப் பற்றிப் புகழ்ந்து பாடுமிடத்தும் சித்தாமூரிலுள்ள தீர்த்தங்கரரைப் பற்றிய செய்தி காணப்படுகிறது.

....தீமையிலாச்
சித்திநகர்ச் செல்வன் சீர்மன் னியபொற்பாம்
முக்தி யெனுங் கன்னியுடைய மோகத்தன்..................

(கண்ணி 416)

தோத்திரத் திரட்டு

பழஞ் சுவடிகளிலிருந்து மேல்மின்னல் திரு ஏ. சக்கரவர்த்தி நயினர் அவர்களால் தொகுக்கப்பட்ட பாடல்களுள் சிற்றூமூர் பத்தும், சிற்றூமூர் தருமதேவி ஊசலும் குறிப்பிடத்தக்கவை யாகும் இவைபோன்று பல்வேறு பாடல்களைத் திரட்டி 'தோத்திரத் திரட்டு' என்னும் புத்தகமாக ஏ.ஜே. அனந்த ராஜய்யன் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

சிற்றூமூர்ப்பத்து

1. பூவாய் விரையு மணிவா யொளியும்
போலோளிர் புணரின்ப
மீவா யொழியா யடியே ஞேழியே
னெனையாளுந் தாள்மேன்

மூவா முதலா முடியா வறியாய்
முழுமு வுலகாளுந்
தேவா திபனே திருவார் பெருமைச்
சிற்ருமூரானே

2. உந்தா வருநீ ருழியார்
சுழிபோலுழலு மடியேனுக்
கெந்தா யருளா விடினு
மடியே னினியுன் னடியேற்கின்
பந்தா மரைசேர் பததா
மரையாய் பரவுமடி யார்தஞ்
சிந்தா மணியே சூளா மணியே
சிற்ருமூரானே.

3. வீடுங் குடியும் விபவங்களுமே
னியும்விட் டொருபாலே
ஓடும் பொழுதென் பெருமா னவர்தா
முதவுந் துணையாவா
ஆடும் கதிநா டகம்விட் டடியே
னுபத் தனமாகத்
தேடும் பொருளே மாடொண்
பொழில்சேர் சிற்ருமூரானே.

4. காதிப் பெருமைக் கருமத்
துகளிர் கழுமக் கதிதோறும்
பேதித் துலகிற் பிரமிக் குமெனக்
கருளிற் பிழையாமேய
ஆதிச் சினனே யமரார்க் கமரா
வகிலச் சுகமீயுந்
சேதிக் கரசே சீதப் பொழில்சூழ்
சிற்ருமூரானே,

5. காமத் துணையா மடவா ருதவார்
கலவா ரெனவற்றூர்
ஈமத் துணைமே லிடுமித் தனையே
யெனவந் துனையுற்றேன்
தாமப் பொழில்சூழ் தடமுக் குடையாய்
தமியே னுடனேகுஞ்
சேமத் துணையே சீதப் பொழில்
சூழ் சிற்ருமூரானே.

6. கொங்காய் முகையாய் மலராய்
மலரின் குணம்விட்டதுபோகிப்
பைங்கா யொடுசெங் கனியாய்
விழுமிப் பவமஞ் செனையாள்
இங்கா ரறிவா யெனையா ளுடையா
யெதிரே கதிர்வீசுஞ்
சிங்கா தனனே சிந்தா வளமைச்
சிற்ருமூரானே.

7. நும்புன் னுனிநீர் நனிநா ணுகருங்
கரவின் றுன்பாதம்
நம்புமடியே னெனைநீ விடினு நரகா
திகண ண்ணேன்
அம்பொன் மலர்மே னயந்தீ ரைந்திரு
காதம கன்றிலங்குஞ்
செம்பொன் னெயிலாய்ப் பைம்பொன்
மதில்சூழ் சிற்ருமூரானே

8. உருவாய் நலனு முயர்வா னகமு
முடனுள் வதில்யாதே
குருவா யொழியு மதுவே யதையும்
படியே னெனையாள்வாய்

ஒருவா சகமே பலபாடையுமா
யுலகோ ருயவோதுந்
திருவாய் மொழிவாய் திருவார்
பெருமைச் சிற்ருமூரானே

9. விசைகொண் டிடுதே ருருள்போற்
கதிவாய் விழுவித்தெழு
விக்கும் பசையும் பரிஞ மமுமுண்
டுகளும் பருவித்
தருளென்ருய் நசையின் பகைவா
நடவுங் கமலநனிநன்
குடையாயெண் டிசைவெண் டுகிலாலாய்
சொரிபைம் பொழில் சூழ் சிற்ருமூரானே.

10. பாபங் கடியும் பதமா மலர்நின்
பதமே பதமேலுங்
கோபங் கடியுங் குளிர்கா யாமன்
கோவிந் தனையாள்வாய்
தாபங் கடியுந் தவிரா வருளா
லவிரோ திகள்சேருந்
தீபங் குடியாய் செல்வங்
குடிவாழ் சிற்ருமூரானே.

சிற்ருமூர் தருமதேவி ஊசல்

1. திருமகளும் நாமகளுமேவல் செய்யத்
தேவர்குழாம் வந்துமலர்சிந்திப் போற்ற
அருமுனிவ ராரியாங்கனை கள்சூழ
அரம்பைரும் விஞ்சையருய மாடப்பாட
முரசுபல பல்லியங்கள் முழங்கத் திங்கள்
முக்குடைக்கீழ் முதல்வனடி முடியிற் கொண்டு

மரகதமே வல்லியா ராடிருசல்
வாய்த்த சிற்றை சுந்தரியே யாடிருசல்

2. பூமாதும் நாமாதும் புகழ்ந்தே போற்றி
புனிதரெல்லா மலர்மாரி புகழ்ந்தே தூவ
மாமாது புகழ்ந்து தென்வைகை சூழ் மாதவரும்
மாதவத்து மங்கைமாரும்
தாமாகவே நிறைந்து செய செயன்னத்
தனம்மதி முக்குடைக் கீழ்த் தம்பிரானைத்
தேமாது முடிமீது வைத்துக் கொண்டு
சிற்றைவாழ் மரகதமே யாடிருசல்

3. மும்முனிவர் திருப்பரித்திக் குன்றில் வாழ்த்
திருப்பறம்பை கூனை முதலூரேயேத்தி
அம்முனிவர்க்க முதளித்த வைகை வாழ்த்தி
அருங்களந்தை ஆறணி மயிலாப்பூர்யாடி
விம்முலைக்குள் புளகமேழ் ஆடிருசல்
வீரபுரந்தன மசைய வாடிருசல்
செம்முக மண்டலத் தெம்மை யாடிருசல்
சிற்றைவாழ் மரகதமே யாடிருசல்

4. மாதவத்துக் கெல்லையில்லா முனிவரெல்லாம்
வழிநடந்து
யிளைப்பாற்று மனத்துயரந் தீர்த்து
ஆதரித்து வாகார மளித்து நாளும்
அருகரறந் தழைப்பித் தீராடிருசல்
பேதமற்றத் திருவறமே யாடிருசல்
பெருந்தவத் தோர் பெருந்தகையே யாடிருசல்
சீதமுற்ற பதிமுகத்தீ ராடிருசல்
சிற்றைவாழ் மரகதமே ராடிருசல்

5. முன்னாளிற்கரிகால சோழன் முன்னே
முதலனையசாந்தி முனியிறங் கலமுமிட்டு
அன்னாளே யெல்லைகண்டீ ராடிரூசல்
அருள்திருவா யுரைசெய்தீ ராடிரூசல்
பொன்னான திருவறமே யாடிரூசல்
புளகயிள முலையசைய வாடிரூசல்
தென்னாதென்னா வென்றே யளிகள் பாடச்
சிற்றைவாழ் மரகதமே யாடிரூசல்

6. அருட்சிந்தை யிளங்கொடிக ளாசுபாடி
அதன்முன்னும் சம்பந்தன் பாடல்கொண்டு
குறிச்செல்வன் குணபத்திர முனிவன் சிந்தைக்
குடிகொண்ட அப்பனறுங் கொண்டை வாழ்த்தி
மறுக்கொண் மயிலாப்பூர் வண்மைபாடி
வானவர்கள் போற்றிசெயும் வண்மைபாடி
திதிச் சங்கவெள்ளிமலை நிகராம் வைகை
நீதிவரை சுந்தரியே யாடிரூசல்.

7. குணவழகி மிகவுடையீ ராடிரூசல்
கூந்தலிளங் கமுகுடையீ ராடிரூசல்
இணைபிரியா மகவுடையீ ராடிரூசல்
எழுதரிய வடிவுடையீ ராடிரூசல்
மணமலிதன் தீபை நறுங்கொண்டை குன்றை
மகளந்தை தென்பறம்பை மயிலை வைகை
பண்குலவுந் திருநாடும் பாரும் போற்றப்
புதுமை வரசுந்தரியே ராடிரூசல்

8. கையில் வளையோலமிட ராடிரூசல்
கருணைவிழிதான் புரள வாடிரூசல்
பொய்யனைய யிடைதுவள வாடிரூசல்
புளகயிள முலையசைய வாடிரூசல்

செய்யமலர் மேல்நடந்த தேவராசர்
திருவறமும் திருநாடும் திகழவாழ்த்தி
வைகைமலை மீதுறைவீ ராடிரூசல்
வாய்த்த வரசுந்தரியே யாடிரூசல்.

9. அறுசமயநெறி நாலெட்டறம் வளரும்
அருள்காஞ்சி கருவிருத்தி யவனிகாக்கும்
குருமுனிவருடன் முனிவர் மூவர்காக்கும்
குறைவற நிழற்றிருப்பரித்திக் குன்றில்போற்றி
சிறுசுனையில் நீர்விளங்க சோதிகாட்டும்
திருவறமும் திருநாடும் திகழவாழ்த்தி
மரகதமே வல்லியற வாடிரூசல்
வாய்த்த வரசுந்தரியே யாடிரூசல்

10. முத்துமணலே பரப்பி வயிரத்தூணில்
முழுவயிரவுத் திரத்தால் கொடுங்கை சேர்த்து
வைத்த பவழக்காலில் புருஷராக
மணிக்கயிற்ருல் மரகதப்பூண் தொட்டிலேற்றிப்
பத்துவகைப் பொன்மணியும் பணிலமுத்தும்
பதினறுசீர் வகைமணியும் பண்பாய்பூணச்
சித்தர்மதி முகந்தன்மை யாடிரூசல்
சிறந்த சித்தை மரகதமே யாடிரூசல்

கலியாண வாழ்த்து

பல ஏட்டுச்சுவடிகளிலிருந்து தொகுக்கப்பட்ட கலியாண வாழ்த்து, ஊஞ்சல் பாடல், அல்லியரசாணிமாலை, தருமதேவி பேரில் சோபனமாலை, தஞ்சாவூர் வாழ்த்துகை முதலிய பாடல்களை ஆய்ந்து முறைப்படுத்தி 'கலியாண வாழ்த்து' என்னும் புத்தகமாக மு. சண்முகம்பிள்ளை அவர்கள் பதிப்பித்து ஜைன இளைஞர் மன்றம் அதனை வெளியிட்டுள்ளது. அவற்றில் சில பாடல்களிலிலும் சித்தாமூர் பற்றிய செய்தி காணப்படுகிறது

ஊஞ்சல் பாடற்பகுதியில் சித்தாமூர் நேமிநாதரை வாழ்த்திப் பாடுவதையும், பல்வேறு சமணத்தலங்களைக் குறிப்பிடுமிடத்தில் சித்தாமூர் குறிக்கப்படுவதையும் காணலாம்.

திருவுறையும் **சித்தைநகர்** நேமீசர்பாதம்
சிந்தைசெய்து தினம் பணிந்து தெளிந்து நன்றாய்
அருகர்தனைத் திருமுடிமேல் தரித்த மாது
அருகுளைங் கமுகு நிழல் அமர்ந்த தேவி
திருவடியைத் தினம்பணிந்து போற்றிசெய்து
செங்கமலக் பூம்பந்தால் எறிந்திட் டாட
அருகர்பதம் சிந்தைசெய்து ஆடிர் ஊஞ்சல்
அனைவோரும் மனங்குளிர ஆடவாரீர்.

(ஊஞ்சல்–ஆடவாரீர், பாடல், 9)

ஜினகிரியில் நறுங்கொண்டை **சித்தை** பூண்டி
சீர்கரந்தை மயிலையணி தீபங்குடியை வாழ்த்தி
....


(ஊஞ்சல்-ஆடவாரீர், பாடல், 10)

சின்கிரி **சித்தை** வீடைநகர்
சீரிளங் காடு தீபைநகர்
புனித சினலயந் தன்னில்வளர்
புண்ணியவதிக்குச் சோபனம்


(தருமதேவி சோபனமாலை, பாடல் 88)

சித்தநக ரில்வாழும் **சிம்மபுரி நாதரையும்**
முனிபத்திர தேவரையும் முன்வணங்கி நின்றளோ
அநந்தஜின தேவரையும் அடிவணங்கி நின்றளோ
ஆதிஜிநேஸ்வரரை அடிபணிந்து நின்றளோ
லஷ்மிஸேன் பட்டார்கரை லக்ஷ்மியும் பணிந்தாளோ.


(தஞ்சாவூர் வாழ்த்துகை, பாடல், 65)



சிம்மபுரிநாதர்





மலைநாதர்கோயில் : தர்மதேவி யக்ஷி




↑ தேர் மண்டபம்

↓ பார்சுவ நாதர் கோயில் மானஸ்தம்பம்





பார்சுவநாதர் கோயில் விமானம்



பார்சுவநாதர் கோயில் கோபுரம்



ஜினவாணி

எஸ். தன்யகுமார் பிரஸ், தி. நகர், சென்னை-600 017.